
# பொருளியல் நோக்கு

ஆகஸ்ட்
1976



வீடமைப்பு

மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அபிவிருத்தியை அறிமுகஞ் செய்தல்

பல்லாயிரக்கணக்கானோரின் வாழ்வைப் பாதிக்கும் பிரச்சினைகள் பற்றிய மாதாந்த தொடர் நிகழ்ச்சி


## 9. வேலையில்லாமை

ஆதாரம்:

நிவ் இண்டர்நஷனலிஸ்ட்




**1.** எந்த ஒரு நாட்டினதும் மிகப் பெறுமதி வாய்ந்த செல்வங்கள் அந்நாட்டு மக்களின் கடினமான விவேகமிக்க உழைப்பாகும். ஏழை உலகில் இச் செல்வம் பெருமளவு வேலையில்லாமை மூலம் வீணடிக்கப்படுகின்றது.



**2.** அபிவிருத்தியுறும் உலகில் வாழும் மனிதர்களில் சுமார் காற்பகுதியினர் தொழிலின்றியும்; தமக்கு, தம் குடும்பத்துக்கு, தம் நாட்டிற்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தைச் சம்பாதிக்க முடியாதவர்களாயுமுள்ளனர். அங்கே பிச்சைக் காசில்லை.



**3.** நகரில் வேலை தேடுவதற்காக வந்த திலிப் டாஸ் போன்ற நபர்களே அவர்கள். ''ஒரு வேலை கிடைத்துவிடும் என ஒவ்வொரு நாள் காலையிலும் நான் நினைப்பதுண்டு. ஆனால் தொழில் கிடைக்கப் போவதில்லை என்பது பற்றி ஒவ்வொரு இரவிலும் எனக்குத் தெரியும்'' என்கின்றனர்.



**4.** வேலையில்லாமை நிலவின் சுரண்டலும் நிலவும் ஏனெனில் சம்பளங்களை குறைவாகக் கொடுக்கலாம். தொழில் விடுபடும் ஒருவரின் வேலையை மகிழ்வுடன் பொறுப்பேற்றுக் கொள்ள ஆலைக்கு வெளியே பதின்மர் இருக்கும் போது சம்பளக் குறைவுபற்றி யாரும் முறையிடார்.



**5.** வேலையில்லாமைக்கு ஒரு முக்கிய காரணம் வேகமாக அதிகரிக்கும் சனத்தொகையாகும். இந்தியாவில் புதிதாகத் தொழில் தேடுவோர் தொகை தினமும் 6000 ஆல் அதிகரிக்கின்றது. 1984 அளவில் ஏழை நாடுகளில் மேலும் 30 கோடி மக்கள் வேலை தேடிக் கொண்டிருப்பர்.



**6.** மேலும் தொழிற்சாலைகளைக் கட்ட புதிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த தமது வயல்களை நீர்ப்பாசனம் செய்து கொள்ள பசளையிட சிறு விவசாயிகளுக்கு கடன் வழங்க அல்லது எல்லோருக்கும் கூடுதல் உற்பத்தி வேலைகளை வழங்க ஏழை நாடுகளிடம் பணம் பற்றுதுளது.



**7.** செல்வந்த உலகு தொழில்நுட்ப வியலை கூடுதலாகப் பயன்படுத்துகிறது. ஒரு புள்டோஸர் இயந்திரம் 500 ஆண்களின் பணியைச் செய்யக்கூடியது. அது இலாபமாயும், துரிதமாயும் பணியாற்றுகிறது. அதனல் 499 பேர் திடீரென வேலையிழக்கின்றனர்.



**8.** உற்பத்தித் துறையில் ஏழை நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் செல்வந்த நாடுகளில் விற்பனைக்கு வரவும் முன்பே வரிகள், தீர்வைகள் விதிக்கப்படுகின்றன. பச்சையான தோலுக்கு தீர்வையில்லை. ஆனல் அதனல் செய்யப்பட்ட பொருட்கள் தீர்வைக்குள்ளாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் நோக்கு

மலர் 2 இதழ் 5 ஆகஸ்ட் 1976

## பொருளடக்கம்

### சிறப்புக் கட்டுரைகள்

பிரேமதாச உடகம 23 கல்வியின் பாரம்பரியமற்ற வடிவங்கள்

30 கல்வித்துறையிலே காலனி ஆதிக்க முறையை ஒழுங்குபடுத்தல்

### தலைமைக் கட்டுரை

3 வீடமைப்பு

### நிரல்கள்

2 நிகழ்ச்சிக் குறிப்பேடு

20 வெளி நாட்டுச் செய்தி

22 விவசாயம்

அடுத்த இதழில்:

- பெண்களும் பொருளாதார அபிவிருத்தியும் — புதிய உலகில் பெண்களுக்குரிய இடமும் பொருளாதார அபிவிருத்தியில் அவர்களின் பங்கும், உரிமைகளும், விடுதலைப் பற்றிய விரிவான ஆய்வும்
- இயற்கை வளங்களாக காடுகள்
- வரட்சி விவசாயம் தொடர்பாக இந்தியாவின் புதிய வேலைத்திட்டம்

அட்டைப்படம்:

அனுரா விஜேவர்தன வரைந்தது. ''சதுட்ட'' சஞ்சிகையின் பிரதான ஓவியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

ஜூலை

1 பண வைப்பாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் வங்கி முறைசாராத நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தவும், ஒழுக்காற்றுப்படுத்தவும் வழிகோலும் நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டு மசோதா எனும் ஒரு மசோதா வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

ஆசிய மண்ணிலேயே முதன் முதலாக 1950 ஜனவரியில் கொழும்பில் நடைபெற்ற பொது நலவரசு நாடுகளின் மகாநாட்டிலிருந்து தோற்றம் பெற்ற கொழும்புத் திட்டம் மேற்படி திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்தது.

2 பிரிட்டனின் திறைசேரி வெளியிட்ட புள்ளிவிவரங்களின் படி வெளிநாட்டு மத்திய வங்கிகளின் 530 கோடி டலார் தயார் நிலைக் கடனிலிருந்து பெருமளவு பெறப்பட்ட போதிலும் ஜூன் மாதத்தில் பிரிட்டனின் தங்கம் அந்நிய நாணயம் ஆகியவற்றின் சேமிப்பு 11 கோடி 10 லட்சம் டாலரிலிருந்து 31 கோடி 20 லட்சம் டாலரால் வீழ்ச்சியுற்றது.

மேற்கு ஜெர்மனி மற்றுமொரு பிரமாண்ட சென்மதி நிலுவை மேலதிக மொன்றை மே மாதத்தில் சாதித்ததாக மத்திய வங்கி அறிவித்தது. மேற்படி நாட்டின் நடப்புக் கணக்கு (இறக்குமதி ஏற்றுமதி மற்றும் பார்வைக்குட்படாத சுற்றுலாத்துறை காப்புறுதி என்பன) ஏப்ரலில் 3 கோடி 10 லட்சம் ஜெர்மன் மார்க்குகளாக இருந்தது மே இல் 33 கோடி 10 லட்சம் ஜெர்மன் மார்க்குகளாக அதிகரித்தது.

இந்தியாவும் உகண்டாவும் தம்மிரு நாடுகளுக்கு மிடையில் ஆழ்ந்த விளைவுகளைத் தரக்கூடியதான பொருளாதார, தொழில்நுட்ப, விஞ்ஞான ஒத்துழைப்புக்கு வழிகோலும் "புரிந்து கொள்ளல் ஆவணம்" ஒன்றில் கைச்சாத்திட்டன. உகண்டாவில் சிறு, நடுத்தர கைத்தொழில்களை அமைப்பதில் ஒத்துழைப்பு, இயந்திரங்கள், உபகரணங்கள், தொழில்நுட்பப் பயிற்சி என்பவற்றை இந்தியா கொடுத்துதவல், உகண்டாவில் கூட்டு முயற்சிகளைத் தாபித்தல் என்பன மேற்படி ஆவணத்தில் அடங்கும் விடயங்களாகும்.

4 கியுபாவிலிருந்து 10 லட்சம் தொன் சீனியை நீண்டகால ஒப்பந்தமொன்றின் கீழ் பெறுவதற்கான விலை குறித்து ஜப்பான் கியுபாவுடன் இணக்கத்துக்கு வந்துள்ளதாக லண்டனில் சீனி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

5 5 கோடி டாலர் பெறுமதியான 18,000 தொன் ரப்பரை கொள்வனவு செய்வதற்கான ஐந்து ஒப்பந்தங்களில் சீன வர்த்தக தூதுக்குழு ஒன்று மலேஷிய ரப்பர் ஏற்றுமதியாளருடன் கைச்சாத்திட்டன. ஜூலை தொடங்கி வரும் இரு மாதங்களுக்குள் இத் தொகை இரப்பர் விநியோகிக்கப்பட்டுவிடும் என சீன தேசிய இரசாயன இறக்குமதி ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த மேற்படி தூதுக்குழு உறுப்பினர் ஒருவர் கூறினார்.

இலங்கையிலிருந்து கொக்கோவா ஏற்றுமதிக்கான சகல ஒப்பந்தங்களினதும் பதிவுகளை வர்த்தக அமைச்சின் விலைக் கமிட்டி தற்காலிகமாக இரத்து செய்தது.

7 மூன்றும் உலக நாடுகள் மத்தியில் விஞ்ஞான தொழில்நுட்பக் கொள்கைகளை இணைக்கவும் விருத்தியுறச் செய்யவும்கூட்டுச் சேரா இயக்கத்தில் மத்திய நிலையங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளுடன், ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் விஞ்ஞானிகளும், தொழில்நுட்ப வியலாளரும் கொழும்பில் தமது ஆறு நாள் கூட்டத்தை முடித்துக்கொண்டனர்.

மாவினதும் பாணினதும் விலை குறைக்கப்பட்டதால் ஏற்பட்ட இழப்பினை சரிப்படுத்துமுகமாக சிகரட், மது போன்ற அத்தியாவசியமற்ற பொருட்களின் மீதான வரிகள், தீர்வைகளை அதிகரிப்பதன் மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கான பல நடவடிக்கைகளை அரசாங்கம் அறிவித்தது. பாணினதும் மாவினதும் விலைகுறைப்பால் ஏற்படும் இழப்பு 29 கோடி ரூபாவாயிருக்கும். அதே வேளையில் புதிதாக எதிர்பார்க்கப்படும் வருமானம் 15 கோடி ரூபா அளவிலாகும்.

நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்துக்காக மக்கள் சீன குடியரசு இலங்கைக்கு 300,000 நன்னீர் மீன் குஞ்சுகளை அன்பளித்தது.

தகவல் துறையில் ஒத்துழைத்தல் குறித்து 60 கூட்டுச் சேரா நாடுகளிலிருந்து அமைச்சர்களும் பொது தொடர்பு சாதன பிரதானிகளும் "ஆழமிக்க" ஆலோசனைகளை புது டில்லியில் ஆரம்பித்தனர்.

11 கூட்டுறவு அடிப்படையில் அமைக்கப்பட்ட முதலாவது தீக்குச்சித் தொழிற்சாலை கலகெதரையில் கைத்தொழில் மந்திரியால் திறந்து வைக்கப்பட்டது.

வரட்சியினுல் பாதிக்கப்படும் மேற்கு ஐரோப்பிய நிலப் பரப்பு, தானியங்கள் உற்பத்தி செய்யப்படும் தென் அமெரிக்காவின் பிரதான பிரதேசங்கள் வரை பரவுவதாக அமெரிக்க அரசாங்க அறிக்கை யொன்று தெரிவித்தது.

11 தனது வரலாற்றின் இதற்கு முந்திய எந்த ஒரு முழு ஆண்டை விடவும் கூடுதலான பணத்தை இவ்வருடத்தின் முதல் ஆறுமாத காலப் பிரிவுக்குள்ளேயே உறுப்பு நாடுகளிடையே கடனுக வழங்கியுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டது. மொத்த கடன் தொகையின் பெறுமதி 491 கோடி விசேட கடன் பெறும் சலுகை அல்லது 560 கோடி டாலருக்கு சமனுகும். 1976 ன் முதலரையாண்டுக்குள் இந்நிதியை மிகக் கூடுதலாகப் பயன்படுத்தியது பிரிட்டனுகும். தற்போது நடைமுறையிலில்லாத "எண்ணெய் சலுகை" த் திட்டத்தின் கீழ் 100 கோடி விசேட கடன்பெறும் சலுகையை பெற்றதோடு வழமையான கடன் வசதிகளின் கீழ் 70 கோடி விசேட கடன் எனும் சலுகையையும் பெற்றது.

14 தான் ஏல விற்பனைக்காக முன்வைத்த 780,000 அவுன்ஸ் தங்கத்தையும் விற்பதில் சருவதேச நாணய நிதியம் வெற்றி கண்டது. ஒரு அவுன்ஸ் 122.05 டாலர் என்ற சாதாரண விலையில் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இலங்கையில் கரை கடந்த, ஆழ் கடல், கரையோர மீன்பிடிக் கைத்தொழிலுக்காக அரசாங்கம் உதவிமான்யங்களையும், வருமான வரிச் சலுகைகள் உட்பட சலுகைகளையும் அங்கீகரித்தது.

15 இலங்கை பெற்ரோலியம் கூட்டுத் தாபனம், செல் கம்பனியின் கப்பலுக்கும், விமானங்களுக்கும் எண்ணெய் வழங்கும் சேவையை தேசிய மயமாக்கியபோது அதன் சுவீகரித்த சொத்துக்களுக்கான நட்ட ஈடாக 380,000 ஸ்டெர்லிங் பவுண் (அந்நிய செலாவணிச் சான்றிதழ் சலுகை இன்றி 53 லட்சம் ரூபா) மற்றும் கம்பனியிடமிருந்து வரவேண்டிய வரித் தொகையை செலுத்துமுகமாக ரூபாக் கணக்கில் ஒரு தொகையையும் செல் கம்பனி பெறும் என கொழும்பில் அறிவிக்கப்பட்டது.


17 பாகிஸ்தான் தனது நாடெங்கிலுமுள்ள நெல் குத்தும், பருத்தி விதை நீக்கும், கோதுமை மாவு அரைக்கும் ஆலைச் சேவைகளனைத்தையும் தேசியமயமாக்கியது. பதுக்கல், கறுப்புச் சந்தை, விலையேற்றம் போன்றவைகளை அகற்றி நெல்லுக்கு நியாயவிலை உறுதிப்படுத்தல், ஆட்டா மாவு போன்றவற்றின் கலப்படத்தைத் தவிர்த்தல், கிராமிய பொருளாதாரத்திலிருந்து தரகர்களை அகற்றுதல் போன்றவற்றிற்காகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பிரதமர் பூட்டோ அறிவித்தார்.


22 நெல் சந்தைப்படுத்தும் சபை 400 தொன் சோளத்தினை ஏற்றுமதி செய்தது. நெற் சந்தைப்படுத்தும் சபையின் முதலாவது ஏற்றுமதி இதுவாகும். இதன் மூலம் 47 லட்சம் ரூபா வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

26 யூகோஸ்லாவியாவிலிருந்து தான் 10 கோடி டாலரைக் கடனுகப் பெற்றதாக உலக வங்கி அறிவித்தது. தவணையொன்றுக்கு 2 கோடி டாலர் வீதம் 1984 ஜூலை 28 ம் திகதி தொடங்கி ஐந்து தவணைகளில் திருப்பிச் செலுத்துவதற்கான உறுதிமொழியுடைய உலக வங்கியின் 8.1% சதவீத வங்கி நோட்டுகளை கொள்வனவு செய்ததன் மூலம் யூகோஸ்லாவிய மத்திய வங்கி இக்கடன் தொகையை வழங்கியது. யூகோஸ்லாவியாவிடம் உலக வங்கி கடன் பெற்றது இது இரண்டாவது முறையாகும். முதன்முறை வாங்கிய 5 கோடி டாலரும் 1975 ல் முற்றாக திருப்பிச் செலுத்தப்பட்டது. அபிவிருத்தியுறும் நாடுகளுக்கு கடன் வழங்குவதற்காக இத்தொகையை உலக வங்கி பயன்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தொழில் நுட்பரீதியில் எவ்வித மாற்றங்களுக்கு முட்படாத பாரம்பரிய இலட்சணங்களோடு கமிரோன் நாட்டில் அமைந்துள்ள ஆதிவாசிகளின் இல்லங்களையே மேலே காண்கின்றீர்கள். இடப் பக்கத்தில் காணப்படுவது அமெரிக்காவின் அரிஸோனு ராஜ்யத்தில் கேந்திர கணித கலையம்சம் நிரம்பியதாக அமைக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டமொன்றில் ஆகாயத்திலிருந்து எடுத்த படத்தின் தோற்றமாகும். இவ்விரு படங்களும், மனித இனம் தனது கற்ருடலுக்கும் காலநிலை மாற்றங்களுக்கும் ஏற்ப எவ்விதம் தாம் வசிப்பதற்கான இல்லங்களை அமைக்கப் பழகிக் கொள்கின்றது என்பதை எடுத்து விளக்குகின்றது மேலும் அபிவிருத்தியுற்ற பொருளாதார நாடுகள் அமைத்துக் கொள்ளும் வீடுகளிக் தோற்றத்தையும் அபிவிருத்தி குன்றிய நாடுகளின் வீடமைப்பிலுள்ள வேறுபாட்டையும் அது தெளிவுபடுத்துகிறது.

# வீடமைப்பு

ஐ.ந. மேற்கொண்டு உலக வீடமைப்பு மதிப்பீட்டின்படி நூறு கோடிக்கு மேற்பட்ட மக்கள் பொருத்தமற்ற வீடுகளில் வாலும் அதேவேளையில் இந்நிலை எதிர்காலத்தில் மோசமடையவும் இடமுண்டு. ஏழை மக்களுக்கான வீடமைப்பில் உள்ள பிரச்சினை சுகாதார வசதிகளும் போதிய இடவசதியுமாகும். அபிவிருத்தியுற்ற நாடுகளை விடவும் அபிவிருத்தியுறும் நாடுகளில் 10 லட்சத்துக்கு மேற்பட்டோரைக் கொண்ட நகரங்கள் ஏற்படும் இத் தசாப்தத்தில் இப் பிரச்சினை மேலும் உக்கிரமடைகின்றது.

நகரங்களுக்கு குடிபெயர்வோர் வருகையுடன் சேரிகளும், பலாத்கார குடியேற்றங்களும் அபிவிருத்தியுறும் நாடுகளின் இலட்சனமாக அமைந்துள்ளது. அபிலிருத்தியுறும் நாடுகள் பற்றி அதிகம் கவனம் செலுலுதும் இலங்கையில் வீடமைப்பு பற்றிய விலைமைகள் அடுத்து வரும் பக்கங்களில் விவரிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வீடமைப்பு

### அறிமுகம்

உணவு, உடை போலவே வீடமைப்பும், மனித அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். இலங்கைக்கும் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைப் போன்று வீடமைப்புப் பிரச்சினை உண்டு. இப் பிரச்சினைக்கான தீர்வு, உள்நாட்டு ரீதியாகவும், வெளிநாட்டு ரீதியாகவும் உள்ள வளங்கள் பற்றாக்குறை காரணமாகவும், அதி உயர்ந்த வேலை வாய்ப்பின்மை காரணமாகவும் நிலவும் சூழ்நிலைகளோடு ஒத்துப் போகக் கூடியதாக இருக்க வேண்டும்.

எனவே, இவ் விடயத்தின் குறிக்கோள்கள் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்.

(1) பண்பியல் முறையிலும் அளவறி முறையிலும் இலங்கையின் வீடமைப்புப் பிரச்சினையை இனங் காணுதல்.

(2) இப் பிரச்சினை நிலவுவதற்கான சாத்திய பூர்வமான காரணங்களைக் கண்டறிதல்.

(3) இலங்கை வீடமைப்புக் கொள்கையை மீள ஆராய்தல்.

(4) தற்போதைய பொருளாதார சூழ்நிலைகளுக்குள் காணப்படும் கணக்கீட்டு கலாசார கோரிக்கைகளை கருத்துக்கெடுத்து இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அதிக யதார்த்த பூர்வமான அணுகுமுறையை எடுத்துரைத்தல்.

### வீடமைப்புப் பிரச்சினை

அண்மைக் காலம் வரை பொது மக்கள் மட்டுமன்றி நிபுணர்கள் கூட வீடமைப்பை, வீடமைப்பு அலகாகவே எண்ணி வந்துள்ளனர். எனினும், இக் கருத்து இப்போது மாறி வீடமைப்பு ஒரு வசிப்பிட சூழல் என மிக விசாலமாக வரைவிலக்கணம் கூறப்படுகிறது. எனவே, வீடமைப்பு வசிப்பிட அலகுகளை மட்டுமல்லாது, பொழுதுபோக்கு வசதிகள், சமூக வர்த்தக வசதிகள் ஆகியவற்றைக் கொண்ட ஆதார வசதிகளையும் உள்ளடக்குகிறது. மேற்கூறியதை அடிப்படையாகக் கொண்டு இப்போது 'வீடமைப்புப் பிரச்சினை' யைக், குடிஜனங்களின் கலாசார பின்னணிக்கும், சமூக, பொருளாதார அந்தஸ்துக்கும் தொடர்பான தெரிவு செய்யப்பட்ட தரத் தொகுதிகளின் ஒத்துப்பாடின்மை காரணமாக விளையும் சமூகப் பிரச்சினைகளோடு சேர்ந்த கொடுக்கப்பட்ட தரத் தொகுதிகளை அடியொற்றிய சில தொகை உருக்களை வைத்து அளவிடப்படும் ஒரு இயற்கைப் பிரச்சினை என்று வரைவிலக்கணம் கூறலாம்!

எனவே, சுருக்கமாக ஒரு தனியான உருப்பாட்டு ரீதியில் இப் பிரச்சினையை இனங் காணுதல், பெரும்பான்மையான மக்களுக்கு ஏற்றுக்கொள்ளத் தக்கதான சமூக, பொருளாதார, கலாசார தரத்தொகுதிகளைத் தெரிந்தெடுப்பதில் தங்கியிருக்கிறதேயல்லாமல் இதையொரு இனத் தொகையாகக் கொண்டு இப் பிரச்சினையின் சமூகக் கூறை தவிர்க்கும் திட்டமிடுவோரில் அல்ல.

மேலுள்ள கோட்பாட்டின் அடிப்படையில் இப் பிரச்சினையை சில அளவறி உருக்களில் மதிப்பீடு செய்வதில் இலங்கையிலுள்ள தோட்டத்துறைக்கும், கிராமியத் துறைக்கும் நகரத்துறைக்குமான யதார்த்தபூர்வ இனத் தொகைகளை அமைக்கும் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அட்டவணை 1

**ஸ்ரீ லங்காவில் வீடமைப்புத் தேவைகள் 1976 — 2001**

| விவரம் | நகரம் | | | கிராமம் | | | ஸ்ரீ லங்கா (மொத்தம்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (23%) 1976 | (26%) 1986 | (30%) 2001 | 1976 | 1986 | 2001 | 1976 | 1986 | 2001 |
| 1. (அ) சனத்தொகை (ஆயிரத்தில்) — | 3,174 | 4,164 | 5,760 | 10,626 | 11,851 | 13,230 | 13,800 | 16,015 | 18,900 |
| (ஆ) குடும்பத்தார் தொகை ... | 6.2 | 6.0 | 5.6 | 5.6 | 5.55 | 5.5 | 5.73 | 5.66 | 5.53 |
| (இ) வீடமைப்புத் தேவைகள் = அ/ஆ (ஆயிரத்தில்) ... | 512 | 694 | 1013 | 1898 | 2135 | 2405 | 2410 | 2829 | 3418 |
| 2. தற்போதைய வீடுகள் போக மீதம் ('000) ... ... நகரம்: நிலையானவை கிராமம்: நிலை + பாதி நிலை | 314 | 314 | 314 | 2100 | 2100 | 2414 | 2414 | 2414 | 2414 |
| 3. மீதத் தேவை ('000) ... | 198 | 380 | 699 | –202 | 35 | 305 | –4 | 415 | 1004 |
| 4. வழக்கிலற்ற வீடுகளைச் சேர்த்து ('000) நகரம்: நிலை: 50 வருட வயது கிராமம்: நிலை 50 வருடம் பாதிநிலை 30 | 46 | 82 | 136 | 394 | 456 | 1533 | 440 | 538 | 1669 |
| 5. முழுத் தேவை ('000) ... | 244 | 462 | 835 | 192 | 491 | 1838 | 436 | 953 | 2673 |
| 6. அமைப்பு வீதாசாரம் 1976 - 2001 வருடாந்த தேவை தலா 1000 க்கு வீதம் ... | | 33,400 | | | 73,500 | | | 106,900 | |
| 7. 1963-1971 வரை வீதம் நகர்: நிலை. கிராமம்: நிலை + பாதிநிலை தலா 1000 க்கு ... | | (3.16) | | | (7.53) | | | (6.62) | |
| 8. குறுக்கவேண்டிய இடைவெளி வருடாந்தம் - 1000 பேருக்கு... | | 4.32 | | | -0.37 | | | -0.06 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.1 நகரப்புற வீடமைப்புப் பிரச்சினை

இலங்கையிலுள்ள நகரப்புற வீடமைப்பில் முழுமையான பார்வையை செலுத்தினுல், அது கீழ்க்கண்ட நியாயமான இனத்தொகைகளை உள்ளடக்கியிருப்பதைக் காணலாம்:—

(1) வீட்டுக்கோள் ஒன்றின் உடைமையாக்கப்பட்ட வீடமைப்பு அலகு.

(2) ஐம்பது வருடங்களுக்கு குறைவான, பழமையான நிரந்தர வீடுகளின் ஏற்றுக்கோள்.

(3) மூன்று பேருக்கு அதிகமாக வசிக்க முடியாத ஒரு வசிப்பிட அறையின் சராசரி வசிப்பு விகிதாசாரம்.

(4) குழாய் மூலம் கழிவகற்றலும், எடுத்துச் செல்லக்கூடிய நீர் விநியோகமும்.

(5) அடிப்படை சமுதாய, வர்த்தக, பொழுது போக்கு வசதிகளின வழங்கல்.

1971 ன் வீடமைப்பு மதிப்பீடு, நகரப்புற குடியிருப்பாளரில் 90% விகிதமானேர் தனித்தனியான விடமைப்பு அலகுகளில் வசித்தார்களென்றும், எஞ்சிய 10% விகிதத்தினர் இரண்டு அல்லது மூன்று குடியிருப்பாளர்களாக ஒரு வீட்டில் இருந்தார்கள் என்றும் எடுத்துக் காட்டியது. 5% விகிதமானேர் பிறிதான வரி மதிப்பீட்டு எண்ணில்லாத ஒட்டு வீடுகளில் வாழ்ந்தார்கள் என்றும், சகல வீடமைப்பு அலகுகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தரத்தில் இருந்தனவென்றும் வைத்துக் கொண்டால் விருப்பில்லா நெரிசலைத் தவிர்ப்பதற்கு தற்போதைய வீட்டுத் தொகை 5% விகிதத்தால் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதை இது குறிக்கிறது.

இலங்கையின் குடிசனத்தொகை 1976 ன் மதிப்பீட்டின்படி ஒரு கோடியே முப்பத்தெட்டு லட்சமாகும். இது 2001 ல் 1,89 லட்சமாக வளர்ச்சியடையும். இம் மதிப்பீட்டில் நகரக் குடிசனத் தொகை 1976ன் 23% விகிதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2001ல் 30 சதவிகிதமாக அதிகரிக்கலாம். இது நகரப்புறக் குடிசனத் தொகையை 1976 ல் 3,174,000 ஆகவும் அது வளர்ச்சியடைகையில் 2001ல் 5,760,000ஆகவும் ஆக்கும். குடியிருப்புக் கொள்ளளவு 1976ல் 6.2 ஆகவும், ''குடியிருப்புக் கொள்ளளவு'' முறையை உபயோகிக்கும் போது 2001 ல் 5.6 ஆக மெதுவாகக் குறையும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. மேற் குறிப்பிட்டுள்ள தரவின் அடிப்படையில் இலங்கையின் நகரப்புற வீடமைப்புத் தேவைகள் 1976 ல் 5,12,000 லிருந்து 2001 ல் 10,13,000 ஆக அதிகரிக்கும். தற்போதைய உபயோகிக்கக் கூடிய தொகையையும் பழைய நிர்மாண விகிதத்தையும் கருத்துக்கெடுத்துக் கொண்டால், நகரப்புற வீடமைப்புப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டுமாயின் 1976 க்கும் 2001 க்கு மிடையில் வீடமைப்பு நிர்மாணம் இரட்டிக்கப்பட வேண்டும் என்று தோன்றுகிறது. (விபரங்களுக்கு அட்டவணை 1 ஐப் பார்க்க)

மேலும் 1971 ன் குடிசன மதிப்பீடு, குடியிருப்பாளர்களில் 41.8% விகிதமானேர் வசிப்பிட வசதியான அறை யொன்றில் 3 பேருக்கதிகமானேர் வசிக்கக் கூடிய வசிப்பியல் விகிதத்தைக் கொண்டிருந்தார்கள் என்று எடுத்துக் காட்டியது. நிலவும் தொகையில் சுமார் அரைவாசிப் பங்கின் அறைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டிய தேவையை இது சுட்டுகிறது.

நகரப்புறக் குடியிருப்பாளர்களில் 45.3 விகிதமானேருக்கே குழாய் நீர் வசதியுண்டு. அதே நேரத்தில் 19% விகிதமானேருக்கு கழுவியகற்றும் முறை, நீர்மூடு முறை, வாளி, குளி முறை போன்ற எந்தவித மலசல கழிவு வசதியும் கிடையாது.

1971 ன் குடிசன மதிப்பீடு, வீடுகளில் 63.1% விகிதமானவை வாடகை வீடுகள் என்று காட்டியுள்ளது. இவை பிரதானமாக சிறு மனைகளாகும். இது குடிசனத் தொகையின் மூன்றில் இரண்டு பகுதியினர், சொந்த வீடுகளில் உறையும் மூன்றில் ஒரு பகுதியினரில் இருந்து சமூக ரீதியாக வேறுபட்டுள்ளதைக் காட்டுகிறது. ஆனல், இலட்சியமான ஒரு அரசெனின், அங்கு ஒவ்வொரு குடியிருப்பாளனும் ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரனுக விருப்பான்.

நகரப்புறத்துறையில் உள்ள சேரிகளிலும், குப்பங்களிலும் எழும் சமூகப் பிரச்சினைகளின் மூலம் சமூக, வர்த்தக, பொழுது போக்கு வசதிக் குறைப்பாடுகள் தெளிவாக பிரதிபலிக்கப்படுகின்றன. இவ் வசதிகளை ஒருவர் உள்ளீட்டு வழிப்படு சுட்டிகள் மூலம் அளந்தறிய முடியாது. ஆனல், கல்வி மட்டங்கள், இளமைக் கோளாறுகள், கொலை விகிதங்கள் போன்ற விளைவு வழிப்பாட்டுச் சுட்டிகளின் இடனுய் அளந்தறியலாம். இவை நகரப்புறக் குடிசனத்தின் தாழ்த்தப்பட்ட பகுதியில் சமூகப் பிரிவினையைப் பிரதிபலிக்கின்றன.

பண்பறி வழியில் நகரப்புற வீடமைப்புப் பிரச்சினை குப்பங்கள், சேரிகள், சமூகப் பிரச்சினைகள், பாகுபாடுகள் போன்றவற்றின் பிரச்சினையாகும். (குப்ப வாழ்க்கை விபரத்திற்கு அடைப்பு 1 ஐயும், சேரி வாழ்க்கை விபரத்திற்கு அடைப்பு 2 ஐயும், சமூகப் பாகுபாட்டு ஆய்வுக்கும், வீடமைப்பின் மூலம் தொகை யீட்டினை எப்படி அறியலாம் என்பதற்கும் அடைப்பு 3 ஐயும் பார்க்க.)

## 2.2. கிராமிய வீடமைப்புப் பிரச்சினை

சமூக, பொருளாதார அந்தஸ்து காரணமாகவும், மக்களின் கலாசார பின்னணி காரணமாகவும், அவ்வத் துறைகளில் சுருங்கும் உருப்பாட்டு நிலை காரணமாகவும் நகரப்புற வீடமைப்பு சூழ்நிலையை விட முற்றும் பிறிதான சூழ்நிலையில் வைத்து கிராமிய வீடமைப்பு ஆராயப்பட வேண்டும். எனவே, இதற்குப் பொருந்தக்கூடிய இனத் தொகையீடு முற்றும் வித்தியாசமான தாகும். பொருந்தக்கூடிய இனத் தொகைத் தொகுதிகள் கீழ்க் கண்டவாறு இருக்கலாம்:—

(1) ஒவ்வொரு குடியிருப்பாளரினுலும் உடைமை கொள்ளப்படும் ஒரு வீடு.

(2) (அ) 50 வருடத்துக்குக் குறைந்த பழைமையான நிரந்தர வீடுகளை ஏற்றுக் கொள்ளுதல்.

(ஆ) 30 வருடங்களுக்குக் குறைந்த பழைமையான உப நிரந்தர வீடுகளை ஏற்றுக் கொள்ளுதல்.

(3) கிராமப் பிரதேசங்களிலுள்ள அடர்த்திக் குறைவு காரணமாக நீர் விநியோகம், கிணறுகளில் இருந்தும், குளங்களிலிருந்தும், அருவிகளிலிருந்தும் மேற் கொள்ளப்படலாம்.

(4) மீண்டும் அடர்த்திக் குறைவு காரணமாக சில எளிமையான முறையிலான கழிவு அகற்றல் ஏற்றுக் கொள்ளப்படலாம். சீனர்கள் மலசலக் கழிவுகளை வயல்களுக்கு உரமாக பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2 **ஸ்ரீ லங்காவில் கட்டட அமைப்புக்கு அவசியமான முதலீடு 1976 — 2001**

| விவரம் | ஸ்ரீ லங்கா | | | மொத்தம் | மேற்குப் பிரதேசம் | | | மொத்தம் | கொழும்பு மா நகரம் மொத்த (நி) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நகர் | கிராமம் | | | நகர் | கிராமம் | | | |
| | நி. | நி. | பா.நி. | | நி. | நி. | பா.நி. | | |
| 1. வருடாந்தம் தலா உறுப்பு களாகத் தேவைகளின் தொகையளவு ... iii 1, iii 2, iii 3. | 33,400 | 22,785 | 50,715 | 106,900 | 16,280 | 2876 | 6404 | 25,560 | 5223 |
| 2. செலவுகள் | | | | | | | | | |
| (அ) நிலையாக வருடாந்தம் தலா அலகுக்கு ரூ. 17,500 மிலியனில் (1975 விலைகள்) ... | 584.5 | 398.7 | — | 983.2 | 284.9 | 50.3 | — | 335.2 | 91.4 |
| (ஆ) பாதிநிலை ரூ. 6,800 மிலியன் (1975 விலைகள்) ... ... | — | — | 344.9 | 344.9 | — | — | 43.6 | 43.6 | — |
| (இ) மொத்தம் (அ) (ஆ) ... | 584.5 | 398.7 | 344.9 | 1328.1 | 284.9 | 50.3 | 43.6 | 378.8 | 91.4 |
| ஜி. என். பி. 3. மொ. உ. உ. யில் அவன்% படி முதலீட்டு தேவை (1975 விலைகள்) ... ... | 2.69 | 1.84 | 1.59 | 6.12 | 1.31 | 0.23 | 0.20 | 1.74 | 0.42 |
| 4. கடந்த கால முதலீட்டின் அடிப்படையில் 1976 - 2001 க்கு எதிர்வுகூறல் 1975 விலைகள் மிலியனில் | | | | | | | | | |
| (அ) நிலையானது ரூ. 17500 அலகு | 241.0 | 414.0 | | 655.0 | | | | | |
| (ஆ) பாதிநிலை ரூ. 5000 அலகு | 52.5 | 332.5 | | 385.0 | | | | | |
| (இ) தற்காலிகம் ரூ. 500 அலகு | 2.4 | 6.3 | | 8.7 | | | | | |
| (ஈ) முழுதும் அ+ஆ+இ. | 295.9 | 752.8 | | 1048.7 | | | | | |
| ஜி. என். பி. 5. (இ) மொ. உ. உ. யில் அவன் % படி 1975 விலைகளில் | 1.37 | 3.46 | | 4.83 | | | | | |
| 6. 1975 விலைகளில் மொ. தே. உ. யில் அவன் % படி மீதற் தேவை | + 1.32 | −0.03 | | +1.29 | | | | | |

நி. = நிலையான கட்டடங்கள்
பா.நி = பாதி நிலையானவை

தரவு கிட்டவில்லை: தேசிய சராசரியைப் பயன்படுத்தல் பிழையான முடிவுக்கு இட்டுச் செல்லும் பிரதேசத்துக்கும், கொழும்பு மாநகருக்கும் உரிய தரவை குடிசன மதிப்பு புள்ளிவிவர திணைக்களம் 1971 தரவுகளைக் கொண்டு செய்த விசேட ஆய்விலிருந்து பெறலாம்.

ஆதாரம்: சிஎம்பி குழுக் கணிப்புக்களும் எதிர்வுகளும்

படுத்துவதை கருத்துக் கெடுத்துக் கொண்டால் இதற்காக சுற்றவரவுள்ள காடுகளை உபயோகிப்பதும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு முறையாகலாம்.

(5) கிராமப் பிரதேசங்களில் நகரப் புறங்களிலுள்ளதுபோல அதிகளவிலான வாழ்க்கை அடர்த்தித் தாக்கம் இல்லாதிருப்பதினால் சமூக, வர்த்தக, பொழுது போக்கு வசதிகள் மிக எளிமையாகவும், அவை கிராமங்களில் மட்டும் அமைக்கப்பட்டவையாயும் இருக்கலாம்.

1971 ன் வீடமைப்பு மதிப்பீட்டின் மேற்கூறப்பட்ட இனத் தொகைகளையும், தரவையும் அடியொற்றிப் பார்க்குமிடத்தில், ஒரு குடியிருப்பாளருக்கு மேலாக எந்த வீட்டிலும் இல்லாதிருப்பதைக் காணலாம்.

உப நிரந்தர வீடமைப்பை ஏற்றுக் கொள்வதாயின் 1976 ல் தேக்கத்திற்குப் பதிலாக மேலதிகம் இருப்பதைக் காணலாம். 1976 ல் 1,06,26,000 ஆய் இருக்கும் குடிசனப் பெருக்கம் 2001 ல் 1,32,3000 ஆக உயரும் போது அதற்கிணையான குடிமனை அளவு 1976 ல் 5.6 விருந்து 2001 ல் 5.5. ஆகும் போது தற்போதைய நிருமாண வீதம் அதிகப்படியானதாகக் காணப்படும். (விபரங்களுக்கு அட்டவணை 1 ஐப் பார்க்க).

கிராமியத் துறைக்கு வசிக்கக் கூடிய ஒரு அறைக்கு 3 பேர் என்ற இனத் தொகையைக் கருத்துக்கெடுத்துக் கொண்டாலும் 34.4 சதவிகித வீடமைப்பு அலகுகளே நெரிசல் நிறைந்தவையாயிருக்கும். கிராமியத் துறையில் வாழ்க்கை வீட்டுக்கு வெளியானதாய் இருப்பதாலும், ஒருவருடைய உடைமைகளை பாதுகாப்பதற்கு மட்டும் அறை ஒன்று தேவை என்று கருதப்படுவதாலும் இவ்வினத்தொகை அர்த்தமற்றதாயுள்ளது. எனவே, இங்கு வசிப்புக்குகந்தவொரு அறை 4 அல்லது 5 நபர்கள் வாழ்வதற்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்கும்.

1971 ன் மதிப்பீட்டிலிருந்து நீர் விநியோகத்தைப் பொறுத்த மட்டில் கிராமியத் துறையில் பாரதூரமான பிரச்சினை எதுவும் இருப்பதாக தோன்றவில்லை. ஏனெனில், 93 சத விகிதத்துக்கு அதிகமானோர் தமது நீரை வரையறுக்கப்பட்ட இனத் தொகைகளுக்குள் பெறுகின்றனர்.

41.5 விகித கிராமக் குடியிருப்பாளர்களுக்கு மலசலகூட வசதிகள் இல்லாதிருந்தபோதிலும், சூழவுள்ள காட்டினை அவர்கள் உபயோகிப்பதை ஏற்றுக்கொண்டால், அது சம்பந்தமான பிரச்சினையே அங்கு கிடையாது. ஏனெனில், அங்கு ஆலோசனை கூறப்பட்ட இனத் தொகை, மக்கள் வழக்கத்தில் கொண்ட ஒன்றாகும். அப்படியில்லையென்று, அவர்கள் ஒரு மலசலகூட வசதியை விரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் ஒரு குழி மலசலகூடம் அவர்களுக்குப் போதுமானதாய் இருக்கும்.

**2.3. தோட்டதுறை வீடமைப்பில் சில உண்மைகளும், தொகையினங்களும்**

தோட்டத்துறை வீடமைப்பு அண்மைக் காலங்களிலேயே முன்னணிக்கு வந்துள்ளது. இது சம்பந்தமாக விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பல அறிக்கைகளும் எழுதப்பட்டுள்ளன. எனினும், விசாலமாக ஆராயுமிடத்து, தோட்ட வீடமைப்பின் உருப்பாட்டுக் கொள்கை ஒரு கிராமிய அமைப்பில் நகரப்புற குப்பமொன்றின் மாதிரியை ஒத்ததாகக் காணப்படும். சராசரி வதிவாற்றல் ஒரு குடியிருப்புக்கு ஒரு வீடமைப்பு அலகாகும். அதே நேரத்தில், 54% குடியிருப்பாளர்களின் வதிவாற்றல் விகிதம் வசிக்கக்கூடிய ஒரு அறையில் 3 நபர்களுக்கு மேற்பட்டதாகும். தோட்டத்து லயத்தில் ஒரு வீட்டிற்கு ஒரு அறையே இருப்பதினல் இது எதிர்பார்க்கக் கூடிய தொன்றே.

அனேகமான தோட்டங்களில் போதியளவு நீர் விநியோகம் இருப்பதினல் நீர் விநியோகப் பிரச்சினை அங்கு பாரதூரமாக இல்லை. மறு பக்கத்தில், மலசல கழிவு வசதிகள் அங்கு கிராமியத் துறையை விட சிறப்பாயுள்ளது. 13 சதவிகிதமான குடும்பங்களுக்கே அங்கு மலசலகூட வசதிகள் இல்லை. (தோட்ட வீடமைப்பின் தொகையெண் ரீதியான விபரத்திற்கு 3 வது அடைப்பைப் பார்க்க.)

**2.4. இலங்கையின் வீடமைப்புப் பிரச்சினையில் ஒரு முழு மட்டப் பார்வை**

கீழ்க்கண்ட உண்மைகள் பரவலான ஒரு முடிவுக்கு கீழ்க்கண்டவாறு இட்டுச் செல்கின்றன:

(1) இலங்கையின் வீடமைப்புப் பிரச்சினை பிரதானமாக நகரப் பாங்கான ஒன்ருகும். உருப்பாட்டு நோக்கில் சேரிகளாகவும், குப்பங்களாகவும், அவை பிரதிபலிக்கப்படுவதுடன், சமூக, பொருளாதார நோக்கில் ஏற்றத் தாழ்வுகளாகவும் அவை எடுத்துக் காட்டப்படுகின்றன.

(2) பொதுவாகக் கூறப்படுவது போல் கிராமப்புற வீடமைப்புப் பிரச்சினை பாரதூரமான தொன்றல்ல. உண்மையில் தோட்டத்துறை வீடமைப்பில் படுமோசமான தொன்ருகும்.

(3) வரையறுக்கப்பட்ட இனத் தொகைகளை ஏற்றுக் கொண்டு, 1976 க்கும் 2001 க்குமிடையில், குறிப்பிடத்தக்க நிறைவேற்று முயற்சி மேற்கொள்ளப்பட்டால், நகரப்புற வீடமைப்பின் மீதான முறையீடு இரட்டிக்கப்படவேண்டும். அதே நேரத்தில், கிராமப்புற வீடமைப்பு பாரம்பரிய கிராமிய வீட்டு அபிவிருத்திக் கோட்பாட்டுள் வழிப்படுத்தப்பட்டால் அது நிறைவானதாயிருக்கும். (அட்டவணை 1 ல் உள்ள தொகையெண்மதிப்பீட்டை அடியொற்றியமுதலீட்டுவிபரங்களுக்கு அட்டவணை 2 ஐப் பார்க்க.) சேரி அபிவிருத்தித் திட்டத்திலும் பார்க்க, சேரி ஒழிப்புத் திட்டத்தை அடியொற்றியிருப்பதினல் நகரப்புறத்துறைக்கான எண்கள் அதிகமானவையாயுள்ளன. கிராமத்துறையோடு விசாலமாக வகைப்படுத்தப்பட்ட தோட்டத்துறைக்கான வரையறுக்கப்பட்ட எண்கள் மதிப்பீடு செய்யப்படவில்லை.

**3.0. இலங்கையின் வீடமைப்புப் பிரச்சினைக்கான நேர்தகவுக் காரணங்கள்**

வீடமைப்புப் பிரச்சினை உடனடியாகத் தோன்றும் ஒன்றல்ல. இது நீண்ட காலவரையில் உருவாகிறது. எனவே, இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படவேண்டுமாயின் முதற்கண் இப் பிரச்சினை உண்டாவதற்கான காரணங்களை ஆராய்வதும் இத்தகவலை ஒரு சாதகபூர்வமான எதிர்கால வீடமைப்பு கொள்கையை உருவாக்குதற்கு உபயோகிப்பதும் அவசியமாகும். இப் பிரச்சினையை மேல் மட்டமாக பார்க்கும் போது வெளிப்படையான காரணம், ஒரு நுகர்வோனுக்கு வீடமைப்பில் உள்ள யதார்த்த செலவினத்துக்கும், அதற்காக பணம் செலவிடுவதற்கு அவனுக்கு இருக்கும் ஆற்றலுக்கு மிடையிலான பெரிய இடைவெளியாக காணப்படும். இதுவே மூலக் காரணமாக இல்லாதிருக்கலாம். ஆனல், அதிக அடிப்படைக் காரணங்களின் தாக்கமாக இருக்கலாம். எனினும், இதை ஒரு ஆரம்ப நிலையாக உபயோகித்து, எதிர்கால வீடமைப்புக் கொள்கையை உருவாக்கும் ஒரு அடிப்படையை ஏற்படுத்தி இலங்கையின் வீடமைப்புப் பிரச்சினைக்கான மூல காரணத்தை இனங் காண்பதற்கு முயல்வோமாக!

**3.1. வீடமைப்புக்கான செலவு நன்மை அனுகல்**

ஒரு நுகர்வோனுக்கான யதார்த்த வீடமைப்புச் செலவு கீழ்க்கண்டவற்றைக் கொண்டுள்ளது:

(1) வீட்டு நிலச் செலவுகளைத் திருப்பிச் செலுத்துதல்.

(2) நிருமாணச் செலவுகளை திருப்பிச் செலுத்துதல்.

(3) உள்ளூராட்சி அதிகாரச் சபை வரிகள் மூலம் வீடமைப்புக்கான கொடுப்பனவுகள்.

(4) பராமரிப்புச் செலவுகள்.

(5) அதே நேரத்தில் ஒருவன் வீடமைப்பினுல் பெறும் நன்மைகள் அவன் அதற்காகச் செலுத்தக்கூடிய தொகையினுல் அல்லது அவனது வீடமைப்புக்கான கொடுப்பனவு ஆற்றலினுல் பிரதிபலிக்கப்படுகின்றன. ஒரு வீட்டைப் பொறுத்தமட்டில் ஒரு நுகர்வோனின் விருப்புக்கள் அவனது கலாசாரப் பின்னணியிலும் அவனது சமூக, பொருளாதார அந்தஸ்திலும் தங்கியுள்ளன. எனவே அவனது யதார்த்த செலவுகளும் இவ் வடிப்படை மாறிகளில் தங்கியுள்ளன.

மறு புறத்தில் ஒரு நுகர்வோன் அவனது சமூக, பொருளாதார அந்தஸ்து, குடும்ப உறுப்பினர் அளவு போன்ற வேறு உருப்பாட்டுக் காரணிகள், வீட்டு அமைவிடம், வீட்டின் அளவு ஆகிய வற்றினைப் பொறுத்தே அவனது வீடமைப்புக்காக அவன் கொடுப்பனவு செய்ய தயாராகின்ருன்.

பெரும்பாலும் ஒரு நுகர்வோன் விரும்பும் செலவு, கீழ்மட்ட சமூக பொருளாதார அளவுகளில் அவனது கொடுப்பனவு ஆற்றலை மீறியதாகவே இருக்கிறது. அல்லது செலவுகள் நன்மைகளைவிட அதிகமாகி வீடமைப்பை கீழ்மட்ட சமூக, பொருளாதாரத் தொகுதிகளுக்கு பொருளாதார ரீதியாக சாத்தியமாக முடியாத ஒன்ருகச் செய்து விடுகிறது.

எனவே இலங்கையில் உள்ள பிரச்சினையின் அடிப்படைக் காரணம் ஒருபுறத்தில் அதிக உற்பத்திச் செலவினக் காரணிகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறத்தில் வருமானப் பகிர்வுச் சமன்பாடின்மையிலும் தங்கியுள்ளது.

## 3.2. நகரப்புறத்துறை

நகரப்புறத்தில் ஒரு நுகர்வோன் வீடு கட்டக்கூடிய ஒரு காணி வைத்திருந்தால் அக்காணியை ஈடு வைப்பதன் மூலம் வீடு கட்டுவதற்கான கடன் பெற அவனுல் முடிகிறது. நகரப்புறச் சனத்தொகையில் ஒரு மிகச் சிறு சதவீதத்தினரே ஈடு வைத்துக் கடன் பெறக்கூடிய நகரப்புறக் காணியை கொள்வனவு செய்ய முடிகிறது. இதன் நிகர விளைவு என்னவெனில் வீடு கட்டவேண்டிய முதலீட்டாளர்கள் தவிர்க்கப்பட்டு அதனுல் குப்பங்களும் சட்டபூர்வமற்ற குடியமைப்புகளும் ஏற்படுவதே.

குறைந்த வருமானமுள்ள குழுவைச் சேர்ந்த நுகர்வோன் ஒருவன் நிலமொன்றை கொள்வனவு செய்யக்கூடிய நிலையில் இருந்தாலும் இந்நாட்டில் உள்ள காலங் கடந்த வீட்டுக் கட்டுமானச் சட்டங்கள் எளிமையான சமூக ஏற்றுக் கோட்பாங்கான வீடொன்றைக் கட்டுவதைத் தடை செய்து தன்னிச்சையான மத்தியதர வர்க்கத் தரத்திற்கு அவனை ஒத்துப் போகும்படி எதிர்பார்க்கின்றன. எனவே மீண்டும் அவன், நன்மைகளை மீறிய அதியுயர்ந்து செலவுகள் காரணமாக தவிர்த்து வைக்கப்படுகிருன்.

மேலும் அந்நுகர்வோன், மிக அருமையாகப் பெறும் சேவைகளுக்காக உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு வரி செலுத்தி வீடொன்றைப் பேண எதிர்பார்க்கப்படுகிருன்.

அண்மைக்காலம் வரை அரசாங்கதுறை முதலீடு செலவு வாய்ந்த காணிகளில் விலையுயர்ந்த அடுக்கு மாடிகளைக் கட்டுவதிலேயே கருத்தூன்றி வந்துள்ளது. நுகர்வோனது நன்மைப் பேறுகளை விட இவற்றினது செலவு அதிகமானதாகும். இதன் விளைவு உதவிமான்யங்களும் குப்பங்கள் ஏற்பட்டதுமாகும். (வீடமைப்பில் ஏற்படக்கூடிய செலவினத்தின் தனித்தனி எண்களை அட்டவணை 3 ல் பார்க்க)

எனவே நகரப்புற வீடமைப்புப் பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணங்கள் கீழ்க்கண்டவைதான் என்ற முடிவிற்கு ஒருவர் வரலாம்.

(1) வீடு கட்டவேண்டிய ஒரு முதலீட்டாளனுக்கு வீடமைக்கக்கூடிய காணிக் குறைபாட்டை உண்டாக்கும் நகரப்புற உருபாட்டுத் திட்டமிடல் இன்மை.

அட்டவணை 3

1972 இல் கொழும்பில் பல்வேறு வருமான வகுப்பார் மாநகரின் மத்தியிலிருந்து 2½ மைல்களுக்குள் 6 பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்காக வாடகை வீடுகளை அமர்த்தச் செலவழித்த உத்தேச வருமான வீதம்

| ரூபாய்களில் வருமான வகுப்புகள் (மாதாந்தம்) | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0–100 | 100–150 | 150–200 | 200–300 | 300–400 | 400–500 | 500–600 | 600–700 | 700–900 | 900–1000 | 1000–1500 | 1500–2000 |
| நீலநிறக் கழுத்துப் பட்டியார் அல்லது உழைக்கும் வர்க்கம்1. (நூற்று வீதம்) | | | | | | | | | | | |
| 14.17 | 8.915 | 7.46 | 6.2 | 5.16 | 4.60 | 4.10 | — | — | — | — | — |
| வெள்ளைக் கழுத்துப் பட்டியார் அல்லது மத்திய வர்க்கம்2 | | | | | | | | | | | |
| — | — | — | 11.93 | 11.16 | 10.63 | 10.21 | 9.90 | 9.89 | 9.22 | — | — |
| வெள்ளைக் கழுத்துப் பட்டியார் அல்லது உயர் வர்க்கம்3 | | | | | | | | | | | |
| — | — | — | — | 12.76 | 13.45 | 13.98 | 14.50 | 15.09 | 15.61 | 16.4 | 17.53 |

குறிப்புக்கள்:

1. கணிப்பு — Eயின் A நூற்றுவீதம் = 107.9 × E − 0.517
2. கணிப்பு — Eயின் A நூற்றுவீதம் = 34.1 × E − 0.19
3. கணிப்பு — Eயின் A நூற்றுவீதம் = 4.02 × E 0 .198

* வகுப்பின் சராசரி வருமானம்

4. ஒவ்வொரு தர அட்டவணை (8-37) படி வீட்டின் பரப்பு, அதாவது g = 1,400 சதுரடி g = 2.875 சதுரடி, g = 3,1700 சதுரடி

ஆதாரம்: ஜோக்கிம் எம். ஈ. ''ஸ்ரீலங்காவில் நகர வீடமைப்பின் மெய்வளர்ச்சிக்குப்பொதுத்துறை செய்யும் முதலீடு.'' பி.எச்.டி. ஆய்வு. எடின்பேக் 1973. பக்கம் 316.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பொருளாதாரத் திட்டமிடலுக்கும் உருப்பாட்டுத் திட்டமிடலுக்கும் இடையில் இணைப்பின்மை. இதனால் உத்தியோக உற்பத்தியிலும் குடியிருக்க ஏதுவான அமைவிடத்திலும் உருப்பாட்டுப் பிரிவினை விளைகிறது.

(3) நகரப்புற வீடமைப்பிற்கான நிதியிடு நிறுவனங்கள் குறைபாடு. (அட்டவணை 4 வீடுகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களின் தனித்தனி எண்களைத் தருகிறது.)

(4) குடிசனத் தொகையின் பெரும்பான்மையினரது சமூக, பொருளாதார விருப்புக்களைப் பிரதிபலிக்கும் யதார்த்தபூர்வமான கட்டுமானச் சட்டங்கள் இல்லாதிருப்பது. இப்படி இருப்பதனால் செலவுகளுக்கும் நன்மைப் பேறுகளுக்கும் இடையிலான இடைவெளி விசாலமாகி மக்கள் தமது சமூக பொருளாதாரக் கோரிக்கைகளுக்கு மீறிய வீடுகளைக் கட்டி அவற்றில் உறைய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

(5) ஒரு பொருளாதாரப் பிற்தேக்கத்திற்குரிய சூழ்நிலையில் சேரிகளையும் குப்பங்களையும் அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக சேரிகளையும் குப்பங்களையும் ஒழிப்பதனை ஏற்றுக் கொள்வதன் மூலம் வீடமைப்பை நோக்கும் ஒரு யதார்த்தபூர்வமான அணுகுமுறை இல்லாதிருப்பது.

(6) முழு நாட்டிற்குமே சிறந்த வீடமைப்பின் மறைமுக நன்மைப் பேறுகளை உதாசீனம் செய்வதன் மூலம் வீடமைப்பு முதலீட்டை ஒரு பொருளாதார மேற் செலவாயன்றி சமூக மேற் செலவாகக் கொள்ளும் கொள்கையை ஏற்றுக் கொள்ளுதல். இது பொதுத்துறை நகர வீடமைப்பு முதலீட்டிலும் நிர்மாண அபிவிருத்தியிலும் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும்.

(நகரப்புற வீடமைப்பினதும் தேசிய பொருளாதாரத்தினது மான 'நேரடி அபிவிருத்தி' யின் வரைதற்பாங்கான பிரதிபலிப்பிற்கு அடைப்பு ஐந்தையும் வீடமைப்பின் மூலம் உத்தியோகம் உற்பத்தியாக்கும் விவரத்திற்கு அடைப்பு ஆறையும் பார்க்க)

### 3.3. கிராமியத்துறை

ஏற்கனவே வந்த முடிவின்படி கிராமிய வீடமைப்பில் ஒரு பிரச்சினையே யில்லை. செலவுகள், நன்மைப் பேறுகள் கொள்கை ஒரு இலட்சிய அரசிலேயே நடைமுறைப் படுத்தப் படுவதாகத் தெரிகிறது. அதாவது, கிராமியக் குடிசனங்கள், அவர்களது செலவுகள் அவர்கள் நன்மைப் பேறுகளுக்குச் சமானமாகக் கூடியவண்ணம் அவர்களது சமூக பொருளாதார ஏற்றுக் கோள்களுக்கு அமைவதாக அவர்களது வீடுகளைக் கட்டிக் கொள்வர்.

அப்படியன்றி நகரத்தரங்களை கிராமியத்துறைகளில் நாம் புகுத்த முயன்றால் மிகப் பாரிய ஒரு பிரச்சினை தோன்றலாம் என்ற முடிவுக்கு வரலாம். எனினும் இது ஒரு கற்பனைப் பிரச்சினையாகவே இருக்கும். என்றாலும் கிராமியத்துறைக்குள் நகரப்புறக் கட்டிடச் சட்டங்கள் நுழையும் போது கடவுளைத் தவிர வேறு யாருமே அதைக் காப்பாற்ற முடியாது.

### 3.4. தோட்டத்துறை

தோட்டத்துறைக் கைத்தொழில் இந்நாட்டில் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன் தோன்றியதாகும். தோட்டத் தொழிலாளருக்கு வழங்கப்பட்ட வீடுகளின் தரம் அக் காலச் சிந்தனைகளை அடியொற்றியதாகும். இச் சிந்தனை தான் கொழும்பு நகரிலே பழிங்குத்தரை மாடிகளையும் உற்பத்தி செய்தது. கொழும்பு நகரத்துச் சேரிகள் ஏன் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்று ஒரு கேள்வி எழுமாயின் அக் கேள்விக்கான விடையும் தோட்டத் தொழிலாளர்கள் லயங்கள் ஏன் அபிவிருத்தி யடையவில்லை என்ற கேள்விக்குச் சமனானதாகவே இருக்கும். வீடமைப்பு என்பது வசிக்கக்கூடிய சூழ்நிலையாய் இல்லாது வீடாக மட்டும் கொள்ளப் பட்டதாலும் எனவே ஏதாவது ஒரு உறைவிடம் இருந்தால் மட்டும் போதும் என்று கொள்ளப் பட்டதாலுமே இந்நிலை ஏற்பட்டதென்று சாதாரண காரணமே இறுதி விடையாகக் கிடைக்கும். எனவே தோட்டத்தில் உள்ள நிலைக்கான காரணத்தை தோட்டக் கைத்தொழில் துறையில் அதிகபட்ச இலாபம் பெறுவதை நிர்ப்பந்திக்கும் உந்துதலோடு கூடிய வீடமைப்பு அறிவியல் அடிப்படை அறிவுக் குறைபாட்டில் காணலாம். எனவே தான் நகரப்புறச் சேரி காட்டி உதாரணம் அங்கு இடம் பெற்றுள்ளது.

### 3.5. முடிவுகள்

மேற்கூறப்பட்ட ஆய்விலிருந்து, இலங்கையின் வீடமைப்புப் பிரச்சினைக்கான முக்கிய காரணம், பொருளாதாரத் திட்டமிடலுக்கும் உருப்பாட்டுத் திட்டமிடலுக்கும் இடையிலான இணக்கமின்மையும், உருப்பாட்டுத் திட்டமிடலுக்கும் வீடமைப்புக்கு மிடையிலான இணக்கமின்மையும் அதனோடுகூடிய மக்களின் சமூக பொருளாதாரக் கேள்விகளுக்கு மீறிய தரங்களின் விடாப்பிடி நிர்ப்பந்தமும் தான் என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

### 4.0. இலங்கையின் வீடமைப்புக் கொள்கை

இலங்கையின் வீடமைப்புக் கொள்கையை இதுவரை நாம் இனம் கண்டு அப்பிரச்சினைக்கான காரணத்தையும் இனங்காண முயன்றுள்ளோம்.

மேற் கூறப்பட்ட ஆய்வுகளை அடியொற்றி நாம் இப்போது இலங்கையின் வீடமைப்புக் கொள்கையின் விசாலிய செயல் வடிவம் ஒன்றை வரைந்து இச் செயல் வடிவத்தின் இடனுய் நிலவும் கொள்கையை மீளாய்வு செய்யலாம்.

### 4.1. இலங்கையின் வீடமைப்புக் கொள்கைக்கான செயல் வடிவம்

நாம் கண்டபடி வீடமைப்புப் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணம்,

(1) பொருளாதாரத் திட்டமிடலுக்கும் உருப்பாட்டுத் திட்டமிடலுக்கு மிடையிலான இணக்கமின்மையும்

(2) உருப்பாட்டுத் திட்டமிடலுக்கும் வீடமைப்பிற்கு மிடையிலான இணக்க மின்மையும்

(3) மக்களது சமூக பொருளாதாரக் கேள்விகளை மீறிய தரங்களின் நிர்பந்தமுமாகும்.

எனவே ஒரு வீடமைப்புக் கொள்கையின் அடிப்படைத் தேவை இது ஒரு உருப்பாட்டுத் திட்டத்திற்கு பொருந்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதாகும். இவ்வுருப்பாட்டுத் திட்டம் கூட நிலவுகின்ற பொருளாதாரச் சூழ்நிலைகளை அடியொற்றிய பொருளாதாரத் திட்டத்திலிருந்து பெறப்பட்டு மக்களின் சமூக கலாசாரக் கேள்விகளைப் பிரதிபலிப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்ணிய அளவில் இதை நகரப்புறம் என்றும் கிராமியம் என்றும் தோட்டத்துறை யென்றும் கொள்ளலாம். பிரதேச அளவில், அதே நேரத்தில் அதே அடிப்படைப் பிரிவுகளைக் கருத்துக்கெடுக்கலாம். நுண்ணிய அளவில் வரையறுக்கப்பட்ட நகர, கிராம, தோட்டப் பிராந்தியங்கள் கருத்துக்கெடுக்கப்படலாம்.

ஒரு நகரப்புற வீடமைப்புக் கொள்கை, அப் பிரச்சினையின் மும்முனைச் சாடலாக இருக்க வேண்டும்.

(1) ஒரு சிறிய உதவி நன்கொடையோடு அல்லது உதவி நன்கொடையே யில்லாது ஒரு நுகர்வோன் வீடு கட்டக் கூடியதான ஆகக் குறைந்த செலவில் புதிய வீடுகளை உற்பத்தி செய்தல். இது கீழ்க் கண்டவற்றை உள்ளடக்கும்:

(i) பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தை அதுவே பிரதிபலிக்கக் கூடியதாக நகரப் பிராந்தியத்தின் உருப்பாட்டுத் திட்டத்தின் அடியொற்றிய ஒரு நிறுவிடக் கொள்கை.

(ii) மேலுள்ள (1) க்கு அமைய அவசியமான உருவமைப்பை வழங்குதல் மூலம் அரசுத்துறை வீடமைப்புக்கான நகரப்புறக் காணியை அபிவிருத்தி செய்தல்.

(iii) அதிகபட்ச அளவுக்கு கீழ் மட்ட சமூக, பொருளாதாரக் குழுக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக் கூடிய யதார்த்த பூர்வத் தரங்களை ஏற்றுக் கொள்ளுதல்.

(iv) தனியார் துறையும் அரசுத் துறையும் வீட்டு நிர்மாணங்களை மேற்கொள்வதற் கேதுவான நிதியீட்டு நிறுவனங்களை அமைத்தல்.

(v) பொருளாதாரச் சூழ்நிலையை அனுசரித்து நிர்மாணக் கைத்தொழிலிற்கு பொருத்தமான தொழில் நுட்பங்களை தெரிவு செய்தல்.

(vi) உள்நாட்டுக் கட்டிடத் தளபாடங்களை உபயோகிப்பதை ஊக்குவித்து அக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.

(2) சேரிகள், குப்பங்கள் உள்ள பிராந்தியங்களை அபிவிருத்தி செய்தல்.

இது கீழ்க் கண்டவற்றை உள்ளடக்கும்:

(1) மேலுள்ள 1. (1) யை அடியொற்றி நடவடிக்கைத் திட்டப் பிராந்தியங்களைக் குறியீடு செய்தல்.

(2) நடவடிக்கைத் திட்டமிடல் பிராந்தியங்களுக்குள்ளான அபிவிருத்தித் திட்டப்படி முறைகளுக்காக மேற்கூறப்பட்ட 1 (ii), 1 (vi) ஆகியவற்றின் கொள்கைகளைப் பிரயோகித்தல்.

(3) திருப்திகரமான வீட்டுடைமையுள்ள குடிசனத் தொகையை அடைவதை உறுதிப்படுத்தும் சமூகச் சட்டங்களைப் புகுத்தி சமூகத் தொகையீட்டை ஊக்குவிதல்.

இது கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கும்:

(1) யதார்த்த பூர்வமான வாடகைக் கட்டுப்பாடு.

(2) வீட்டுடைமையில் உச்ச வரம்பு.

(3) உருவமைப்பு அபிவிருத்தியின் பகுதியாகக் கொள்ளத்தக்க சமூக, வர்த்தக, பொழுது போக்கு வசதிகளை வழங்குதல்.

கிராமப்புற வீடமைப்பு எளிமையாக இருந்து கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கி யிருக்க வேண்டும்:

(1) திட்டமிடப்பட்ட கிராமிய அபிவிருத்தி.

(2) ஏற்கனவே யுள்ள பாரம்பரிய வீடமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான தொழில் நுட்பப் பிரயோகமும் அபிவிருத்தியும்.

(3) புதிய நவீன வீடுகளைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக பாரம்பரியமான வீடுகளின் அபிவிருத்திக்கான நிதியீடு செய்யவல்ல நிதியீட்டு நிறுவனங்களை அபிவிருத்தி செய்தல்.

தோட்ட வீடமைப்புக் கொள்கை, அடிப்படையாக, சேரி அபிவிருத்திக் கொள்கையை அடியொற்றிய அதே கோட்பாட்டில் ஒரு அபிவிருத்தித் திட்டமாக இருக்க வேண்டும். எனினும் இதற்கான நிதியீடு, தோட்டங்களின் இலாபத்தின் ஒரு பகுதியை 'வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்காக' ஒதுக்கி அதிலிருந்து எடுக்கப்பட வேண்டும். இவற்றிற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் தரங்களும் நகரத்துறையை ஒத்ததாக இல்லாது யதார்த்த பூர்வமாக இருக்க வேண்டும்.

### 4.2. இலங்கையில் நிலவும் வீடமைப்புக் கொள்கை

இலங்கையில் நிலவும் வீடமைப்புக் கொள்கை கண்டிப்பாக துறைவாரியான ஒன்றல்ல. இது

அட்டவணை 4.

**வீடமைப்பு கடன்கள்**

| | புதிய வீடமைப்பு | | திருத்தமும் விரிவாக்கமும் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| வருடம் | கடன்களின் எண்ணிக்கை | பெறுமதி மிலியன் ரூ. | கடன்களின் எண்ணிக்கை | பெறுமதி மிலியன் ரூ. | கடன்களின் எண்ணிக்கை | பெறுமதி மிலியன் ரூ. |
| 1970 .. | 2113 | 31.4 | 2515 | 5.3 | 4628 | 36.7 |
| 1971 .. | 2896 | 36.5 | 4048 | 9.0 | 4944 | 45.5 |
| 1972 .. | 3031 | 36.6 | 3679 | 8.9 | 6710 | 45.5 |
| 1973 .. | 5985 | 54.2 | 5789 | 13.2 | 11774 | 67.4 |
| 1974 .. | 7030 | 58.7 | 10000 | 33.0 | 17030 | 91.7 |
| 1975 .. | 4595 | 30.6 | 7496 | 23.3 | 12097 | 53.9 |

குறிப்பு: மேலேயுள்ள புள்ளிவிவரங்கள் கீழ்வரும் நிலையங்கள் வழங்கிய கடன்களைக் குறிப்பன:—

1. தேசிய வீடமைப்புத் திணைக்களம்
2. தேசிய சேமிப்பு வங்கி
3. கடன் சபை (முதற் காற்பகுதி மட்டுமே உள்ளடக்கப்பட்டது)
4. மக்கள் வங்கி
5. ஸ்ரீ லங்காவின் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
6. இலங்கை வங்கி
7. பொதுத்துறைச் சேவை பரஸ்பர சேம லாபச் சங்கம்
8. அரச ஈட்டு வங்கி.

ஆதாரம்: வீடமைப்பு அமைச்சின் புள்ளிவிவரத் திரட்டு. தொகுதி 3, இல. 1. ஏப்ரல்76



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விசாலமான கொள்கையாக இருப்பதோடு கீழ்க்கண்டவற்றை உள்ளடக்குகிறது:

(1) பொதுத்துறையினால் மேற்கொள்ளப்படும் குறைந்த செலவு வீடமைப்பு நிர்மாணத் திட்டங்கள். இவை பிரதானமாக நகரப்புறங்களில் உயர்ந்த அடுக்குமாடிகளையும், கிராமங்களிலும் உப நகரப்புறங்களிலும் சிறிய சுய உதவி வீடுகளையும் உள்ளடக்குகிறது. அலகுகள் பரப்பில் 250 சதுரடிக்கும் 450 சதுரடிக்கும் இடைப்பட்டவையாகும். (அடைப்பு 7, 8 ஐப் பார்க்க)

(2) பொதுத் துறையினால் மேற்கொள்ளப்படும் நடுத்தர வர்க்க வீடமைப்பு நிர்மாணத் திட்டங்கள். இவை பெரிய நகரங்களில் பரப்பளவில் 500 சதுரடிக்கு மேற்பட்ட உயர்ந்த அடுக்குமாடிகளையும் சிறிய நகரங்களில் சிறிய வீடுகளையும் உள்ளடக்குவன.

(3) ஏற்கனவே உள்ள வீடுகளைப் பராமரிப்பதற்கும், அபிவிருத்தி செய்தற்கும், புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கும், வீடுகளைக் கொள்வனவு செய்தற்கும், காணிகளைக் கொள்வனவு செய்தற்கும் என வேறுபடும் வட்டி வீதங்களில் தனித்தனி நபர்களுக்கு வழங்கப்படும் கடன்கள்.

கடன்கள் பொதுத்துறை நிறுவனங்களான தேசிய வீடமைப்புத் திணைக்களம், மக்கள் வங்கி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கை வங்கி, அரசாங்க சேவை பரஸ்பர சேமலாப நிதிச் சங்கம் போன்றவற்றினாலும் ஏனையவற்றினாலும் வழங்கப்படுகின்றன.

(4) பொது வசதிகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டு தேசிய வீடமைப்புத் திணைக்களத்தினால் பணிப்புப் பெறும் சேரி அபிவிருத்தித் திட்டங்கள்.

(5) தனியார்துறை அபிவிருத்தியாளருக்கான ஊக்குவிப்புகள்.

(6) கீழ்க் கண்டவற்றை உள்ளடக்கும் சமூகச் சட்டங்களின் செயற்பாடு:

(1) வாடைகைக் கட்டுப்பாடு (அடைப்பு 9ஐப் பார்க்க)

(2) வீட்டுடமை உச்சவரம்பு (அடைப்பு 10 ஐப் பார்க்க)

(3) வாடைகைக் குடிகளின் பாதுகாப்பு.

(7) கட்டிடத் தளபாடக் கூட்டுத்தாபனத்தின் மூலம் கட்டிடத் தளபாடக் கைத்தொழில் அபிவிருத்தி (அடைப்பு 11 ஐப் பார்க்க)

**4.3. இலங்கையின் வீடமைப்புக் கொள்கை மீதான ஒரு மீளாய்வு**

முற்கூறப்பட்ட பகுதிகளில் இலங்கையின் வீடமைப்புக் கொள்கைக்கான உருவமைப்பு ஒன்று நிறுவப்பட்டு நிலவி வரும் கொள்கையும் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

இப்போது நிறுவப்பட்ட உருஅமைப்புக்கு இடனாய் நிலவி வரும் கொள்கையை மீளாய்வு செய்வோமாக. இதன் நோக்கம் தீதென்று கண்டிப்பதாயன்றி அபிவிருத்தி யாலோசனையாய் இருக்கக் கூடியதாய் அமையும். எனவே இதன் இறுதி நோக்கம் இலங்கையின் வீடமைப்புப் பிரச்சினைக்கு யதார்த்த பூர்வமான தீர்வொன்றைக் கண்டு பிடிப்பதற்கு உதவுவதாய் அமையலாம்.

ஒரு வீடமைப்புக் கொள்கையின் அடிப்படைத் தேவை என்னவெனில் அக்கொள்கை ஒரு பொருளாதாரத் திட்டத்தினதும் உருப்பாட்டுத் திட்டத்தினதும் விசாலிய இணைப்பமைப்புருவிற் கிணங்கியதாய் இருக்க வேண்டும் என்பதாம். இலங்கையில் இம் மூன்றிற்கு மிடையில் உள்ள இணைப்பு மிகச் சிறிதாயோ அல்லது முற்றாக இல்லாதோ இருக்கும்.

எனவே பின்பற்றப்பட வேண்டிய முதலாவது தேவை, உருப்பாட்டுத் திட்டம் பொருளாதாரத் திட்டத்தின் ஒரு உருப்பாட்டுப் பிரதிபலிப்பாக இருக்கக் கூடியதாக பொருளாதாரத் திட்டமிடல் உருப்பாட்டுத் திட்டமிடலோடு இணைக்கப்படுவதாகும். மேலும் இத்திட்டம் அபிவிருத்தியினதும் முதலீட்டினதும் கால அட்டவணையை வரையறுத்து நிர்மாணத்தில் தொழில்நுட்பத் தேர்வு, வீடமைப்புத் தரங்கள் போன்ற விபரங்களை குறித்துக் காட்ட வேண்டும். இவ்வடிப்படைச் செயலாக்கம் தேசிய மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும், உள்நாட்டு மட்டத்திலும் நாட்டில் இணைப்பாற்றல் கொண்ட அபிவிருத்தியை ஏற்படுத்தும். ஒவ்வொரு அளவு மட்டத்திற்குமான திட்டம் மந்திரி சபையினால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாகப் பிரகடனப் படுத்தப் பட்டாலே அத்தகைய விளைவினைத் தரும். இதனால் வீடமைப்பு மட்டும் அபிவிருத்தியடைவதன்றி விரும்பிய திசையிலே விரும்பிய வளர்ச்சி விகிதத்தையடைவதற்கான பொதுக் குறிக்கோளோடு நாடு முழுக்கவே அபிவிருத்தியடையும்.

மேற்கூறப்பட்ட விஷயம் நிறைவேறும் பட்சத்தில் நகர, கிராமிய, தோட்டத்துறைகளுக்கான விரிவான கொள்கை வரைவிலக்கணம் கூறப்படலாம். இலங்கையில் விரிவான ஒரு வீடமைப்புக் கொள்கை நிறுவப்பட்ட உருவமைப்பிற்கு ஒத்துப்போகக் கூடியதாகவே இருக்க முயலும். எனினும் இதிலும் குறைபாடுகள் இருக்கவே செய்யும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள இக் குறைபாடுகள் சரிசெய்யப்படக் கூடியவை.

**4.3.1. நகரப்புற வீடமைப்புக் கொள்கை**

தற்போதைய வீடமைப்புக் கொள்கை, அபிவிருத்தி செய்யப்பட்ட நகரப்புறக்காணி ஒரு கட்டுப்பாடு மில்லாது கிடைக்கிறது என்று அனுமானிக்கிறதேயல்லாது எந்தவொரு திட்டமிடப்பட்ட நிறுவிடக் கொள்கைக்கும் ஒத்துப் போகக் கூடியதாக இல்லை. இது இக் கொள்கையை வரைந்தவர்களின் தவறாகாது. முன் எடுத்துக் காட்டியபடி தேசிய மட்டத்தில் கொள்கையிணைப்புப் பெருமையின் தவறாகும். விதப்புக் கூறப்பட்ட இணைப்பு செயல் முறைப்படுத்தப்பட்டால் இது தானாகவே சரி செய்யப்பட்டுவிடும்.

இந் நாட்டில் ஏற்கனவே இயங்கி வரும் கட்டிடச் சட்டங்கள் முற்றாகவே காலங் கடந்தவையாகும். அவை மக்களது சமூக, பொருளாதாரக் கேள்விகளோடு இணைந்தவையல்ல. தற்போதைய கொள்கை இச் சட்ட விதிகளில் வரையறுக்கப்பட்ட தரங்களுக்கு அனுசரணையானவையாகும். எனவே இதன் இறுதி உற்பத்தி வீடுகளைப் பொறுத்த மட்டில் வீட்டிலுறையும் குடிசனத் தொகைக்கு முழுதாகவே பொருத்தமில்லாதிருப்பதில் ஆச்சரியமேதுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் குறிப்பிடப்பட்ட கட்டத்திலும் காலத்திலும் உள்நாட்டுச் சூழ்நிலைக்குப் பொருந்தக் கூடியதான புதிய தொகுதிச் சட்ட திட்டங்கள் ஆக்கப்படுவது காலோசிதமாகும்.

தற்போதைய கொள்கையின் உருப்பாட்டு இறுதி விளைவினை கொழும்பிலுள்ள உயர்ந்த அடுக்குமாடிக் கட்டிடங்களின் தொடர்டாகவும் உப - நகரப்புறப் பிராந்தியங்களின் உதவி பெற்ற சுய உதவி வீடமைப்புத் தொடர்பாகவும் காணலாம். இவ்விரு வேறு மாதிரிகளிலும் உள்ள வாழ்க்கைமுறை அடைப்புகள் 7, 8, 3 ஆகியவற்றில் விபரிக்கப்பட்டுள்ளன. சமூக பொருளாதார ரீதியாகப் பார்க்கும்போது உயர்ந்த அடுக்குமாடிக் கட்டிடங்கள் ஒரு தோல்வியென்பது வெளிப்படையாகத் தெரியும். அடுக்குமாடிக் கட்டிடங்களை சிறந்தவையாகக் கொள்ளும் ஒரே வாதம், அவை நகரப்புறக் காணியை மிச்சம் பிடிக்கின்றன என்பதாகும். ஆனால் ஜோக்கிம் என்பார் இதனைத் தவறென்று நிரூபிக்கின்றார். உயர்ந்த அடுக்குத் தொடர்மாடிக் கட்டிடங்கள், நடுத்தரமாயுள்ள ஏக்கர் ஒன்றுக்கு 180 நபர் கொள்ளக் கூடிய திணிவை விட — அதாவது இரண்டடுக்குக் கட்டிடங்களின் நிர்மாணிப்பினால் பெறக் கூடியது — அதிகப்படியான நிலத்தை ஈற்றில் பிடிக்குமென அவர் தமது வாதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய வீடமைப்புக் கொள்கை தற்போதைய சட்ட திட்டங்களின் மூலம் சமூக அமிசத்தைப் போதுமான அளவுக்கு மேவியுள்ளது.

வீட்டுடைமைச் சொத்துச் சட்ட உச்ச வரம்பு நடைமுறைப்படுத்தப்பட்டதில் சேரி அபிவிருத்தித் திட்டப்பேறு சாத்தியமாகியுள்ளது. எனினும் இது போதுமான ஒன்றல்ல. மக்களது உருப்பாட்டு வாழ்க்கைச் சூழலை அபிவிருத்தி செய்வதோடு அவர்களது சமூக, பொருளாதார மட்டங்களை உயர்த்துவதற்கு நோக்கப்பட்ட நகரப்புறச் சமூக அபிவிருத்தித் திட்டங்களுடன் இத்திட்டம் இணையாக்கப்பட வேண்டும்.

நகரப்புற வீடமைப்பு முதலீட்டில் பிரதான பகுதி தனியார் துறை நபர்களாலேயே மேற்கொள்ளப்படுகிறது. இதையும் அவர்கள் அநேகமாக இதற்கென பெற்ற கடன் மூலமே நிறைவேற்றுகின்றனர். முன்பு குறிப்பிட்டதுபோல் நிதியீட்டு நிறுவனங்களின் மூலம் நிதி பெற முடியாமையினாலேயே அநேகமான இயற்றிறன் முதலீட்டாளர்கள் வீடுகள் கட்ட முடியாதவர்களாயுள்ளனர். எனவே அவசியமானது என்னவெனில் பிரேசில் நாட்டில் உள்ளதுபோன்ற வீடமைப்பு வங்கியொன்றை நிறுவுவதே. பிரேசிலில் இவ்வங்கியின் மூலம் ஈடுவைத்தற் காப்புறுதி முறையைப் பின்பற்றுவதனால் நிலத்தை ஈடுவைக்கும் பிரச்சினை வெற்றிகொள்ளப்படுகிறது. மேலும் அவ் வங்கியானது நவீன வீடுகளைக் கட்டுவதற்கு கடன் வசதியளிப்பதோடு மட்டுமமையாது பாரம்பரிய வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கும் நிலம் கொள்வனவு செய்வதற்கும் வீடுகளைப் பராமரிப்பதற்கும் கடன்வசதியளிக்கவேண்டும். ஏற்கனவே உள்ள வீடுகளைக் கொள்வனவு செய்தலைக் கட்டுப்படுத்தும் நோக்கமாக அக்கைங்கரியத்திற்கென வழங்கப்படும் கடன்களும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் இதன் குறிக்கோள், கிடைக்கக்கூடிய சிறிய வளங்களின் உதவியோடு வீட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டுமென்பதே.

இணைப்பமைப்புரு அபிவிருத்திக்கானதும், சமூக அபிவிருத்திக்கானதுமான திட்டங்களுக்குத் தேவையான நிதியீடு உள்ளூராட்சி சபைகளினால் செய்யப்பட வேண்டும். உள்ளூராட்சி சபைகள் சொத்து வரிகளிலிருந்து பெறப்பட்ட வளங்களை இதற்காக உபயோகப்படுத்தலாம். இக் கோட்பாடு புதிய உறைவிடப் பிராந்தியங்களின் அபிவிருத்திக்கும் ஏற்கனவேயுள்ள சேரிப் பிராந்தியங்களின் அபிவிருத்திக்கும் நடைமுறைப்படுத்தப்படலாம்.

பொதுத்துறை வீடமைப்புத் திட்டங்கள் உத்தேச வங்கியினால் நிதியீடு செய்யப்படலாம். இன்றும் இருப்பது போலவே கீழ்மட்ட வருவாய்த் தொகுதியினர்க்கு அரசாங்கம் நேரடியாகவே உதவி நன்கொடை வழங்கலாம். சேரி வீடுகளில் உறைவோர் கீழ்மட்ட வருவாய்த் தொகுதியைச் சேர்ந்தோராகையால் இச் சேரிப்புற வீடுகளின் அபிவிருத்திக்கு அரசாங்கமே நேரடியாக உதவி நன்கொடை வழங்கலாம்.

### 4.3.2. கிராமிய வீடமைப்புக் கொள்கை

தற்போது பொது வீடமைப்புக் கொள்கையே கிராமியத்துறைக்கும் நடைமுறையாகிறது.

கிராமிய வீடமைப்பின் அபிவிருத்திக்கு பிரதான இடையூறாக இருப்பது பாரம்பரிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான கடன் வசதிகள் கிடைக்காதிருப்பதே. நவீன வீடுக்ளை நிர்மாணிப்பதற்கான கடன்கள் பொதுவாகவே குறைவானதாகும். வீடமைப்பு வங்கியொன்றை நிறுவும் விதப்புரை பாரம்பரிய வீடமைப்பிற்கு நிதியீட்டு வசதி செய்து கொடுப்பதோடு நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், நிரந்தர அமைப்புகளை நிர்மாணிப்பதற்கு உபயோகிக்கப்படும் உழைப்பும் நிதியும், கிடைக்கக்கூடிய கடன் வசதியும் சேர்ந்து அதிக நிரந்தரமான பாரம்பரிய வீடுக்களை நிர்மாணிப்பதில் செலுத்துதல் பெறும்.

இக் குறிப்பிடப்பட்ட வழியில் கூட உருப்பாட்டுத் திட்டமிடலுக்கும் வீடமைப்பிற்குமிடையில் இணைப்புக் குறைபாடு நிலவவே செய்யும். இது முதலீட்டில் உள்ள சில நிச்சயமற்ற தன்மைகளினால் விளைவதாகும். எனவே கிராமிய வீடமைப்புப் பிரச்சினை தீரவேண்டுமாயின் அப்பிராந்தியத்திற்கான பொருளாதாரத் திட்டத்தின் பிரதிபலிப்பாய் இருக்கக்கூடிய கிராமிய உருப்பாட்டுத் திட்டமிடலோடு இணைக்கப்பட வேண்டும்.

### 4.3.3. தோட்ட வீடமைப்புக் கொள்கை

இத் துறைக்கென திட்டமான கொள்கை எதுவும் நிலவுவதாயில்லை. ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று இதற்கான கொள்கை தோட்டத்துறையின் இலாபத்தினால் நிதியீடு செய்யப்பட்டு அபிவிருத்தி சம்பந்தமான ஒன்றாக இருக்க வேண்டும். முக்கியமாக இது அத்துறையின் பாரம்பரிய கட்டிடத் தொழில் நுட்பங்களை உபயோகித்து உதவி பெற்ற சுய உதவி அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.

### 5.0. முடிவு

முடிவாக பிரதான முடிவுகளைத் தொகுத்து ஒரு தொகுதி விதப்புரைகளை முன்மொழிவோமாக. இவ் விதப்புரைகள் நடைமுறைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்படின் இலங்கையின் வீடமைப்புப் பிரச்சினைக்கு விரைவான ஒரு தீர்வை அடைவதற்கு உதவலாம். நாம் அடைந்த பிரதான முடிபுகளாவன:

(1) இலங்கையின் வீடமைப்புப் பிரச்சினை முக்கியமாக ஒரு நகரப் பாங்கான பிரச்சினையாகும்.

(2) இலங்கையின் வீடமைப்புப் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணம், பொருளாதாரத் திட்டமிடலுக்கும் உருப்பாட்டுத் திட்டமிடலுக்கும் வீடமைப்பிற்கான திட்டமிடலுக்கும் இடையே இணைவில்லாதிருந்ததும் அதனோடு சேர்ந்து பாரம்பரிய வீடமைப்பை ஒரு பொருத்தமான வீட்டுருவாக ஏற்றுக் கொள்ளாமையும் ஆகும்.

(3) வீடமைப்பு முதலீடு ஒரு சமூக மேலதிகமாக மட்டும் வகைப்படுத்தப்பட்டிருந்தது. அதே நேரத்தில் வீடமைப்பு நிர்மாணத்திற்கு சரியான மாதிரித் தொழில் நுட்பம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டால் அதன் வளர்ச்சி வீதமும் வேலை உற்பத்தியும் இதை யொரு பொருளாதார முதலீடாக வகைப்படுத்தியிருக்கும். முதற் கூறிய வகைப்படுத்தல் வீடமைப்பின் முதலீட்டிற்கான வளக்குறைக்கு இட்டுச் சென்றுள்ளது.

மேற்கூறிய விடயங்களின் இடனுய் கீழ்க்கண்டவாறு விதப்புரை செய்யப்படுகின்றது:

(1) வீடமைப்புக் கொள்கை அதாவது வீடமைப்பிற்கான திட்டமிடல், (வீடமைப்பை ஒரு பொருளாதார முதலீடாகக் கணித்து) சமூக பொருளாதாரத் திட்டமிடலினதும் எல்லாப் படிகளிலும் எல்லாத் துறைகளுக்குமான உருபாட்டுத் திட்டமிடலினதும் ஒரு தொகையீட்டுக் கூறுக இருக்க வேண்டும். அதன் விளைவான அபிவிருத்தித் திட்டம் ஒரு சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

(2) ஏற்றுக் கொள்ளத்தக்க தரங்கள் மக்கள் கூட்டத்தினது சமூக பொருளாதார மட்டங்களை அடியொற்றி இருக்க வேண்டும். குறைந்த பட்சம் அது கீழ் மட்ட சமூக பொருளாதாரத் தொகுதியின் கேள்விகளை பிரதிபலிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

(3) காணி கொள்வனவு செய்தற்கும் வீடுகளை நிர்மாணிப்பதற்கும் பராமரித்தற்கும் நிதியீடு செய்வதற்காக ஒரு தேசிய வீடமைப்பு வங்கியொன்றை ஏற்படுத்த வேண்டும். அதே நேரத்தில் மிகவும் கீழ் மட்டத்திலிருக்கும் சமூக பொருளாதாரத் தொகுதிகளின் வீடமைப்பு, அரசாங்க நேரடி உதவி நன்கொடைகளினுல் ஏற்படுத்தப்பட வேண்டும்.

(4) புதிய வீடமைப்பிற்கான காணியின் இணைப்பமைப்புருவை நிலவும் சேரிகளுள்ளும் அப் பிராந்தியத்திலே பெறும் வரிகளையும் வீதங்களையும் உபயோகித்து விருத்தி செய்வதற்கு உள்ளூராட்சி அதிகார சபைகள் நிர்ப்பந்திக்கப்பட வேண்டும்.

(5) தெற்காசியப் பிராந்தியத்தின் நாடுகளின் வீடமைப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அந்நாடுகள் மத்தியில் அதிகளவு ஒத்துழைப்பு இருக்க வேண்டும். (1975 ம் ஆண்டில் இலங்கையில் முதல் முதல் நடைபெற்ற தெற்காசிய வீடமைப்பு அமைச்சர்களின் மாநாட்டினை விவரிக்கும் அடைப்பு 11 ஐப் பார்க்க.)

## வீட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் தொடர்மாடி வீடுகள்


நகரில் உள்ள பலதரப்பட்ட வேலை வாய்ப்புகளும், வருமானத்தை பெருக்கிக் கொள்ளும் வசதிகளும் கிராமப்புறங்களில் இருந்து நகரின் சுற்றுப் பகுதிகளுக்கு மக்களை தொடர்ச்சியாக குடியேற வைக்கின்றன. இவ்வாருன குடியேற்றமும், நகரின் சுற்றுப் பகுதிகளில் வாழும் மக்கள் மத்தியில் ஏற்படும் இயற்கையான சனப் பெருக்கமும் மேலதிக நிலத் தேவையை தோற்றுவிக்கின்றன. இது நிலத்தின் விலையையும் அதிகரிக்கச் செய்கின்றது. இதன் காரணமாகவே, இருக்கும் நிலத்தை உபயோகமான முறையில் பயன்படுத்தும் நோக்குடன் பொது வீடமைப்பு திட்டங்கள் பல அடுக்குகளைக் கொண்ட தொடர்மாடி வீடுகளாக அமைக்கப்படுகின்றன.

பெரிய வீடமைப்பு திட்டங்களில் ஒன்ருக மாளிகாவத்தையில் மேற்கொள்ளப் பட்டிருக்கும் வீடமைப்புத் திட்டம் அமைகிறது. இங்கு ஐந்து அடுக்குகளைக் கொண்ட தொடர் மாடி வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் பல தொடர் மாடி வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன். தற்சமயம் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் தொடர் மாடி வீடுகள் ஒவ்வொன்றும் இரண்டு படுக்கை அறைகளையும், ஒரு அமர்வு அறையையும், சமையல் அறை, குளியல் அறை, குழாய் நீர் வசதி, பல்கனி ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றன. இந்த வீடுகளின், மேல் மாடி வீடுகள் 490 சது. அடிகளையும், அடித்தள வீடுகள் 420 சது. அடிகளையும் பாவனைக்கு பயன்படுத்தும் நிலப் பரப்பைக் கொண்டுள்ளன. இவ்வீடுகளின் மாத வாடகை 75 ரூபாவிலிருந்து 115 ரூபா வரையுள்ளது. நகரின் மத்தியில் வாழும் குடிசை வீட்டுக்காரர்களை குடியமர்த்தவே இந்த தொடர் மாடி வீடுகள் கட்டப்பட்டதாக பொதுவாகக் கருதப்பட்ட போதிலும், வீடுகளின் வாடகை அதிகமாக இருப்பதால் அவர்களை அங்கு குடியமர்த்த முடியவில்லை.

இவ் வீடுகளில் குடியிருப்போர், போதிய வசிப்பு இட வசதி இல்லையென்றும், தோட்ட வசதி இல்லையென்றும், ஓசைத் தடுப்பு சாதனங்கள் பலஹீனமானதென்றும், மேல் மாடிகளுக்கு செல்வது கடினமாக இருப்பதாகவும் புகார் செய்துள்ளனர். இவ் வீடுகளின் சமையல் அறைகள் விறகு கொண்டு சமைப்பதற்கு ஏற்பதாக அமைக்கப்படவில்லை. இதனுல் விறகு கொண்டு சமைப்பதனுல் ஏற்படும் புகை இங்கு வசிப்பவர்களுக்கு மேலதிகப் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது.

அடித்தள வீடுகளில் வசிப்பவர்கள் மேல் மாடிகளில் வசிப்பவர்களினுல் வீசப்படும் குப்பைகளினுலும், குழாய்களில் ஏற்பட்டுள்ள ஒழுக்குகளினுலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ் வீடுகளின் பராமரிப்பு பற்றியும், பழுதுகளை திருத்த வேலையாட்களை பெற்றுக் கொள்வதில் உள்ள சங்கடம் பற்றியும் புகார் செய்யப்பட்டுள்ளது. சில தொடர் மாடி வீடுகளில் அதிகமான ஆட்கள் வதிகின்றனர். ஒரு வீட்டில் பதினெரு பேர் வாழ்ந்து வருவதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதனுல் ஒவ்வொரு இரவும் இந்த வீட்டின் அமர்வு அறை படுக்கையறையாக மாற்றப்பட வேண்டியுள்ளது.

பொதுவாக தொடர் மாடி வீடுகளில் வசிக்கும் மக்கள் மகிழ்வுடன் காணப்படவில்லை. தங்களது முன்னைய வீடுகளை விட இவ் வீடுகள் சற்று வசதியாக இருப்பதாலும், வேறு வழியின்மையினுலுமே மக்கள் தொடர் மாடி வீடுகளை விரும்பி ஏற்றுக் கொள்கின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்பும், தொழில் நுட்பமும் கட்டிடத்துறையும்

ஒரு அபி விருத்தியடைந்து வரும் நாட்டிற்கு பொருத்தமான ஒரு தொழில் நுட்பம் அவசியமானது என்பது வெளிப்படையானதாகும். ஒரு பொருத்தமான தொழில் நுட்பம். (அ) அதிகரித்து வரும் விளைவுத் தொகையையும், (ஆ) முழுமையான கைத்தொழில் உற்பத்தித் திறனில் அபிவிருத்தியையும் உறுதி செய்ய வேண்டும். கிடைக்கக்கூடிய வளங்களை இது அதிக நிறை மட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டும். நிர்மாணத்தில், ஆகக்கூடிய உள்ளீழுப்புத் தொகையை (45%) அதில் உபயோகமாகும் தளபாடங்கள் வகிக்கின்றன. ஒரு வீடு, ஒரு கட்டிடம், ஒரு பாலம், ஒரு அணை போன்ற நிர்மான உற்பத்திப் பொருளின் முழுச் சார்பான தொழில் நுட்பம், குறிப்பிடப்பட்ட உற்பத்திப் பொருளின் வடிவமைப்பில் உபயோகமான கட்டிடத் தளபாடங்களின் உற்பத்தியில் மேற் கொள்ளப்பட்ட தொழில் நுட்பத்திஞல் பாரிய அளவுக்குச் செல்வாக்குறுகின்றது. உதாரணமாக சீமெந்து, உருக்கு, அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகள் போன்றவற்றைக் கொண்டு கட்டப்பட்ட ஒரு வீடு சுண்ணும்பு, ஓடு, செங்கல், மரம் போன்றவற்ருல் கட்டப்பட்ட வீடுகளிலும் பார்க்க அதிகளவு தொழில் நுட்பத்தைக் கொண்டுள்ளது. இலங்கையில் எமக்கு (அ) தொழில் வளம் நிறைய உண்டு. (ஆ) அந்நிய செலாவணித் தட்டுப்பாடுண்டு. (இ) சகல மூலதன ஊக்கி உற்பத்தி அலகுகளிலும் உபயோகப்படுத்தப்படாத கொள் திறனுண்டு. (கட்டிடத் தளபாடக் கைத்தொழிலின் மீதான குறிப்புகளுக்கு முதலாவது அட்டவணையைப் பார்க்க.) உபயோகப்படுத்தப்படாத கொள்திறனே ஒரு வளமாகும். அதாவது செயலற்ற மூலதனச் சொத்தென்பது இதன் அர்த்தமாகும்.

பொருத்தமான ஒரு தொழில் நுட்பத்தை உருவாக்குதற்கு நாம்:

(1) கட்டிடத் தளபாடங்கள் துறையில் உள்ள மூலதன ஊக்கி அலகுகளிலிருந்தும் தொழில் வள ஊக்கி அலகுகளிலிருந்தும் உற்பத்தி வளங்களைத் தொகையீடு செய்தல் வேண்டும்.

(2) அந்நிய செலாவணி, மூலதனம் போன்ற தட்டுப்பாடான வளங்களின் உற்பத்தித் திறனை அதிகபட்சமாக் வேண்டும்.

தேவைப்படும் 6 சதவீத வளர்ச்சியை கட்டிடத்துறையில் காண வேண்டுமாயின் இத்தகைய ஒரு தொகையீட்டுத் தொழில் நுட்பம் அத்தியாவசியமானதாகும். இது நடைமுறையில் சாத்தியமான ஒன்றே. நடைமுறையில், இது சுதேசக் கட்டிடத் தளபாடங்களின் அதிகப்படியான உபயோகத்தை அல்லது பாரம்பரியத் துறையில் உள்ள உற்பத்தியின் சாரினமான அதிக விசாலிப்பை ஏற்படுத்தும் என்பது அர்த்தமாகும். இதன் விளைவு, முழுமையான கட்டிட வளர்முறைக்குள் தொழில் உள்ளீழுப்பில் நிகர அதிகரிப்பை ஏற்படுத்துவதாகும். வடிவமைப்புப் படியில் விசாலமான தொழில் நுட்பத் தேர்வுகளுக்கான இயற்றிறனை கருத்துக்கெடுக்காது அநேக எந்திரிகள் தவறுதலாக அவர்களது தொழில் நுட்பக் கருத்துக்களை மூலதனச் சேமிப்பு விருத்திக்கோ அல்லது நிர்மாணத் தளங்களில் மூலதன உபயோக நுட்பங்களுக்கோ தொடர்புபடுத்துகிருர்கள்.

2. சீமெந்துற்பத்தி, உருக்கு, கொண்டு செல்லல் போன்ற தெரிவு செய்யப்பட்ட மூலதன ஊக்கி நடவடிக்கைகள் அத்தியாவசியமானவையாய் இருப்பதோடு கட்டிடத் துறையில் பெருமளவிலான தொழில் உள்ளீழுப்பிற்கு குறை நிறைப்பானவையாயுமுள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் தொழில் ஊக்கி நடவடிக்கைத் தொகையோடு ஒன்று சேர்த்து இணைக்கப்படலாம். வேலை வாய்ப்பு உற்பத்திக்கு அனுசரணையில்லாத மூலதன ஊக்கி நடவடிக்கைகளை இலங்கையின் கட்டிடக் கைத்தொழிலின் இன்றைய நிலையில் கருத்துக் கெடுக்க வேண்டுமென்பதில்லை.

3. பாரம்பரிய தளபாடங்கள் துறை பாரதூரமான கைத்தொழில் உதாசீனத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு பாரம்பரிய சூளையில் செய்யப்படும் செங்கற்களைப் பொறுத்தளவில் அவற்றின் வலிமையும் தரமும் அழிவு நிலைக்குக் கிட்டச் சென்றுவிட்டன. சுண்ணும்பு, செங்கல் போன்றவற்றை உற்பத்தி செய்யும் பாரம்பரிய அலகுகளில் கைத்தொழில் ஆக்கத்திறனை அபிவிருத்தி செய்யலாம். இவ்வபிவிருத்தியை, அவற்றினது உற்பத்தி வளர்முறையின் அடிப்படைத் தொழில் ஊக்கி இயல்பில் அதிக தலையீடின்றிச் செய்து கொள்ளலாம். செங்கல் தொழில் நுட்பம், மரப்பொருள் எந்திரவியல் போன்றவற்றின் அபிவிருத்தியும் அத்தியாவசியமானதே.

4. இலங்கையின் நிர்மாண உற்பத்தியில் கிட்டமுட்ட 45 சதவீதமானது வீடமைப்பிற்காகின்றது. வீடமைப்புத் துறையைப் பொறுத்தளவில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தவருன வழியில் செலுத்தப்பட்ட முதலீட்டுக் கொள்கைகளைத் தவிர்க்க வேண்டும். வீடமைப்பில் அதிகரித்துவரும் முதலீட்டுக்கெதிரான பொருளியல் வாதியின் வாதம் தட்டுப்பாடான வளங்களின் அதிகப்படியான நன்மைப் பேருன உபயோகத்திலும் மாற்றீடான உபயோகத்திலும் பிணைந்து தூங்குகிறது. தொழில், உள்நாட்டு மூலப் பொருள்கள் போன்ற தட்டுப்பாடற்ற உள்நாட்டு விளங்களை உபயோகித்து வீடமைப்புத்துறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அது சாத்தியமானதும் ஆகும்.

5. கட்டிடத்துறையில் பாரிய அளவிலான புதிய தொழில் உள்ளீழுவை ஆகக் குறைந்தது குறுகிய கால அளவிலாவது, குறைந்த உற்பத்தித் திறனேடு தொடர்பு படுத்தப்படும் சாத்தியக்கூறு உண்டு. கட்டிடத் தளபாட, நிர்மாணக் கைத்தொழில்களின் பொறித் தொகுதி, சாதனங்களின் முதலீடு, தொழில் உற்பத்தித் திறனின் குறிப்பிடத்தக்க ஒரு நிர்ணய காரணியாகும். ஒரு அபிவிருத்தியடைந்து வரும் நாட்டின் ஆரம்ப கைத்தொழில் மயப்படுத்தும் மதியூகத்தில், கட்டிடத் தளபாடங்கள் கைத்தொழிலிற்கான எந்திர சாதனங்கள், கருவிகள், நிர்மாணப் பொறித் தொகுதிகள் ஆகியவற்றின் உற்பத்தி மீது போதிய அளவு கருத்தூன்றல் செய்யப்பட வேண்டும். இந்த வகையில் இலங்கையின் தோல்வி (ஓரளவிற்கு ஆரம்ப படிகளில் ''இனிப்புப் பொருட் கைத்தொழில் மயத்தில்'' கருத்துச் செலுத்தியதனுல்) ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு ஒரு பாடமாகும். இதன் விளைவு என்னவெனில், முக்கியமாக அதிகரித்துவரும் அந்நிய செலாவணிச் சம்பாத்தியக் கஷ்டங்களோடு எமது கட்டிடத் துறையில் குறைவான தொழில் உற்பத்தித் திறன் அச்சுறுத்தல். ஒரு நிரந்தர அம்சமாக உருவாவதே. தொழில் உற்பத்தித் திறனுக்கு குறிப்பிடத்தக்க ஒரு பங்காற்றுதலை, முன்னேற்றமடைந்த விஞ்ஞான எந்திரவியல் அறிவு. சிறந்த நிர்வாக நுட்பங்கள், சிறந்த அமைப்பியல் முயற்சிகள், தொழில் பயிற்சி போன்ற வழிகளில் நுட்ப வளர்ச்சிகளை ஏற்படுத்துவதன் மூலம் செய்யலாம். மூலதனச் சாதனம் குறைநிரம்பலாய் இருக்குமிடத்து அதற்கான மாற்றீடுகளில் ஒன்று மனித மூலதனத்தின் கொள்திறனையும் தரத்தையும் உயர்த்துவதாகும்.

6. நிர்மாணத்துறையில் அதிக வேலை வாய்ப்பை உண்டாக்க விரும்பும் திட்டமிடுவோர் அவர்களது கருத்தூன்றலை சில மூலதனச் சேமிப்புக் கட்டிட நுணுக்கங்களினதும் கருவிகளினதும் விருத்திககு மட்டும் அடிக்கடி மட்டுப்படுத்துகிருர்கள். ஒரு அபிவிருத்தியடைந்து வரும் நாட்டில் கட்டிடத்துறை ஏற்கனவே ஒரு சுமாரான தொழில் ஊக்கிதான். நிர்மாணமும் அதனேடு தொடர்புபட்ட நடவடிக்கைகளும் கிட்டமுட்ட இலங்கையின் முழு வேலை வாய்ப்பினதும் 10 சத வீதத்திற்குக் கணக்காகின்றன. கட்டிடக் கைத்தொழிலின் நிலையான வளர்ச்சியின் மூலம் மட்டுமே ஒரு தளராத வேலைவாய்ப்பு சாத்தியமாகும். இதை அடைவதற்கு நடைமுறையில் உள்ள தொழில் நுட்பம் அதிக அளவிலான அந்நிய செலாவணிக் கூறைக் கொண்டுள்ள நாடுகளில் தொழில் நுட்பத்தை ஒரு தொழில் ஊக்கி நெறிக்குத் திருப்புவது அத்தியாவசியமானதாகும். தொழில் உள்ளிழுப்புள்ள நிர்மாணக் கைத்தொழில் குறிப்பிடத்தக்க வீதத்தில் வளர்ச்சியடைந்தாலன்றி கட்டிடத் தளபாடங்கள் துறையில் அதியுயர்ந்த தொழில் உற்பத்தித் திறனே, உற்பத்தியில் அதியுயர்ந்த மூலதன விருத்தியோ நிலைநாட்டப்படுவது சாத்தியமாகாது. தகுந்த வடிவமைப்பு விருப்புகளின் மூலம் நிர்மான விளைதொகையில் இறுதி யுற்பத்திக் கலப்பைக் கட்டுப்படுத்துவதனுல் பாரிய அளவிற்கு தொழில்நுட்ப முறை மாற்றத்தை அடையலாம்.

**" இலங்கையின் கட்டிடத் தொழிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பொதுக் கவனத்தை ஈர்த்துள்ள பிரச்சினைகளும்." என்ற தலைப்பில் எஸ். கணேசன் எழுதிய கட்டுரையின் சுருக்கம்.**

**"எந்திரி" எந்திரிகள் கழகம் (1976ல் கொழும்பில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளில் மாநாட்டின் நினைவாக வெளியிட்ட விசேஷ இதழ்.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடமைப்பு மூலம் சமூக ஒருமைப்பாடு

சமூக ஒருமைப்பாட்டின் இலட்சியக் கோட்பாட்டினை, வீட்டுக் கூறுகளுக்கிடையேயான பௌதிக இடைவெளி மிகக் குறைந்ததாய் அமைந்துள்ள, சேரிகளிலும் கொட்டில்களிலுமே காண்கிறோம். வீட்டுக் கூறுகள் கண்டவிதமாக கட்டப்பட்டு ஒரு வீட்டுக் கூறின் திறந்த கதவு மற்றொன்றினதை முகம் பார்க்கும் முறையில் உள்ள, விசேடமாக சனநெருக்கடி மிகுந்த சேரிப் பகுதிகளில் சமூக கலப்பு மேலும் விருத்தியுறுகிறது. வீட்டுக் கூறுகள் மிகவும் சிறிதாகவும், காற்றோட்டத்திற்கான யன்னல்கள் இன்றி உட்புறம் இருளடைந்ததாயுமிருந்தால் வாசற்புறக் கதவுகள் திறந்தவாறே வைக்கப்பட்டிருக்கும், இத்தகைய நடைமுறைகள், மேற்படி சமூக உறுப்பினர்கள், ஒருவரின் வீட்டுக்குள் மற்றொருவர் தயக்கமின்றி நுழைவதற்கு உளவியல் ரீதியாக உதவுகின்றது. எனவே அயலவர் அடிக்கடி வீட்டினுள் நுழைவதும் வெளியேறுவதுமாக இருப்பர். அன்றேல் வாயிற் கதவருகில் சந்தித்துக் கொள்வோராயிருப்பர்.

இத்தகைய வாழ்க்கைச் சூழ்நிலைகளில் அந்தரங்கம் மிகக் குறைவாயும், சமூக கலப்பு மிகக் கூடுதலாயுமிருக்கும். சன நெருக்கடியான பகுதிகளில் வீடுகளை ஒன்றிலிருந்து ஒன்று வேறாக்கும் ஒடுங்கிய தாழ்வாரங்களிலும், ஒடுக்குப் பாதைகளிலும் சேரி வாசிகள் அடிக்கடி ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்வதும், கதவு திறந்து வைக்கும் செயற் பழக்கங்களும் ஆண்களும், சிறுவர்களும் திறந்த வெளிகளில் உறங்குவதும், நாளின் பெரும்பகுதி வீட்டுக் கூறுக்கு வெளியே செலவிடப்படுவதும் அடிக்கடி சமூக தொடர்புகள் ஏற்படுவதற்கும் ஆட்களுக்கிடையே தொடர்புகள் வளர்வதற்கும் வழிகோலுகின்றன. நெருக்கடியான பிரதேசங்களிலுள்ள சேரிகளில் ஒரு சிலவே, கிராமப்புறங்களில் போன்ற சமூக சந்திப்புக்களுக்கான விராந்தைகளையுடையன. இம்முறை சம்பிரதாய முறையிலமையாத போதிலும், இன, மத, வயது, பிராந்திய வேறுபாடுகளையெல்லாம் கடந்த இலட்சிய சமூக ஒருமைப்பாட்டுக்கு வழிகோலுகிறது. சாதிகளிடையேயான கலப்பு மணங்கள் மிகவும் அரிதானபோதிலும் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள், மற்றும் ஏனைய சிறுபான்மையினர்களுக்கிடையே சமூக ஒருமைப்பாடு இலகுவாக நிகழ்கின்றது. ஒருவருக்கொருவர் ஏற்படும் மகிழ்ச்சியிலும், துக்கத்திலும் எல்லாரும் பங்கு கொள்வதோடு அவசிய மேற்படும்போது ஒருவருக்கொருவர் உதவும் மகிழ்ச்சியான ஒருமைத்துவ உணர்வினை அது கொண்டு வருகிறது. ஆண்கள் பெரும்பாலும் தமது பொதுவான சமூக பழக்கங்களான மதுவிலும், சூதிலும் அல்லது வெறுமனே சந்தித்துக் கதைப்பதிலும் ஒன்றுபடுகின்றனர். வாலிபத்தினரான இளவயதுப் பையன்கள் தமது பொழுது போக்கை திட்டமிடுவதற்காக தமது ஏனைய இளைஞர்களைக் காண்பதில் மகிழ்ச்சியுறுகின்றனர். சிறு குழந்தைகள் வீட்டுக்கு முன்னால் சிறு திறந்த வெளிகள் உள்ள இடங்களிலெல்லாம் கூடி விளையாடுகின்றனர். பெரிய பிள்ளைகள் ஒன்றுகூடி, நகரைச் சுற்றி வந்து ஏதாயினும் சில சதங்களைச் சம்பாதிப்பது குறித்து அடுத்துத் திட்டமிடுகின்றனர். குற்றச் செயல்களைப் புரிவதில் ஆர்வம் கொண்டோர் தமது தலைவருடன் கூடித் தமது அடுத்த நடவடிக்கையையிட்டுத் திட்டமிடுவர்.

இத்தகைய நெருக்கமான சமூக கலப்பு முறைகளின் விளைவாக, குழந்தைகளின் விளையாட்டு, பாதைச் சம்பவம், வாலிபக் குமரியை பரிகாசம் செய்தல், அல்லது கசப்பான ஒரு வதந்தி போன்ற பல பொது நிகழ்வுகளுக்கும் அதனால் அடிக்கடி மோதல்கள் ஏற்படுவதற்கும் வழியுண்டு. இத்தகைய மோதல்கள் அவர்களை இரு கோஷ்டிகளாகப் பிரிக்கும். அதாவது அவர்களின் நெருக்க உணர்வு இதனால் மேலும் பலப்படுத்தப்படும். (மோதல்கள் பெரும்பாலும் மேற்படி சமூகத்தின் தலைவர்களால் தீர்த்து வைக்கப்படும்) எனவே அவர்களது மோதல்கள் பிரிவினையை உண்டு பண்ணுவதில்லை. மாறாக குழுப்பிணைப்பைப் புத்துணர்வு பெறச் செய்கின்றது.

இதற்கு மாறாக நகர்ப்புறத்தின் உயர்ந்தெழும்பி நிற்கும் தொடர்மாடி வீடுகளின் மத்திய வர்க்கத்தினர் அயலவர்களிலிருந்து தனிமையை விரும்புகின்றனர். அவர்களின் பௌதிக இடைவெளி குறுகியதாயினும் சமூக இடைவெளி மிகவும் நீளமானதாகும். மரணச் சடங்கு போன்ற ''உறவினர் பலம்'' ''சன பலம்'' தேவைப்படும் வேளைகளில் சமூகத்துக்கு வெளியே வாழும் உறவினர்களே வரவேண்டியுள்ளது. சேரிகள், குடிசைகளில் இப்படியான நிகழ்வுகளின்போது தனிப்பட்ட வேறுபாடுகள் மறக்கப்பட்டு நெருக்க உணர்வு உச்ச நிலை பெறுவதுடன் கிராமிய சமூக பண்பாட்டு முறையுடன் ஒத்துக் காணப்படுகிறது.

திட்டமிடப்படும் வீடுகளும் நகர்ப்புற மத்திய வர்க்கத்தினரின் போக்குகளை மேலும் விரிவுபடுத்துவதாயுள்ளன. வாசல் புறக் கதவு எவ்வேளையிலும் மூடியே இருக்கும். அவ்வீட்டினுள் நுழைவதற்கு கதவில் தட்டுவது அல்லது மணி அடிப்பது அவசியமாகின்றது. அப்படியும் கூட கதவு வரை வரும் எல்லோரும் வீட்டினுள் அனுமதிக்கப்படுவதில்லை. ஒருவர் தான் நெருக்கமாகப் பழக விரும்பும் தேர்ந்தெடுத்த உறவினர்கள், நண்பர்கள் மாத்திரம் கொண்ட சமுதாயமாகவே சமூக அமைப்பு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். அவர்கள் உயர் வகுப்பின் ஒரு பிரிவினரல்லர். உயர் வகுப்பினர் மட்டத்தில் சமூக தொடர்பு பெரும்பாலும் ஒரு புன்சிரிப்புடனும், சைகையுடனும் அல்லது சில வேளை அதிகரித்து வரும் விலைகள் போன்ற பொதுவான ஒரு விடயம் குறித்து ஒரு சில வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்வதோடும் முடிந்துவிடும். ''அவ்விதமாக இருப்பது நல்லது'' என்பதே அவர்களின் போக்காகும். அமைதி உறைதல், தனித்துவம் என்பன அந்தரங்கம் மூலம் பேணப்படுகின்றன. சேரிகளில் அந்தரங்கம் எனும் கோட்பாடே அதிசயமானதாகும். அங்கு வாழ்வோருக்கு அதன் அவசியமும் இல்லை. கல்வி, மற்றும் போட்டிகள் மலிந்த நகர்ப்புற வசதிகளின் அதி உயர் பயன்பாட்டில் வெற்றி காண்பதற்கு நகர்ப்புறச் சூழ்நிலைகளில் தனிநபர் அந்தரங்கம் அவசியமானதே. தனது மனோ, பௌதிக துறைகளை அதன் உச்ச திறமை வரை விருத்தியுறச் செய்வதற்கு அவனுக்கு அந்தரங்கம் அவசியம். இயங்குவிசைச் சூழ்நிலையொன்றில் உச்ச நன்மை கிட்டப் பெறுவதற்காக கட்டுப்படுத்தப்பட்ட,

ஒழுங்குறச் செய்யப்பட்ட, அமைப்புறச் செய்யப்பட்ட அடிப்படை மத்திய வர்க்க நடைமுறை மாதிரி இதுவாகும். மத்திய வகுப்பினரின் சமூகவியற்படுத்தும் நடைமுறை எப்படியெனில் சமூகம் ஏற்கனவே தீர்மானித்த இலக்கினை நோக்கி பணிபுரிவதற்காக, பிறந்தது முதலே நியதி ஒழுங்குகளையும், பெறுமானங்களையும் ஒன்று திரட்டுதலாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த இலக்குகளை பெரியவர்களான பின்பே அவர்களால் அடைய முடிகின்றது. இவ்விதமாக அவர்களால் எதிர்கால ஆதாயங்களுக்காக உடனடித் தேவைகளை ஒத்திப்போட முடிகின்றது. இதற்கு மாறாக சேரி வாசிகளுக்கோ உடனடித் "தகவலும் விளைவுகளும்" தேவைப்படுகின்றன. அவர்களது கடினமான பௌதிகச் சூழ்நிலைகளின் குறைகளை அது போக்குகின்றது. ஒரு சில அடிப்படைப் பொருட்கள் போன்ற உடனடி நன்மைகளை அவர்கள் காண்பதுடன் அவர்கள் திருப்திடைந்து விடுகின்றனர். தினமும் அவர்கள் எதிர்நோக்க வேண்டிய பிரமாண்டமான பௌதிக, மனோசவால்களுடன் ஒப்பிடும் போது தமது சுற்றாடலிலிருந்து கிடைக்கப் பெறும் சிறு நன்மைகூட அவர்களுக்கு பெரும் வெகுமதியாகும். தண்ணீர் போன்ற ஒரு அடிப்படைத் தேவைக்காகக் கூட அவர்கள் வீதியோரக் குழாயடியில் தமது முறைவரும் வரை காத்திருக்க வேண்டும். வீதிக் குழாயொன்றிற்கு 50 குடும்பங்கள் என்ற அடிப்படையில் குடும்பங்கள் நீருக்காக வீதிக் குழாயில் தங்கியிருக்கின்றன!. கல்வியின் மூலம் உயர் அந்தஸ்து, வருமானம், தொழில்கள் பெறுதல் என்ற மத்திய வகுப்பினரின் இலக்குகளை அடைதல் என்பது, படிப்பதற்கு ஒரு ஒழுங்கான மூலை கூட இல்லாது, ஒழுங்கான ஆகாரம் இன்றி, பள்ளி செல்வதற்கான போதிய ஆடைகள், பாடசாலை உபகரணங்கள் என்பன இன்றி இருளடைந்த சிறு குடிசைகளுள் வாழும் சேரி வாசிகளுக்கு இலகுவானதொன்றன்று. நன்கு உண்டு, உடுத்தி பாடபோதனை பெற்று வரும் மத்திய வகுப்புக் குழந்தையுடன் போட்டியிட்டு வெற்றி பெறுவது ஒரு சிலருக்கே முடிந்த காரியமாகும். எனவே ஆரம்பக் கல்வியைப் பெறுவது பெரும் சாதனையாகும். சேரிகளில் வாழும் 47% சதவீதமானோர் ஆரம்பக் கல்வியையும் 3% சதவீதமானோரே க. பொ. த. (சா-த) வரையிலும் கல்வி கற்றுள்ளனர். இலங்கை முழுவதும் இலவசக் கல்விமுறை அமுல்நடத்தப்பட்ட போதிலும் இவ்விலவச வசதியைப் பயன் படுத்திக் கொள்ள வாய்ப்புக்கள் இல்லாமையே இதற்குக் காரணமாகும். மத்திய வகுப்பினர் முயற்சிப்பது போல் சேரி வாசிகள் தமது சுற்றாடலை யிட்டு நன்கு ஆராய்ந்து எதிர்காலத்துக்காகத் திட்டமிடும் பணிகளில் முயற்சிக்காமை காரணமாக அவர்களது சுய நடை முறை பிரதிக்கிரியைகளுடன் சமூக ஒருமைப்பாடு நெருங்கிய தொடர்புடையது. எனவே அவர்களது வகை சமூக கலப்பு சிறப்பு வாய்ந்தது. ஒழுங்கான ஒரு தொழில் அல்லது ஓய்வூதியம் போன்ற வருவாய் காரணமாக ஏனைய சேரி வாசிகளை விடவும் சற்று சிறந்த வாழ்க்கையுடைய சேரி வாசிகள், தமது மத்திய வகுப்பு அந்தஸ்து அடையாளங்களான பொருட்களின் சேகரிப்பால் தம்மை ஏனையோரிலிருந்து வேறுபடுத்திக் காட்ட முடியும் எனினும், தம்மை ஏனையோரிலிருந்து வேறுபடுத்திக் கொள்வதில்லை. நெருக்கமாக வாழ்வதும், தொடர்ச்சியான சமூக கலப்பும், வீட்டின் அமைப்பு மாதிரியும் ஆட்களுக்கிடையேயான சமூக உறவு விடயத்தில் சமூக கலப்பிலுள்ள வேறுபாடுகளை அகற்றுவதை நாம் இங்கு காணலாம். ஏனையோருக்கு உதவுவதற்கான ஒருவரின் ஆவலை அடக்குவதற்கான விருப்பம், எமது உறவினர்கள் நண்பர்களைப் பொறுத்தளவில் நன்கு விருத்தியுற்ற ஒரு கோட்பாடாகும். ஆனால் இந்த வழக்கத்திற்கு மாறான வாழ்க்கைச் சூழ்நிலைகளிலன்றி அது இதுவரை சமூக இலட்சியமாகவில்லை. நகர்ப்புற வீடுகளில் வீடுகளின் கதவுகள் ஒன்றையொன்று முகம் நோக்கி நிற்பினும் கூட கதவுகள் பூட்டப்படும் போக்கே கையாளப்படுகின்றது. இவ்விதம் கதவு மூடியிருத்தல் மேற்படி குடும்பத்தின் அந்தரங்கம் பாதுகாக்கப்படுவதற்கும், விரும்பியவர்களை மாத்திரம் வீட்டினுள் அனுமதிப்பதற்கும், விருந்தினர்களை வீட்டினுள் அனுமதிக்குமுன் வரவேற்பறையை தூசு தட்டி ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும், உணவருந்திக் கொண்டிருக்கும் வேளையில வருந்தினர் வரின் அவர்கள் காணாது உணவினை மறைத்து விட்டு வந்து கதவு திறப்பதற்கும் உதவுகிறது. இத்தகைய வீடுகளில் சில சமயங்களில் விருந்தினர் வரவேற்புக் கூடமே பெரும்பாலும் சமூக சந்திப்புகளுக்கான கூடமாகவும் பயன்படுத்தப்படுகிறது. எதிரெதிரே கதிரைகள் போட முடியாத அளவு விராந்தைகள் ஒடுக்கமாக இருந்தால், சமூக கலப்புக்கு கதிரைகள் எதிரெதிரே போடப்பட வேண்டிய அவசியம் காரணமாக, இத்தகைய விராந்தைகள் சமூக சந்திப்புக்களுக்காகப் பயன்படுத்தப்படாது விராநதைகள் பூந்தோட்டமாக மாற்றப்படுவதுமுண்டு மேலும் விராந்தைகளுக்கு செல்வதாயின் பிரதான வீட்டினூடாகவே செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. இதுவும் சமூக சந்திப்புக்களுக்கு விராந்தைகள் பயன்படுத்தப்படுவதைக் குறைக்கின்றன.

வரவேற்பவறை விஷேட விருந்தினர்களுக்கெனக் குறிப்பிடப்பட்டிருக்கும். அழைக்கப்பட்ட விருந்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நண்பர்கள், உறவினர்கள் வந்தால் அவர்கள் இதிலேயே உபசரிக்கப்படுவர். சேரிகளில் தரப்பட்ட ஒரு இடமே பல சந்தர்ப்பங்களிளும், ஒரே சமவேளையிலும் பல நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. சமூக சந்திப்புகள், சமயல், உறங்குதல், உணவு உட்கொள்ளல், சூதாட்டம் என்பன எல்லாம் ஒரே இடத்திலேயே நிகழும். இவையெல்லாம் நடைபெறும் பொழுது அயலர்களும் வந்து கலந்து கொள்ள முடியும். இத்தகைய சமூக கலப்புகள், வீட்டுக்கு அவசியமான பொருட்களை அடிக்கடி கடன் கொடுக்கவும் வாங்கவும், சிலசமயங்களில் அதனால் மனககப்புக்கும், தமது அந்தரங்கங்களின் பாதுகாப்புக்கு ஊறுவிளைவிப்பதாகவும் அமைய முடியுமாதலால், மத்திய வகுப்பினரால் விரும்பப்படுவதில்லை சமூக உயர் மட்டத்தில் மதிப்போடு வாழ்வதாயின் சமூக இடைவெளி நீண்ட

(தொடர்ச்சி 32ம் பக்கம்)

1958 ம் ஆண்டின் இலங்கை வரலாற்று சமூக ஆய்வுகள் பற்றிய சஞ்சிகையில் ஜே. ஏ. ஜயசூரியாவும், சுந்தரி காரியவசமும் எழுதிய "கொழும்பு நகரில் கோஷ்டி நடவடிக்கையாக வாலிப குற்றங்கள்" எனும் கட்டுரை.

1973 ம் ஆண்டு கொழும்பு மாநகரசபையின், சேரிகள் பற்றிய அறிக்கையில் என். பி. பெரேரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேரிப் பிரச்சினை மீது ஒரு யதார்த்த பார்வை

ஒரு பிரதேசத்தை ''சேரி நகர்'' என நாம் அடையாளம் காண்பதற்கு நாம் கையாளும் பெறுமானத் தீர்ப்புகள் யாவை? மேற்படி பிரச்சினைக்கு நாம் தீர்வு காணும் போது இப் பெறுமானங்கள் எவ்விதம் எம் மீது செல்வாக்குப் பிரயோகிக்கின்றன?

பெரும்பாலான மக்களின் கண்களில் ''சேரி நகர்'' என்பது நகரின் மிக ஏழைகள் தாம் உறைவதற்காக மிகக் குறைந்த உறைவிட வசதியாக அமைத்துக் கொண்ட தற்காலிக குடிசைகள் நிரம்பிய பிரதேசமாகும். சன நெருக்கம், சுகாதாரமற்ற வாழ்க்கைச் சூழ்நிலைகள், ''தீய'' பண்புகள் நிரம்பப் பெற்று வாழ்வோராகவே அவர்கள் பண்படையாளம் காட்டப்படுகின்றனர். சேரிகள் பால் இத்தகைய எதிர் மறைப் போக்குக்குக் காரணம் எம் மீதான மேற்குலகச் செல்வாக்கேயாகும். இறக்குமதித் தரங்களை அடிப்படையாகக் கொண்டே நாம் வீடுகளை அவற்றின் தரம் மதிக்கின்றோம். சேரி நகர்களை முற்றாகவே கண்டிக்கின்றோம். இதற்கான ஒரே ''தீர்வு'' சேரிகளை முற்றாக இல்லா தொழிப்பதேயெனத் தீர்மானம் செய்கிறோம். ''சேரி ஒழிப்பு'' என்ற கவர்ச்சியான சொற்றொடர் தலைப்பின் கீழ் செயற் திட்டங்கள் ஆரம்பிக்கப் படுகின்றன. இத் திட்டங்கள் எல்லாம் பெரும்பாலும், மக்களின் சமூக - பொருளாதார கலாச்சார முறைகளுக் கொவ்வாத மேற்குலக தரத்தின் அடிப்படையிலானதும், மிகவும் செலவு மிக்கதுமான வீடுகளை அமைப்பதற்காகும். இச் சிந்தனைக்கு மாறாக ''சேரி வாசி''யோ தமது சேரியை தமது வீடென்றும், தமது பிரதேசம் சமுதாயத்துடன் ஒருமைப்பாடடைந்த ஒரு பிரதேசமென்றும் கருதுகின்றான்.

சேரி வாசிகள் வேண்டத்தகாத ஒரு குழுவினர் என்றும் அவர்கள் நகரின் பொருளாதாரத்திற்கு எவ்வித பங்களிப்பும் செய்யாமல் அதன் சேவைகளில் பெரும்பங்கினை நுர்கவதாயும், எனவே அவர்களை கிராமப்புறங்களில் குடியமர்த்துவதே பிரச்சினைக்கான தீர்வு என்றும் சிலர் கருதுகின்றனர். மரக்கறி வியாபாரிகள், கடலை வியாபாரிகள், வெற்றிலை வியாபாரிகள், சப்பாத்துத் தைப்போன், கூலித் தொழிலாளர்கள் என்போரின்றி யாரும் கொழும்பை கற்பனை பண்ணிப் பார்க்க முடியுமா? இவர்கள் தமது தொழிலுக்காக கொழும்பில் இருத்தல் அவசியம். அது போலவே நகரத்திற்கும் அதனது சேவைகளுக்காக இவர்கள் அவசியப்படுகின்றனர்.



வீடின்றி நிரந்தர வருவாயின்றி நகரில் வாழும் துயருறும் மக்கள் பாவனைக்கமைத்துள்ள இக் கொட்டில்களை ஒழிப்பது பிரதான பிரச்சினையாயுள்ளது. சேரி ஒழிப்பென்பது இவர்களை விரட்டுவதன்று இவர்களுக்கு ஒழுங்கான உறைதலம் அமைத்துக் கொடுத்தலாகும். வீடமைப்புத் திட்டங்களின் பிரதான இலட்சியம் இதுவாக வேண்டும்.

நன்கு தாபிக்கப்பட்ட சேரி நகரமொன்றான ஹேனமுல்லை முகாமில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வின் முடிவுகளின் அடிப்படையிலேயே இவ் வவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இம் முகாமுக்கான முதற் குடும்பங்கள், இரத்தினம் பார்க் திடலில் தீப்பற்றிய வீடுகளிலிருந்து, அருகிலிருந்த 1951 ல் கைவிடப்பட்ட இராணுவ முகாம் கட்டிடங்களில் தஞ்சம் புகுந்த குடும்பங்களைக் கொண்டதாகும். இவர்களையடுத்து வெள்ளத்தினால் வீடிழந்தோரும் இதில் குடியேறினர். பின்னர் இவ்விடம் புகலிடம் அற்ற குடும்பங்களுக்கு பொதுக் குடியேற்றத் திட்டமாக மாறியது. இன்று இங்கு சுமார் 7.7 ஏக்கர் நிலப் பரப்பில் 530 வீடுகளில் 3200 பேர்கள் வாழ்கின்றனர். மாடியமைப்பு முறையல்லாத தனி வீடுகளில் வாழும் இம் மக்களின் செறிவு ஏக்கருக்கு 400 பேர் என்ற வீதத்தில் அமைந்துள்ளது.

இவ் வீடுகளில் வாழும் சுமார் 90 சதவீதமானோர் இதற்குமுன் கொழும்பில் அல்லது கொழும்புக் கண்மையில் வாழ்ந்துள்ளனர். சுமார் 40 சதவீதமான குடும்பங்கள் மாதம் 200 ரூபாவுக்குக் குறைவாகவும், 45 சதவீதமானோர் ரூபா 200 க்கும் 400 க்கும் இடைப்பட்ட தொகையையும் சம்பாதிக்கின்றனர். மிகவும் குறைந்த வருமானமுடைய குழுவினர் தமது உறைவிடத்துக்காக மாதம் 15 ரூபா வரையும், 200 ரூபாவுக்கும் 400 ரூபாவுக்கு மிடைப்பட்ட வருமான முடையோர் மாதம் 25 ரூபா வரையும், அதை விட கூடிய வருமானம் உடையோர் மாதம் 35 ரூபா வரையும் மாத்திரமே செலவிடக் கூடியவர்களாயுள்ளனர். குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் அதிகரிக்கும் போது குடும்பத்தின் அளவும் அதிகரித்ததாயும் எனவே தனி நபர் சராசரி வருமானமும் விளிம்பளவே அதிகரித்ததாயும் மேற்படி ஆய்வு காட்டியது 60 சத வீதமான கூலி வருவாய் பெறுவோர் சுய தொழிலில், அல்லது சமயாசமய கூலிகளாக பணி புரிவதில் ஈடுபட்டுள்ளனர். எனவே அவர்கள் தொழிற்துறையின் பிரமாண்டமான "உருவகமற்ற துறை" யின் ஒரு அங்கமாவர். தம்மை சுய தொழிலில் அமர்த்திக் கொண்டோருக்கு சேரிகளே தமது வேலைத் தளங்களாகும். பாதை யோரங்களில் விற்பதற்காக அவர்கள் உணவு சமைக்கின்றனர். பீடி சுற்றுகின்றனர். அல்லது பப்படம் தயாரிக்கின்றனர். அவையுமின்றேல் பல்வேறு துறை சிறு கைத்தொழில்களில் ஈடுபடுகின்றனர். தமது வருமானத்தையும் உணவினையும் சிறப்புறச் செய்வதற்காக அவர்கள் கோழிகள், ஆடுகள் வளர்க்கின்றனர்.

சேரிப் பிரச்சினை குறித்து நாம் மீள ஆராய வேண்டியுள்ளது. சேரி ஒழிப்புத் திட்டங்களை மறந்து விட்டு அதனை நேராகவும் யதார்த்த ரீதியாகவும் நோக்கி இப் பிரதேசங்களை அபிவிருத்தியுறச் செய்வதற்காக உள்ளூர் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

---

## கொழும்பு நகரில் சேரிகள்

கொழும்பு நகரின் மத்தியத் தானத்திலிருந்து சுமார் அரை மைல் தூரத்தில் அமைந்துள்ளதே கும்பனித் தெரு. அது முழு இலங்கைத் தீவிலும் உள்ள மிக மோசமான சேரிகளை உள்ளடக்கியுள்ளது. மேற்படி சேரிகளில் வாழ்வோர் மிகச் சொற்ப வருவாய்களுடன், மிக நெருக்கமாயும், கைத்தொழில் அசுத்தங்கள் மற்றும் இப் பகுதியூடு நடைபெறும் கடினமான போக்குவரத்துக்களினால் ஏற்படுத்தப்படும் சுகாதாரமற்ற சூழ்நிலைகளிலுமே வாழ்கின்றனர். பெரும்பாலும் தமது வருமானத்தின் 80 சத வீதத்தை உணவுக்காகவும் ஏனையதை சமையலுக்கான எரிபொருள், விளக்கேற்றல், உடை என்பவற்றிற்காகவும் ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்காக எதுவு மற்றும் அவர்கள் வாழ்கின்றனர்.

எவ்வாறாயினும் இப் பகுதியின் பெரும்பான்மையினர் இப் பிரதேசத்திலேயே வாழ வேண்டுமென்ற விருப்பினாலேயே வாழ்கின்றனர். நகருக்கு வெளியே மாற்று வீடமைப்புக்கான எத்தகைய ஆலோசனையையும், அவ் வீடமைப்புத் திட்டங்கள் எத்துணை கவர்ச்சிகரமான போதினும் சரியே, சாதாரண சேரிவாசி நிராகரித்து விடுகிறான். இதற்கான பிரதான காரணம் என்னவெனில் நகருக்கு அடிக்கடி அமய தொழிலாளர்கள் தேவைப்படுவதும், சகல வகையினதுமான சேவை ஊழியர்கள் தேவைப்படுவதும் மேலும் வாழ்க்கை ஊதியத்தை பல வழிகளில் சம்பாதித்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் பெருமளவு இருப்பதும் சேரி வாசிக்கு தனது வாழ்க்கை ஊதியத்தைச் சம்பாதிப்பதற்கான வழியமைத்துக் கொடுத்தலுமாகும்.

இப் பிரதேசத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றிலிருந்து எடுக்கப்பட்ட உதாரணங்களின் மூலம், குடும்பங்கள் இப்பகுதியில் வாழும் சகிக்க முடியாத வாழ்க்கைத் தரங்கள் விளக்கப்பட்டுள்ளன. அவர்களது வசிப்பிடங்கள் ஒரே வரிசையாக அமைந்த வீடுகளாகும். இக்கட்டிடங்கள் பராமரிப்புக் குறைவினாலும் தீவிர பயன்படுத்தலினாலும் மிகவும் மோசமான வீழ்ச்சியுற்ற நிலையை அடைந்துள்ளன. முழுப் பரப்பும் 240 சதுர அடியாகும். இது இரண்டு அறைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் ஒரு குடும்பம் உறைகின்றது. வெளிச்சமும் காற்றோட்டமும் எல்லாம் கதவின் மூலமாகவே பெறப்படுவதோடு அலங்காரம் எல்லாம் முன்புறச்சுவரிலாகும். ஒரு அறையில் ஐவருக்குக் குறையாது வாழ்கின்றனர். அவ்வீட்டில் ஆகவும் வயதில்கூடிய நபர் 68 வயதுப் பாட்டியாவர். அவருக்கு திருமணம் முடிக்காத 20, 28 வயதுப் புதல்வர்கள் இருவர் உள்ளனர். இருபுதல்வர்களும் வேலையாட்களாக தொழில் புரிந்து மாதம் மொத்தமாக 120 ரூபா சம்பாதிக்கின்றனர். அதில் 90 ரூபாவை மேற்படி குடும்பம் உணவிற்காகச் செலவு செய்கிறது மேற்படி பாட்டிகடந்த 28 வருடங்களாக அதே அறையில் வாழ்ந்து வருகிறார்.



சுகாதார வசதிகளெதுவுமின்றி நெருக்கமான பிரதேசங்களில் வாழும் சேரிவாசிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென் ஆசிய வீடமைப்பு அமைச்சர்களின் மகாநாடு 1975

தென்னுசியப் பிரதேசத்து வீடமைப்பு அமைச்சர்களின் மகாநாடுகளைக் காலத்துக்குக் காலம் கூட்ட வேண்டுமென்ற விதப்புரை தொடர்பாகப் பாக்கிஸ்தான், நேபாளம், மாலைதீவு, ஈரான், இந்தியா, பர்மா, பங்ளாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகியனவற்றுடன் தொடர்புகொள்வதில் ஸ்ரீ லங்கா முன்னேடியாக விளங்கியது. நாடுகள் யாவும் இதற்கு ஏகமனதாக ஒருப்பட்டன. முதல் மகா நாட்டுக்குரிய களமாக ஸ்ரீ லங்கா தேர்ந்தெடுக்கப்பட்டது.

இவ்வாரம்ப மகாநாடு கொழும்பில் 1975 மேயில் கூட்டப்பெற்றது. பங்ளாதேஷ், இந்தியா, நேபாளம், பாக்கிஸ்தான், ஸ்ரீ லங்கா என்பன கலந்து கொண்டன. இம் மகாநாடு இந்நாடுகளில் வீடமைப்புப் பிரச்சினை எதிர்கொளப்பெறும் வகை பற்றிய அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளவும், பிரதேசக் கூட்டுறவுக் கோட்பாட்டை வலுப்படுத்திக் கொள்ளவும் உதவியது.

இங்கு ஆராயப்பெற்ற பல்வேறு விடயங்களுள் பின்வருவன குறிப்பிடத்தக்கவை:—

* பிரதேச நாடுகளிடையே பரஸ்பரக் கலந்தாலோசனையையும், ஒத்துழைப்பையும் ஊக்குவிக்க வீடமைப்பு ஓர் அரிய துறையாக விளங்கலாம்.
* பிரதேச நாடுகளின் வீடமைப்புப் பிரச்சினைகள் பெருமளவுக்கு ஒத்த தன்மையன.
* பிரதேச அரசுகள் தனித்தனியாக வகுத்துக் கொண்ட வீடமைப்புக் கொள்கைகளிலும், மேற்கொண்ட முறைகளிலும், வீடமைப்பு வளர்ச்சிக்கென அமைந்த நிறுவனங்களிலும் பல ஒற்றுமைகள் தோற்றுகின்றன.
* உலகின் ஏழைகளுள் பெருந்தொகையினர் வாழும் இப் பிரதேசத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பொருளாதார விருத்தியை ஊக்கவும் ஒரு கருவியாக வீடமைப்புப் பயன்படலாம்.

  வீடமைப்புக்கான மூலவளங்களை ஒதுக்கும்போது குறைந்த வருவாய் உழைப்போரது தேவைகளுக்கு முதன்மையளிக்க வேண்டும்.
* கொழும்பு மகா நாட்டின் முன்னேடிப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்துச் சென்று, பரஸ்பர நலன் கருதி எத்தகு பிரச்சினைகட்கும் எல்லா மட்டங்களிலும் வழமையாகக் கலந்துரையாடுதல் மிக முக்கியமாகும்.
* இனி மேற்கொண்டு வீடமைப்பு அமைச்சர்கள் மகாநாடு பொருத்தமான இடைவெளிகளில் நிகழ வேண்டும். உதாரணமாக ஈராண்டுகளுக்கு ஒருதரம்.

மேலும் வீடமைப்பு அமைச்சர்கள் பின்வருவனவற்றைச் செயல்படுத்துமாறு தத்தமது அரசுகளுக்குச் சிபாரிசு செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது:—

* பிரதேச நாடுகளின் பொருளாதார முதலீட்டில் வீடமைப்பு முக்கியத்துவமிக்க ஒரு தானத்தை வகிப்பதால் பிரதேச அரசுகள் மக்களின் அபிலாசைகளைக் கருத்திற்கொண்டு போதிய அளவு முதலீட்டு வீதத்தை எய்தத் தொடர்ச்சியாக முயல்வதுடன், அதற்கு ஆகக் கூடுதலான ஊக்கத்தைச் செலுத்த வேண்டும்.
* ஒவ்வொரு நாடும் தனது சமூக பொருளாதார நிலைகட்கமைய வீடமைப்புக் கொள்கையை உருவாக்கிக் கொண்டு, அத்தகைய கொள்கைகளை ஒருமித்த அபிவிருத்தித் திட்டங்களுடன் ஒருங்கிணைக்க வேண்டும்.
* பிரதேச அரசுகள் வீடமைப்புக்குப் போதியளவு மூலவளங்களை ஒதுக்கவும், இவ் விடயத்தில் குறைந்த வருமான முழைப்போருக்கு முதன்மையளிக்கவும் வேண்டும்.
* வீடமைப்புக்கான திட்டமிடலுடனும் நெறிப்படுத்தலுடனும், அத்தகைய கொள்கைகளதும், திட்டங்களதும்

(தொடர்ச்சி 32ம் பக்கம்)

## சுய உதவி வீடமைப்புத் திட்டங்கள்*

சுய உதவி வீடமைப்பு திட்டங்கள் இதர திட்டங்களுடன் ஒப்பிட்டு நோக்குகையில் செலவு குறைந்தனவாகவும், அதிகம் பிரசித்தம் பெற்றவைகளாகவும் விளங்குகின்றன. இவ் வீடுகளில் குடியிருக்கப் போகும் மக்களுக்கு நிலம், வீடமைப்பு வரைபடம், கட்டிடப் பொருட்கள், தொழில் நுட்ப ஆலோசனை ஆகிய அனைத்தும் வழங்கப்படுகின்றன. குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் தங்களது வீடுகளை நிர்மாணித்துக் கொள்ள, அவற்றில் குடியிருக்கப் போகிறவர்கள் தங்களது சரீர உழைப்பையும், ஒத்தாசையையும் நல்க வேண்டும். இத் திட்டத்தின் வெற்றி அவற்றில் குடியிருக்கப் போவோரின் ஒத்துழைப்பிலும், சகல வீடுகளையும் கட்டி முடிக்கும் வரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகளில் எவரும் குடியிருக்கக் கூடாது என்ற கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துவதிலும் தான் தங்கியுள்ளது.

இத்தகைய சுய உதவி வீடமைப்பு திட்டமொன்று வத்தளை ஏகித்தையில் உருவாக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் 45 வீடமைப்புகள் இருக்கின்றன. பெரும்பாலான வீடுகள் இரட்டை வீடுகளாகும். வீடுகள் அனைத்தும் செங்கற்களால் கட்டப்பட்டு, ஓடுகளினுல் வேயப்பட்டவை. ஒவ்வொன்றும் 7 பேர்ச்சஸ் நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ளன. முழு வீடமைப்புத் திட்டத்திற்கும் இரு பெரிய பொதுக் கிணறுகள் இருக்கின்றன. ஒவ்வொரு வீடும் தனக்கென ஒரு குழி மலசலகூடத்தைக் கொண்டுள்ளது. இந்த வீடுகளில் குடியிருப்போர் பெரும்பாலும் அப் பகுதியில் முன்பு குடியிருந்தவர்களே. அரசாங்கத்தில் தொழிலாளர்களாக வேலை செய்வோர், வெலிச்சரை ஆஸ்பத்திரி சிற்றூழியர்கள், லக்ஸ்பிரே மாவு அடைக்கும் தொழிற்சாலை ஊழியர்கள் இத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். ஒரு ஒழுங்கான வருவாய் இருக்க வேண்டுமென்பது இத் திட்டத்தில் பங்குகொள்வோருக்கு விதிக்கப்பட்ட நிபந்தனையாகும். இவ் வீட்டுச் சொந்தக்காரர்களின் மாதாந்த சராசரி வருமானம் 300 ரூபாவாகும். இதில் அவர்கள் மாதாமாதம் 15 ரூபாய் வீதம் திரும்ப செலுத்த வேண்டும்.

இத் திட்டத்தில் குடியிருப்போர் பொதுவாக திருப்தியைத் தெரிவித்த போதிலும், இரட்டை வீடுகளாக இவற்றை அமைத்ததைவிட தனிவீடுகளாக அமைத்திருந்தால் தங்களது வீட்டு இரகசியங்கள் அடுத்த வீட்டுக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் எனத் தெரிவித்தனர். இத் திட்டத்தின் நில விஸ்தீரணமும் மிகக் குறைவாகும். இதனுல் இவர்களது வருவாயை அதிகரித்துக் கொள்ளவும் உணவுக்கு பயன்படுத்தவும் கூடிய காய்கறிகளையோ, கோழிகளையோ வளர்த்துக் கொள்ள இயலவில்லை.

இத் திட்டத்திலுள்ள வீடுகளுக்கு பின்புறத்தில் மரத்தளபாடங்களினுலான சமையலறைகள் கட்டப்பட்டுள்ளன. இதற்கான பண உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த பண உதவிகளை பெற்றுக் கொள்வதில் சில சங்கடங்களும் இருக்கின்றன. இங்கு குடியிருப்போர் தங்களுக்கென தனி தண்ணீர் விநியோகதிட்டத்தையும் மின்சார தொடர்பையும் விரும்புகின்றனர்.



* எ. எல். எஸ். பெரேரா, எஸ். ஏ. ராஜகருண, டபிள்யூ. ஏ. சிறிவர்தன ஆகியோரால்.

# டச்சுக்காரரின் அபிவிருத்திக் கொள்கை

இள வயதினரான ஜான் புறங்கை (36 வயது) அபிவிருத்திக் கூட்டுறவு அமைச்சராகக் கொண்ட நெதர்லாந்து அரசாங்கம், கடந்த இரு வருடங்களுக்குள் அபிவிருத்தி குன்றியமைக்கான ஆழமான அமைப்பியல் காரணங்களுக்கு நினைவுறுத்தத் தக்க விளக்க மொன்றைக் காண்பித்துள்ளது. அது அதன் கொள்கைகளை குறிப்பிடத்தக்களவுக்கு மாற்றி அதன் பல செயல்களிலும், நடவடிக்கைகளிலும் (விசேடமாக ஐக்கிய நாடுகள் சபையிலும், ஏனைய முகவர் நிலையங்களிலும் நெருக்கடியான நிலையில் வாக்களித்தது சம்பந்தமாக) மூன்றாவது அகில நாடுகளின் அப்பழுக்கற்ற நண்பனாக இப்பொழுது தோன்றியுள்ளது. எமது முன்னைய காலனித்துவ எஜமானர்களில் ஒன்று தனது கொள்கையை மாற்றியுள்ளமையை வரவேற்பதோடு மெச்சவும் செய்கிறோம். டச்சு அரசாங்கப் பிரசுரமான ''நெதர்லாந்து அபிவிருத்திக் கொள்கை — 1974'' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை கீழே தரப்படும் பந்திகள் ஆகும். அப்பிரசுரம் அபிவிருத்தி குன்றியமைக்கான பிரதான காரணிகளையும், அமைப்பியல் நியாயங்களையும், நெதர்லாந்தின் புதிய கொள்கைகளையும் வலியுறுத்துகிறது. மூன்றாவது அகில நாடுகளின் அபிவிருத்திக் கோட்பாட்டிலிருந்து தூர விலகிச் செல்லாத பல விஷயங்கள் இவ் ஆவணத்திலுண்டு. இவ்வாவணம் மிகவும் வலிமை பொருந்தியதும் துணிச்சலானதுமாகும். பொருளியல் நோக்கின் வாசகர்கள் இக் கோட்பாடுகளுக்கும், மூன்றாவது அகில நாடுகளின் புதிய போக்குக்கு மிடையில் பாரிய ஒற்றுமைகளைக் காணலாம்.

### அபிவிருத்திப் பிரச்சினை

அபிவிருத்தியின் பிரச்சினைகள் ஒரு முட்டுக்கட்டையில் வந்தடைந்துள்ளன. அபிவிருத்திப் பிரச்சினைகளை சாடுவதற்கு எடுக்கப்பட்ட ஆய்வுகளும், மாதிரிகளும், போதாதவையாக நிரூபணமாகியுள்ளன. உதாரணமாக அரசுகளுக்கு இடையிலான அதிகார உறவுகளும், நாடுகள் மத்தியிலான அதிகாரத் தாங்கு மிகுதிகளும் அவற்றிற்கான மாதிரிகளில் அதிக கவனத்தைப் பெறவில்லை. அபிவிருத்தி முறையின் சமூக பொருளாதாரக் கூறுகளுக்கிடையிலான வளர்ச்சிக்கும் விநியோகத்திற்கும் இடையிலும் வர்த்தக நாணய அமைப்புக்களின் செல்வாக்குகளுக்கு மிடையிலுமான உறவுகளைப் பொறுத்தவரையிலும் இது உண்மையாகவே யுள்ளது. இதன் பயனாக உண்மையான நிலையின் ஒரு பகுதி கருத்துக்கெடுக்கப்படாது விடப்பட்டுள்ளது. நாம் உபயோகிக்கும் ஆய்வு யதார்த்த நிலையை சரியாக பிரதிபலிக்காதிருப்பதை இது கருதும். அதாவது சில நடவடிக்கைகளில் ஆகக் குறைந்தது அவை ஆற்றலற்றவையாய் இருப்பதுடன் அவற்றை அடியொற்றிய கோட்பாடுகள் மறு பரிசீலனைக்கு இடனாயுமுள்ளன இவை யெல்லாம் அபிவிருத்திப் பிரச்சினையை புதிதாக ஆராய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றன. சமீபத்திய வருடங்களில் புதிய ஆய்வொன்றில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இப்போது அவை வேகப்படுத்தப்பட்டுள்ளன. அதிகார உறவுகளுக்கும், அரசியலுறவுகளுக்கும் அபிவிருத்திப் பிரச்சினையின் உலகளாவிய குணாம் சத்துக்கும் ஒரு தெளிவான இடத்தை வழங்கும் புதிய விஞ்ஞானக் கோட்பாடுகளில் மீள்மூலநிலைப்படுத்தல் ஒரு விளக்கத்தைக் காண்கிறது. அரசியல் ரீதியாக மீள்மூல நிலைப்படுத்தல் அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகள் மத்தியிலேயே பரஸ்பர கலந்துரையாடல்களின் பேரில் இடம் பெறுகிறது. மேலும் சர்வதேசக் கலந்துரையாடல்களில் மிகச் சிறிய அளவிலான இயைபுபடுத்தலே இருந்து வந்துள்ளது. ஐ. நா. அபிவிருத்தி உபாயத்தின் சரிசெய்வனவு சம்பந்தமான கலந்துரையாடல்களில் சில அளவுபடிகள் ஸ்தாபன ரீதியாக்கலே இப்போது அடையப்பட்டுள்ளன: இத்தகைய கலந்துரையாடல்களின் போது புதிய கருத்துக்களும் புதிய கோட்பாடுகளும் முன்வைக்கப்பட்டு அவை இப்போது சர்வதேசக் கொள்கை யாக்கங்களில் புகுத்தப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து இதன் தோற்றம் இப்போது சற்றுத் தெளிவாகவும் ஓரளவுக்கு செயல்பாட்டுச் சாத்தியமாகவும் காணப்படுகிறது. புதியதும் போதுமானதுமான ஒரு ஆய்வையும் கோட்பாட்டையும் அடைவதற்கும் அது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுதற்கும் இன்னும் நீண்ட இடமிருக்கிறது.

இத்தகைய ஒரு மீள்மூலநிலைப்படுத்தல் ஒரு கஷ்டமான வழிமுறையாகும். அதே நேரத்தில் உடனடி நடவடிக்கைக்கும் உடனடி அபிவிருத்திக்குமான விருப்பொன்றுமுளது. அடுத்து, இறுக்கமான சாத்தியப் பாங்கிற்கும் தலையீட்டிற்குமிடையில் பதற்ற நிலை ஒன்று தோன்றியுள்ளது. புதிய ஆய்வில் ஆகக்கூடிய அளவு மக்களையும் குழுக்களையும் ஈடுபடச் செய்வதனாலும் கலந்துரையாடலை இயலக்கூடிய அளவுக்கு பகிரங்கமாவதற்கு அனுமதிப்பதனாலுமே இது தவிர்க்கப்படலாம். பொது ஜன அபிப்பிராயத்தை வளர்ப்பதற்கும் அறிவுறுத்துதற்குமென அமைக்கப்பட்ட கொள்கையின் குறிக்கோளாக இது அமையும்.

### விடுதலை — சுதந்திரம்

ஐ. நா. பொருளாதார, சமூகக் குழுவில் நெதர்லாந்து இத்தகைய ஒரு விலகு கோட்பாட்டை வசதி குறைந்த நாடுகளுடன் இனம் காண்பதாக வரைவு காட்டியுள்ளது. செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் வறிய நாடுகளுடன் இனம் கண்டு இந்நாடுகளின் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களினை உணர்வதாக இது பொருள்படும்.

இந்த இலக்கை அடைவதற்கு அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகள் சம்பந்தமான எமது கொள்கை தற்போதைய படிமுறையில் இந்நாடுகளின் உண்மையான சுதந்திரத்தை யடைவதன்பால் திடுப்பப்பட்டுள்ளது. இத்தகைய சுதந்திரம் நியாயமானதும் அமைதியானதுமான, சர்வதேச சமூசத்திற்கு அத்தியாவசியமான தொன்றாகும். ஏனெனில் சுதந்திரத்தின் அடிப்படையிலேயே மக்களது சுயநிர்ணய உரிமை பெறப்படலாம். நீடிக்கக் கூடிய சர்வதேச முறைமைக்கும் ஒப்பந்தத்திற்குமான ஒரே அடிப்படை சுதந்திரமாக இருப்பதனால் அவர்கள் அமைதியாயும் அந்நிய செல்வாக்கின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டுமிருந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமதையான ஒரு அடிப்படையிலேயே உலக பொருளாதாரத்தில் பங்கேற்றுக் கொள்ளலாம். மேலும் வறிய நாடுகளின் உள்நாட்டு அபிவிருத்தியைப் பொறுத்தமட்டில், விடுதலை மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் இவ்வறிய நாடுகள், உள்நாட்டில் நியாய பூர்வமான பொருளாதார சமூக உறவுகளில் பொறுப்பேற்றுக் கொள்வதாயின் அது ஒரு விடுதலை அடிப்படையிலேயே சாத்தியமாகும்.

அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளின் விடுதலை என்றால் அந்நாடுகளுக்கு உலகத்தில் புதிய ஒரு இடம் கிடைக்கிறது என்று பொருளாகும். புதிய இடமொன்றைப் பெறுவதற்கு அரசியல் பொருளாதார அதிகார உறவுகளைக் கொண்ட ஒரு முழு வலைப்பின்னல் அதிலே சம்பந்தமாகிறது. இவை யெல்லாம் புறத் தொடர்புகளாய் இருக்கும் வரையில், வெளி விவகார அரசியலென்று பாரம்பரியமாக விவரிக்கப்பட்டவற்றிற்கு அவை சமானமானவையாகலாம். வரைவிலக்கணப்படி பார்த்தால் கூட அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளின் பிரச்சனை ஒரு வெளி விவகாரக் கொள்கை விடயமாக இருக்குமேயன்றி அதிலிருந்து வேறுபடுத்தத் தக்க ஒன்றாக இருக்கமாட்டாது என்று கருதப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் அபிவிருத்திக் கூட்டுறவும், வெளி விவகார கொள்கையும் ஒரே தன்மைத்தானவையே அன்றி ஒன்றிற்கு ஒன்று எதிரானதாய் இருக்க முடியாது.

உலகில் அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகள் ஒரு புதிய இடத்தை பிடிப்பதென்பது உலக அதிகாரத்தினதும் செல்வச் செழிப்பினதும் புனர்ப் பங்கீட்டுப் படிமுறை ஒன்று அதில் சம்பந்தப்படுகிறது. இத்தகைய வளர்முறை பின்னர் அரசியல் காலனித்துவ ஒழிப்பை முதல் நடவடிக்கையாகக் கொள்ளும் சர்வதேச நிலவர மாற்றங்களை கொண்டுவரும். இத்தகைய நிலையை ஏற்படுத்தவெனக் குறிக்கோளிடப்பட்ட கொள்கை விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு தேடுவது போன்ற அரசியல் நடவடிக்கைகளுக்கான தேவையை ஏற்படுத்தும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் விடுதலையை நிரூபணமாக்கும் உண்மைச் சுதந்தரம் என்பது, அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட, குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை அனுபவிக்க வழிவகுக்கும், ஒன்று என்று பொருள்படும். அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டவர்களாய் அவர்கள் தாமே தங்களுக்கு பொருத்தமான சமுதாய முறை ஒன்றை தெரிந்தெடுத்து அதன் கீழ் மக்கள் விருப்புகளைக் கூடிய அளவிற்கு வலியுறுத்திக் கொள்ளலாம். எத்தகைய சுதந்திரத்தை நோக்கி முன்னேறுகையில் இயலக் கூடிய அளவிற்கு அன்னிய செல்வாக்கினை உதறித் தள்ளுவதன் மூலம் அவர்கள் அதிகபட்ச விடுதலையை பெற விரும்புவார்கள். அப்படி செய்யும் பொழுது இயலக் கூடிய இடங்களில் அவர்கள் தமது சொந்த நிதானத் தேர்வின் மூலம் ஒரு அபிவிருத்தி மாதிரியை கண்டு கொள்வார்கள். சுயநம்பிக்கை என்ற பதத்தின் வழிப்பட்ட இத்தகைய கொள்கையில் அபிவிருத்திக் கூட்டுறவு ஒரு பேற்றுக் காரணியாகும். உதவி உபயோகப்படும் சூழ்நிலைக்கு இக் காரணி ஒரு மாற்று நிலையாக உபயோகமாக வேண்டும்.

ஏற்றுக் கொள்ளும் நாடுகளின் சுதந்திரத்தை ஆகக் குறைந்தளவே பாதிக்கக் கூடியதாக அபிவிருத்தி உதவிகளை மேற்கொள்வதிலும் சர்வதேச பொருளாதார அமைப்புகளில் மாற்றங்கள் செய்வதன் மூலமும் அதிகப்படியான பொருளாதார சுதந்திரத்துக்காக நெதர்லாந்து கரும மாற்ற வேண்டுமென்பதும் இதன் அர்த்தமாகும்.

எனவே, சுயாதீனத்தை ஆதரிக்கும் ஒரு கொள்கை, வர்த்தக, அரசாங்கத் தொடர்பற்ற முதலீடுகளில் எந்தப் பிடியும் வைக்காத பொது உதவியையும், கட்டுப்படுத்தப்பட்ட உதவிகளுக்கு கட்டுப்பாடில்லாத உதவிகளையும், கடன்களுக்கான கொடைகளையும் திட்ட உதவிகளுக்கு திட்டமிடப்பட்ட உதவிகளையும் மிகையாக விரும்பும்.

அபிவிருத்திக் கோட்பாடுகளின் வளவாய்களிலும், குறிக்கோள்களிலும் சர்வதேசக் கலந்துரையாடலை ஏற்படுத்துதற்கு முயலும் ஒரு கொள்கைக்கும் சுயாதீனத்தின் பால் நெறிப்படுத்தப்பட்ட ஒரு கொள்கைக்குமிடையில் நெருக்கடி தோன்றுவது சாத்தியமாகலாம். இவ்விரண்டு கொள்கைக் குறிக்கோள்களிலும் ஒன்றைத் தவிர்த்து இதை செப்பனிடுவது அடைய முடியாத ஒன்றாக இருப்பதினால் இந் நெருக்கடியை மறுப்பது இயலாத காரியமாகும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் புதிய நிலை செல்வந்த நாடுகள் அவற்றோடு கொண்டுள்ள தொடர்புகள் எல்லாவற்றையும் பாதிக்கவே செய்யும். இது சாத்தியபூர்வமாக நிரூபணமாக வேண்டின் இத்தகைய எல்லா உறவுகளுக்கும் அபிவிருத்தி உதவியும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்பது இதன் அர்த்தமாகும். இது வர்த்தகக் கொள்கையையும், முதலீட்டுக் கொள்கைகயும், புனரமைப்புக் கொள்கையையும் கல்விக் கொள்கை வலைப்பின்னலுக்குள் ஒரு தரிசன உணர்வூக்கத்தையும், சர்வதேச நாணயக் கொள்கையையும் அரசியல் துறைகளையும் இன்னும் குடியேற்றவாதிகள் தங்கிவரும் பிராந்தியங்களின் குடியேற்ற நீக்கத்தையும் பாதிக்கும். அபிவிருத்திக் கூட்டுறவு வலைப்பின்னலுக்குள் இத்தகைய அமைப்பியல் ரீதியான பிரச்சினைகளில் அதிகப்படியான கவனம் செலுத்தப்படும். அபிவிருத்திப் பிரச்சினையை தீர்ப்பதைப் பொறுத்தளவில் அவை பாரம்பரிய நிதி, தொழில்நுட்ப உதவிகளை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

தென்னாபிரிக்காவின் குடியேற்ற ஆதிக்கப் பிராந்தியங்களின் விடுதலை இயக்கங்களுச்கு, உதவிகள் வழங்கப்படும். இவ்வுதவிகள் விடுதலையடைந்த பிராந்தியங்களின் நன்மைக்கான கல்வி சுகாதாரம் போன்ற துறைகளில் மானித ரீதியாகவும் அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் வழங்கப்படும்.

**அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கொள்கை**

மேலும் தற்போதைய தசாப்தத்தின் ஆரம்ப வருடங்களில் செல்வந்த நாடுகளுக்கும் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளுக்கும் இடையிலான உறவுசள் சிறிய அளவிலேயே விருத்தி கண்டுள்ளன. உற்பத்தி உறவுகளை பொறுத்தளவில் அதன் அர்த்தத்திற்கு ஏற்றவாறு எந்த அபிவிருத்தியும் இடம் பெறவில்லை. அநேகமான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பிரதானமான கைத்தொழில்கள் செல்வந்த நாடுகளின் முதலீட்டாளர் கைகளிலேயே இருந்து வருகின்றன.

# விவசாயக் கொள்கையும் திட்டமிடலும்

இலங்கையைப் பொறுத்தவரை, விவசாய அபிவிருத்திக் கொள்கையின் முக்கிய நோக்கங்களை கீழ்க் கண்டவாறாக இனம் பிரிக்கலாம்: (1) தேசிய வருமான அதிகரிப்புக்கு உதவுவது; (2) வெளிநாட்டு நாணயமாற்றுப் பிரச்சினையைத் தீர்க்க உதவுவது; (3) நாட்டில் வளர்ந்து வரும் தொழிலாளர் தொகையில் ஒரு பகுதியரை ஈர்ப்பது. இந் நோக்கங்களுக் கேற்ப, உணவில் இறக்குமதி மாற்றுப் பொருள், ஏற்றுமதி விரிவாக்கம், விவசாயத்துறையை நவீனமயமாக்கல், நிலச் சீர்திருத்தம், பாரம்பரிய ஏற்றுமதிப் பயிர்ச் செய்கையில் உற்பத்தியாக்கம் ஆகிய உபாயங்கள் கையாளப் படுகின்றன.

இறக்குமதி உணவுகளுக்கு மாற்று உணவுப் பொருட்களைப் பெறும் ஒரு ஒருங்கிணைந்த முயற்சியாக விவசாயத்துக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. ஐந்து ஆண்டு காலத்துக்குரிய விரிவான யோசனைகள் உருவாக்கப்பட்டன. 1972 - 76 ஐந்தாண்டுத் திட்டம் விவசாயத்துறைத் திட்டமிடலுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது.

இலங்கையில் விவசாயத் துறைத் திட்டமிடலில் ஈடுபாடு கொண்ட பெரிய முகவர் நிறுவனங்கள் வருமாறு: விவசாய, காணி அமைச்சு, தோட்டத் கைத் தொழில் அமைச்சு, நீர்ப்பாய்ச்சன, மின்சக்தி பெருந்தெருக்கள் அமைச்சு, திட்டமிடல் தொழில் வாய்ப்பு, திட்ட நிறைவேற்று அமைச்சுகள். இவை ஒவ்வொன்றும் தன்கீழ் பல திணைக்களங்களையும் தாபனங்களையும் கொண்டுள்ளது.

நீர்ப்பாய்ச்சன, சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் உள்ள நீர்ப்பாய்ச்சன திணைக்களம் முன்னரே பண்படுத்தப்பட்ட காணிகளுக்கு திருந்திய நீர்ப்பாய்ச்சன வசதியும், புதிய காணிகளுக்கு நீர்ப்பாய்ச்சன வசதியும் அளிக்கும் பொறுப்பை கொண்டுள்ளது. இரு பெரிய பல நோக்க ஆற்று திட்டங்கள் சம்பந்தமான அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு இவ்வமைச்சு இரு சபைகளை (மகாவலி அபிவிருத்திச் சபை, ஆற்றுப் பள்ளத்தாக்தகு அபிவிருத்திச் சபை) நிறுவியுள்ளது.

விவசாயத் துறையின் மீது அரசாங்கம் மேற்கொண்டுள்ள கட்டுப்பாட்டின் அளவைப் பொறுத்தே திட்டமிடல், திட்ட நிறைவேற்றம் ஆகியவற்றின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது. விவசாயத்தின் பெரும் பகுதி தனியார் துறைக் கட்டுப்பாட்டில் இருக்குங்கால் அரசாங்கம் அபிவிருத்திக்கென பரந்த வழிகாட்டி முறைகளை முன்வைக்கலாம். எனினும் அண்மையில் இலங்கையில் உருவாக்கப்பட்ட விவசாயச் சட்ட திட்டங்கள் இந் நிலைமையை கணிசமான அளவுக்கு மாற்றியுள்ளன. இரு கட்டங்களாக நிறைவேற்றப்பட்ட காணிச் சீர்திருத்தச் சட்டம் (காணிச் சீர்திருத்த சட்ட இலக்கம் 1 - 1972, காணிச் சீர்திருத்த திருத்தச் சட்டம் இலக்கம் 39 - 1975) நாட்டில் உள்ள பண்படுத்தப்பட்ட நிலத்தில் கணிசமான அளவை தேசியக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளது. நாட்டிலுள்ள மொத்த பண்படுத்தப்பட்ட நிலத்தில் 20 - 25 சத விகிதமான அளவு என்று சொல்லக்கூடிய 10 லட்சம் ஏக்கர் நிலம் வரை அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது. இந்த நிலம் பெரும்பாலும் தேயிலை, ரப்பர், தெங்கு நிலமாகும். இந்நிலத்தை காணிச் சீர்திருத்த ஆணைக்குழு மூன்று வழிகளில் பகிர்ந்துள்ளது: குடும்பப் பண்ணைகள், கூட்டுப் பண்ணைகள், 'அரசாங்கப் பண்ணைகள்' (அதாவது அரசாங்க தோட்டக் கூட்டுத்தாபனம் போன்றவற்றால் நடத்தப்படும் பண்ணைகள்) ஆகியவற்றுக்காக பகிர்வது ஒருவழி; ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபைக்கு (ஜனவாசம்) பகிர்வது இரண்டாவது வழி; மலைநாட்டு கூட்டுறவு தோட்ட அபிவிருத்திச் சபைக்கு (உஸவாசம்) பகிர்வது ஆணைக்குழு மேற்கொண்ட மூன்றாவது வழியாகும்.

விவசாயத்தின் மற்றப் பிரிவான நெற்செய்கை, உப உணவுப் பயிர்ச் செய்கை, கால்நடை வளர்ப்பு ஆகியவற்றைப் பொறுத்தவரை, இப்பிரிவின் மீது திட்டமிடல் முகவர் நிறுவனங்களின் ஆதிக்கம் குறைவானதாகும். இப்பிரிவில் சிறிய குடும்பப் பண்ணைகள் அடங்கும். தேசிய இலட்சியங்களுக்கு ஏற்றவாறு இப்பிரிவில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம், குடியேற்றத் திட்டங்கள், புதிய காணிகளில் குடியமர்த்தல், மானியக் கொள்கைகள், விரிவாக்க நடவடிக்கைகள் போன்ற நடைமுறைத் திட்டங்கள் மூலம் முயன்றுள்ளது. திருந்திய விவசாய முறைகளை ஊக்கப்படுத்தி விவசாயத்தை நவீனப்படுத்தல் இக் கொள்கையில் ஒரு முக்கிய அம்சமாகும்.

திட்டங்கள் மாவட்ட நிலையில் அமையப்பெற்று நிறைவேற்றப்பட்டதால் மாவட்டநிலை நிர்வாகத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டது. மாவட்ட, பெரும்பிரிவு நிலைகளில் விவசாய இணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. விவசாய அபிவிருத்திப் பணிகளுக்கு அரசாங்க அதிபர் பொறுப்பாளி ஆக்கப்பட்டார். வருடாந்த உற்பத்தி நடைமுறைத் திட்டத்தைத் தயாரிக்கும் மூலப் பிரிவுகளாக பயிர்ச்செய்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இந் நடைமுறைத் திட்டம் விவசாய உற்பத்திக் குழுக்கள் மூலம் பெரும்பிரிவு நிலை நடைமுறைத் திட்டமாக்கப்பட்டது.

நாட்டின் விவசாயத்துறைத் திட்டமிடல் உபாயங்களில் அண்மைக் காலத்தில் காணப்படும் போக்குகள் கவனத்துக்குரியவை. அண்மைக் காலத்திய விவசாயச் சட்டங்கள், குறிப்பாக காணிச் சீர்திருத்தச் சட்டமும், விவசாய உற்பத்திச் சட்டமும் பாரம்பரிய நிலச்சுவாந்தார்க் கொள்கையை அகற்றி நிலத்தை உற்பத்திக்குப் பயன்படுத்தும் கொள்கையைப் புகுத்த முனைந்துள்ளன. சகல விவசாய நிலத்திலும் நல்ல நிர்வாக தரத்தை உறுதிப்படுத்துவதற்கு கிராமிய அமைப்புகளுக்கு விவசாய உற்பத்திச் சட்டம் விரிவான அதிகாரங்களை அளித்துள்ளது. இதன் மூலம் அச் சட்டம் நிலம் ஒரு தேசிய சொத்தாகக் கருதப்படுதல் வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்துகிறது. சமூகக் குறிக்கோள்களுக்கு ஏற்ப விவசாயத் திட்டங்களை அமைக்க இந்த சீர்திருத்தங்கள் வழிகாட்டின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் பாரம்பரியமற்ற வடிவங்கள்

— கலாநிதி பி. உடகம

இன்று மூன்றாமுலகெங்கணும் கல்விப் போதனா முறைகளையிட்டுப் பரந்த அளவில் மீளாய்வு நடைபெறுகிறது. கல்வி உட்பட எமது கலாச்சார கூறுகளில் குடியேற்றவாத ஆதிக்கத்தினின்றும் விடுபடும் நோக்குடனேயே இம் மீளாய்வு நடைபெறுகிறது. மூன்றாமுலகிற் பாரம்பரியமற்ற கல்வி பற்றிய சர்வதேசக் கருத்தரங்கொன்றில் நிகழ்த்திய உரையொன்றைத் தழுவிய இக் கட்டுரையில் கலாநிதி பிரேமதாச உடகம எமது பிரதேசத்தில் நிலவும் கல்வியின் அமைப்பைஆராய்கிறார். கலாநிதி உடகம கல்வியமைச்சின் செயலாளராவார்.

ஆசிய வரலாற்றில் வஸ்கொடகாமவின் காலப்பகுதிக்கு முற்பட்ட எமது பாரம்பரியங்களை நோக்குமிடத்து எமது கல்விப் பாரம்பரியங்களே அதி பழையவையென்பதையும், அப்போதையவிருத்தியுருவுலகில் விஞ்சிநின்றவையென்பதையுமறியலாம். இம் மரபு தற்போது பாதி மறக்கப்பட்டு விட்டாலும், அப்போது சீனப் பெருஞ் சுவரையும், இந்தியத் தாஜ்மகாலையும், அநுராதபுரம் பெரும் பௌத்த சிற்பங்களையும், கம்போடிய பௌத்த ஆலயங்களையும் (அங்கோர்வட்) கட்டியெழுப்ப உதவிற்று. எமது நதிக்கரைச் சமூகங்களுள் அநேகமானவற்றின் கலை நுட்பங்களையும் இவ்வாறே எடுத்துக் காட்டலாம். அப்போது ஆசியாவின் புராதன பாரம்பரியக் கலாச்சாரங்கள் அனைத்திலுல் ஏதோ ஒரு வடிவிற் கல்வி நிலவத்தான் செய்தது. இது பின்பு ஆசியாவில் குடியேற்ற ஆதிக்கங்களால் படிப்படியாக நலிவுற்றது.

ஆசியாவில் வாஸ்கொடகாமாவின் வருகையால் எமது பாரம்பரியக் கல்வியில் உடனடியான தாக்கம் ஏற்பட்டது. போர்த் திறனிலும், வியாபாரத்திலுல் ஏகாதிபத்திய மேலாதிக்கத்துடன், அவர்களது கல்விப் பாரம்பரியங்களும் அமைதியாகப் படியத் தொடங்கின. மதப்பிரச்சார நடவடிக்கையும், கல்வியில் அதன் தாக்கமும் எமது கல்வி முறைகளில் நிலையான சுவடுகளைப் பதித்துச் சென்றுள்ளன. இவ்விரண்டாம் பாரம்பரியத்தைப் பற்றிய குறிப்பு எமது ஆய்வுக்கு மிகவும் பொருந்தும்.

கல்வியில் இப் பாரம்பரியம் அல்லது பகுக்கப்படாத கருதுகோள் அல்லது நம்பிக்கை அல்லது பழக்க வழக்கம் அடிப்படையான பல பண்புகளை உடையது.

பாரம்பரியமான பாடசாலை குழுவாதிக்கங் கொண்டமைந்தது. அதற்கென குறித்தசாரார் இருந்தனர். பழமையான மேலைப் பாரம்பரியம் உயர் வகுப்பினருக்கும், மேன் மக்களுக்கும் ஆட்சியாளருக்கும், சட்டவரைஞருக்கும், முற்றுகையாளருக்கும் உரிய ''நியமப்'' பாடசாலையை வழங்கியது. இத்தகு 'மேலாதிக்கப் பாடசாலை' எல்லாக் குடியேற்ற நாடுகளிலும் நியமமான கல்வியை வழங்கியது. ஐரோப்பாவில் சுமார் 18 ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பெற்ற ஏனைய பாடசாலைகள் பொது மக்களுக்கானவை. இவை பெரும்பாலும் கீழ் வகுப்பினருக்கான தொழிற் பயிற்சிப் பாடசாலைகளே:—ஆசியாவில் மிஷனரிமாரின் சுதேச மொழிப் பாடசாலைகள் இத்தகையன. எனவே யாம் பெற்ற ஐரோப்பியக் கல்விப் பாரம்பரியம், வழி நடத்தியோரும் நடத்தப்பட்டோரும், மேற்குலத்தாரும், கீழ்க் குலத்தாரும், மேன் மக்களும், ஏனையோரும் என இரு வேறுபட்ட மக்களுக்கான இரு வேறு கல்வி முறைகளைக் கொண்டிருந்தது. இத்தகைய பாடசாலையில் மனனசக்தியை அடிப்படையாகக் கொண்ட ஏட்டுக் கல்வியே வழங்கப்பட்டது. ஆசிரியரும், புத்தகமும், கரும்பலகையும் போதனா முறையின் சின்னங்களாகும். போதனாசிரியர்களதும், பாடவிதானத்தின் உள்ளடக்கத்தினதும் தெரிவு அலாதியானது. இத்தகைய பாடசாலை பொதுவாகப் பொதுமக்களை ஒதுக்கிவிட்டு மேன்மக்களை இனங் காண்பதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இக் கல்விமுறை நவீன கைத்தொழில் உற்பத்திப் பாங்கினை ஒத்திருந்தது. குடியேற்ற ஆட்சி முறையில் பரீட்சை, உயர்கற்கை நெறி, தொழில் ஆகிய பொறிமுறை இக் கல்வி அமைப்புக்கு பெருமதிப்பை யளித்தது. கல்வியானது அதிவுயர்ந்த பணப்பெறுமதியைப் பெற்றிருந்தது. இதனை வெற்றிகரமாக நிறைவு செய்தோர் நிலையான நிருவாகத் தொழில் வாய்ப்புறுதியைப் பெற்றனர். பாடசாலையின் இப் பண்புகள் யாவும் பல்வேறு சடங்குகளையும், ஆடை வகைகளையும், மரபுகளையும் கொண்டமைந்தன.

வர்க்கஞ் சார்ந்த இக் கல்வி மரபு தனது சித்தாந்தத்துக்கு ஆதரவான ஓர் உள வியலையும் வளர்த்தது. இம் முறையின் நோக்கங்களும், பாட விதானங்களும், செல்வாக்கும் தொடர்ந்து எம்மைக் கவர்ந்திருப்பதுடன், இன்றும் எம்மிடையே நிலவி வருகின்றன. ஆசியாவில் அநேக பல்கலைக் கழகங்கள் தாமே பிரமுகஸ்தானத்தினதும், உயர் கலாச்சாரத்தினதும் நடு நிலையங்கள் என்ற வகையில் இம் மரபை தொடர்ந்து பேணி வருவதுடன் சாதாரண மக்களினின்றும் தனித்தொதுங்கி நிற்கின்றன.

**Learning To Be** (வாழப்பயிற்சி) என்பதனைத் தயாரித்த ஆணைக் குழுவின் ஈரானிய உறுப்பினரான கலாநிதி மஜீத் ரஹ்னீமா பிற்பாடு இப்பாடசாலை முறையைப் பற்றி மேலும் நம்பிக்கையுடன் ஒரு பின்னுரையை எழுதியுள்ளார்.

''மத்திய காலங்களின் பிற்பகுதிகளில் ஐரோப்பிய நகரங்களில் முதன்முதல் வளர்ந்த ''ஸ்கொலா ஒக்சிடென்டேலியா'' (மேலைப் புலமை) என்ற மருந்தின் ஒரு வகைமாதிரியே இது. அதன் பிறகு மேலை மனிதன் தனது உணர்வையும், அறிவையும், பொறிநுட்ப ஆற்றல்களையும் விரிவாக்க அதைப் பரிசோதனை செய்து பார்த்தான். 20 ஆம் நூற்றாண்டில் இம் மருந்தை அதன் பழைய வடிவத்தில் பெற முடியாமலும், அதன் விலை பன்மடங்கு அதிகரித்தும் இருந்த போதும் முழு வுலகும் அதற்கு அடிமையாகி விட்டது. வளரும் நாடுகள் எனப்படுகின்றனவற்றுக்கு ஏற்றுமதி செய்வதற்காக அது பதப்படுத்தி, உற்பத்தி செய்யப்படத் தொடங்கியபின் அதன் அநேகமான மூலப் பண்புகள் சிதைந்துவிட்டன. மருந்துக் கடைகள் அது தமது ஆளுமையில் வேருக்கமும், அந்தஸ்து,

வெற்று, சாதனை என்பவைகளைப் போட்டியிட்டெய்த வேண்டும் என்பதில் நிர்ப்பந்தமான வேட்கையும், ஆக்கபூர்வமானதும், பகுத்தாய்வதுமான தூய கற்றலி லுள்ள பசியைப் போக்கும் ''டிப்ளோமா மேனியா' (உயர் கற்கைப்பித்து) என்ற வியாதியும் ஆகிய விசித்திரமான சீர்கேடுகளை உண்டாக்கியமையால் அதைத் தொடர்ந்து பயன்படுத்த விரும்புவதில்லை. தனிப்பட்ட முறையிலும், சமூக மட்டங்களிலும் மருந்து விளைத்த சீர்குலைவுகளாலும், நெருக்கடிகளாலும் அதற்கெதிராகப் பாரிய அளவில் நடவடிக்கை யெடுப்பதன் அவசியம் உணரப்பட்டது. பயிலும் சமுதாயம் பேதமற்ற முறையில் மருந்தின் பயன்பாட்டுக்கும், துஷ்பிரயோகத்துக்கும் ஒரு முற்றுப்புள்ளியிட பெருந்தொகைப் பணத்தையும், காலத்தையும், விரக்தியையும், நுட்பத்தையும், அரசியற் துணிவையும் செலவளிக்க நேரும். சில பழைய பாரம்பரியச் சமூகங்கள் ஒழுங்கை நிலைநாட்டவும் இராணுவத் தேவைகட்கும் இன்னும் அதனைப் பயன்படுத்து கின்றன.

மேலைநாடுகள் மூன்றுமுலகுக்கு நன்கொடையாக வழங்கிய இப் பாரம்பரியக் கல்விக்குத் தற்காலத்தில் எவ்வித மதிப்போ, தாக்கமோ இல்லை என்பதை யுனெஸ்கோவும், ஏனைய உலக நிறுவனங்களும் கடந்த இரு தசாப்தங்களுக்குள் நன்குணர்ந்துள்ளன. 1960 இல் கராச்சித் திட்டம் உருவாக்கப்பட்ட பின்பு தானும் இக் கல்விப் படிமுறை எமது தேசியப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் இயக்கப்படாமையை ஆசிய நாடுகள் உணர்ந்து விட்டன.

எமது சமூகங்களில் திணிக்கப்பெற்ற, மேலையுந்துதல் கொண்ட பாரம்பரியக் கல்வி முறைக்கு, மாறுபட்ட ஒரு கல்வி முறையையே யான் பாரம்பரியமற்ற கல்வி முறையாகக் கருதுகிறேன். ஒரு வகையில் இப் பாரம்பரியமற்ற கல்வி எமது பழைய கல்வி மரபுகளை மீளாய்வு செய்யத் தூண்டியுள்ளது.

அநேக வல்லுனர்கள் முறைமையான கல்வி, முறைமையற்ற கல்வி என்று கல்வித்துறை சார்ந்த பதப் பிரயோகத்தால், மேற்கினின்று திணிக்கப்பெற்ற அல்லது கடன் பெற்ற கல்வி முறையை முறைமையான கல்வியாயும், எமது நாடுகளில் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவிய கல்வியை முறைமையற்ற கல்வியாயும் வரையறுத்தனர். மேலையறிஞர் எமது தேசியப் பிரச்சினைகளின் தீர்வுக்கு எமது புராதன கல்வி முறைகளே பொருத்தமானவை என உணரத் தலைப்பட்டுள்ளமையால் இப்போது தான் அவை மீண்டும் செல்வாக்குப் பெற்று வருகின்றன.

மேலைப் பாரம்பரியக் கல்வி எமது சமுதாயத்தில் நகரவாசத்தைத் தூண்டியது. அடிப்படையில் அது தொழில் செய்யாது சொகுசனுபவிக்கும் பண்பையுடையது. மத்திய வர்க்கத்தின் உந்துதல் பெற்ற இக் கல்வி முறையால் எமது தேசியப் பிரச்சினைகளைத் தெளிவுடனும், அனுதாபத்துடனும் அணுக முடியவில்லை. உணவுத் தட்டுப்பாட்டையும், தொழிலின்மையையும், வறுமையையும், உறையுளையும் அக்கல்வி, தான் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளாகக் கொள்ளவில்லை. சுதந்திரத்துக்குப் பின்பே எமது சமூகங்களுட் சில செயலில் இறங்குவதற்கு மக்களால் நிர்ப்பந்திக்கப்பட்டன.

எனவே எமது சமூகங்களில் முறைமையான கல்வி முறையானது கல்விக்கான ஒரு சாதனமாக அன்றி, உயர் வர்க்கத்தில் சேர்வதற்கான சமூக அசைவை நிகழ்த்தும் சல்லடையாகவே பயன்படுத்தப்பட்டது. சமூகத்தில் பாதிக்குங் குறைந்த பிள்ளைகளே கல்வியைப் பெற்றனர். அதிக வருவாய் தந்த உயர் தொழில்கட்கான தெரிவைச் செய்த முறையால் கல்வியின் உண்மையான நோக்கத்தைப் புறக்கணித்து விட்டோம். இத் தெரிவு முறை மேல் வர்க்கத்தாருக்கே சதாகமாயமைந்தது. கல்வியில் ''நியமங்கள்'' வேண்டும் என்ற ஜனரஞ்சகமான கோரிக்கைகளால் இது வளர்க்கப்பட்டது. இம் மரபுகள் மீறப்பட முடியாதனவாயும், பரிசுத்தமானவையாயும், கேள்விக்கிடமற்றவையாயும் கொள்ளப்படலாயின. எமது நாடுகளைத்திலும், எல்லா மட்டங்களிலும் கல்வியைத் திட்டமிடுவதிலும், விருத்தி செய்வதிலும் மேல் வர்க்கத்துக்கான கல்விப் புராணமே தொடர்ந்து ஏம்மை வழிநடத்துகிறது. கல்விப் புனரமைப்பில் பரீட்சைகள் ஒரு பெருங் குறையாக உள்ளன. பரீட்சைகள் தாம் மதிப்பீடு செய்ய வேண்டுவனவற்றை முறையாக மதிப்பிடுகின்றன என்ற உறுதியான நம்பிக்கை இத்தகைய கட்டுக்கதைகளுள் ஒன்றாகும். அவை விஞ்ஞானபூர்வமானவை, நியாயமானவை என்பது எமது அறிஞர்கள் எமது பொது மக்கள் மீது திணிக்க முயலும் மற்றுமொரு பெருங் கட்டுக்கதையாகும்.

மேல் வர்க்கக் கல்வி யமைப்பின்படி மேல் மத்திய வர்க்க இளைஞரும், யுவதிகளும் சுமார் 15 அல்லது 18 வருடகாலப் படிப்பை மேற்கொள்ள வேண்டும். இது அவர்களது இயல்புக்கும், வளர்ச்சிக்கும் ஒவ்வாது. இத்தகைய ஒரு நீண்ட கற்கைக் காலம் அவர்களுக்குத் தமது எஞ்சிய வாழ்நாளில் போதிய அளவு அறிவையும், திறமையையும், ஆற்றலையும் வழங்குகிறது என்பது மற்றுமொரு கட்டுக்கதையாகும்.

இனி, யாம் ஆசியாவின் நிலையையும், பாரம்பரியக் கல்வியின் ''சாதனை''யையும் ஆராய்வோம்.

ஆசியாவிற்தான் உலகிலேயே ஆகக் கூடுதலான அளவு கல்வியறிவற்றோர் உளர் என ஒரு யுனெஸ்கோ ஆவணம் வலியுறுத்துகிறது. இத்தகையோர் சுமார் 2430 லட்சம் பேராவர். எனினும் கல்வியறிவற்றோரது விகிதம் நாட்டுக்கு நாடு 70% லிருந்து 10% வரை வேறுபடுகிறது. ஜப்பானும், ஸ்ரீலங்காவும், தாய்லாந்தும், பிலிப்பீன்சும் நீங்கலாக மொத்த சனத்தில் ஏனையோரது ல்வியறிவுடைமை விகிதம் அதிக குறைவாகும்.

ஆசிய மக்களுள் இளையோரது வீதாசாரம் மிகவதிகம். 30% 35% பேர் 15 - 19 வயதெல்லைக்குட்பட்டோராவர். கொரியாவிலும், பிலிப்பீன்சிலும், தாய்லாந்திலும், ஸ்ரீலங்காவிலும் சுமார் 40% பேர் பதினைந்து வயதுக்குட்பட்டோர். இப் பிள்ளைகளுள் அநேகர் பள்ளி செல்லாமையை யாமறிவோம்.

பள்ளி செல்வதை இடை நிறுத்துவோரது உயர் விகிதாசாரமும் கவலைக்குரியதே எமது சொந்த நாட்டில் 1968 இல் சுமார் 50% பிள்ளைகள் கல்வியின் முதற் கட்டம் நிறை வெய்த முன்பே பள்ளியினின்று விலகினர். 1972 இல் எமது கல்விச் சீர்திருத்தங்கள் அமுலான பின் இந் நிலை குறிப்பிடத்தக்க அளவு திருந்தியது. முழுக் கண்டத்திலும் சுமார் 10 - 15% பேர் தாம் முத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிலைக் கல்வியையும், 4 - 6% பேரே இடை நிலை கல்வியையும் பூர்த்தி செய்தனர். ஸ்ரீலங்காவிலும், பிலிப்பீன்சிலும் 10 - 14 வயதெல்லைக் குட்பட்டோருள் சுமார் 23% விவசாயம், வீட்டுச் சேவை ஆகிய துறைகளில் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளனரென ILO கணித்துளது. இந்தியாவில் இவர்களது தொகை 40% வரை உயர்ந்து காணப்படுகிறது.

தரவுகளுணர்த்தும் காட்சி மிகவும் அலுப்பூட்டுவதாகும் கல்வியின் உள்ளடக்கமும் அத்தகையதே. ''தற்காலத்தில் விஞ்ஞான ரீதியிலும், பொறிநுட்பரீதியிலும் அறிவையும், திறமையும் ஈட்டுதற்கு ஒரு நல்ல சூழலையமைத்துக் கொடாத கல்வியானது ஏற்றத்தாழ்வுடையது; குறையுடையது'' என ஒரு யுனெஸ்கோ அறிக்கை குறிப்பிடுகிறது. பொதுக் கல்விப் பாட விதானங்களில் துணிச்சலுடனும், சிந்தனை சக்தியுடனும் முழு மாற்றத்தை ஏற்படுத்தினாலேயே விரும்பத்தக்க ஓர் இலக்கை நாடி மாற்றம் நிகழும். 1972 இல் நாம் ஸ்ரீலங்காவிற் செய்ததைப் போல அநேகமான ஆசிய நாடுகளில் கல்வியில் முதனிலையிலும், இடை நிலையிலும் பாடவிதானங்களை மாற்றியமைக்கும் பணியில் பாடவிதான நிலையங்கள் ஈடுபட்டுள்ளன. மூன்றாம் நிலையிலும் இத்தகைய முயற்சியின் அவசியம் சொல்லாமலே விளங்கும்.

பிரதேசத்துக்குப் பிரதேசம் கல்விக்கான வசதிகளில் உள்ள வேறுபாடுகளால் எமது முறைகளில் பெரும் ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன. வரண்ட பிரதேசங்களும், மலைப் பிரதேசங்களும், காட்டுப் பிரதேசங்களும், சனத்தொகை அரிதான பகுதிகளிலும் கல்வித்துறையில் மிகவும் பின்தங்கியுள்ளன. நகர்ப்புறங்களிலுள்ள தொழிலாளர் வர்க்கத்தினர் கூட இந்நிலைக்காட்பட்டுளர். கிராமப் புறங்களிலுள்ள ஏழைகளே ஆசியாவில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டோராவர்.

இதற்குத் தீர்வு யாது? உற்பத்தியை முதன்மை கொள்ளாத கல்வியாற் பயனில்லை. மேல்வர்க்கத்துப் பாடசாலை முறையின் செயற்கையான பாட விதானம் எமது மக்களின் கல்விப் பிரச்சினைகளை ஒருபோதும் தீர்க்கமாட்டாது. நவீன சமூகத்திற் தானும் எமது மக்கள் என்றென்றும் ''மௌனத்தின் மொழி'' க்கே ஆட்பட்டிருக்க நேரும். கல்வியில் பெருமளவு முன்னேற்றங் கண்டுள்ள எனது சமூகத்தை ஒத்தனவற்றிற்கூட மக்களின் கல்விப் பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை.

யாம் இங்கு கல்வியில் தலைமுறை இடைவெளியை அனுபவிக்கின்றோம். முந்திய தலைமுறையினர் நாலைந்து வருட காலமே பள்ளி சென்றனர். இரண்டாவது தலைமுறையினர் 8 முதல் 10 வருடங்கள் பள்ளி செல்கின்றனர். இவர்களுள் குறிப்பிடத்தக்க அளவு இளையோர் உயர் கல்வி பெறுகின்றனர். தந்தையருக்கும் மைந்தருக்கும், தாய்மாருக்கும் புதல்வியருக்கும் கல்வியில் இடைவெளி அகன்று செல்கிறது. பாரம்பரியமற்ற கல்வியாலேயே இவ்விடை வெளியை நீக்கலாம்.

இக்கல்வியை பாரம்பரியமற்ற கல்வி என்பதைவிட முறைமையாக அமையாத கல்வி என்பதே பொருந்தமானதெனக் கருதுகிறேன். பாரம்பரியமான அல்லது முறைமையான கல்வியாவது முறைமையாக அமைந்த நிலையங்களில் அறிவை முதன்மையாகத் கொண்டு வழிவழியாக வழங்கப்பட்டுவரும் கல்வியாகும்.' பொதுமக்கள் இதினின்றும் ஒதுக்கப்படுகின்றனர். பாடவிதானம் தமக்குப் பொருத்தமற்றதெனக் கருதிய ஏழைகள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. எமது பிள்ளைகளுள் அநேகர் பள்ளி செல்லாது விடுகின்றமைக்கு இதுவே முக்கிய காரணம். ஒரு கலாச்சாரம் நிலைபெறவும், வளரவும் ஏட்டுக் கல்வி அறிவு மட்டும் போதாதாகலின் இப் பாரம்பரிய அல்லது முறைமையான கல்வி முறையானது ஒரு தேசீய கல்வி முறையைக் கட்டியெழுப்பப் போதாது.

பள்ளியினின்று விலகிச் செல்லும் பிள்ளைகள், இளைஞர், வளர்ந்தோர் ஆகிய அனைவருக்கும் கல்விப்படிமுறையில் ஈடுபட்டுள்ள யாம் பொறுப்பாளராவோம். பல்கலைக் கழகங்கள் மூன்றாம் நிலைக் கல்வியில் ஈடுபட்ட ஏனைய நிறுவனங்கள் யாவும் இதற்கு விதிவிலக்கன்று. தற்போதைய அமைப்பில் பல்கலைக் கழகங்கள் எமது நாடுகள் யாவிலும் ஓர் ஆடம்பர சாதனமாகவே உள. அவை ஒரு குறித்த சாராரான இளையோர் பொறியியலாளராயும், மருத்துவராயும், வழக்கறிஞராயும், நிருவாகிகளாயும், ஆசிரியர்களாயும் உத்தியோகம் பெறக்கூடிய பாரம்பரியக் கல்வியையூட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அவை அமைந்துள்ள வாற்றாலும், சமூகத்தினின்று ஒதுங்கியுள்ளமையாலும் அவை நடாத்தப் பெற ஆதாரமான சமூகமே அவற்றினின்றும் ஒதுக்கப் பெறுகிறது. அவை மக்களினின்றும் வேறாகிக் காணப்படுகின்றன. எமது மக்களைப் புரிந்து கொள்ள உதவும் கல்வியை ஊட்டி வளர்க்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்வதற்குப் பதிவாக அவை மேலைச் செயற்கையாக்கத்தாலான தீவுகளாக மாறியுள்ளன.

ஆய்வுக் கூடங்களிலும், பொறிநுட்ப வேலைத்தளங்களாலும், கட்டிடங்களாலும் திரட்சிபெற்ற பல்கலைக் கழகம் ஆண்டிற் பாதி காலம் மூடப்பட்டே உளது. எஞ்சிய பாதியிலும் மூன்றில் ஒருபங்கு காலமே தொழிற்படுகிறது. அறிவின் களஞ்சியங்கள் மூடப்பட்டுள்ளன. அங்கு கற்றோர் ஒரு தனிப்பாங்கானோர்; எட்டாத் தூ[illegible]த்திலுள்ளோர். அதன் வேர்கள் எமது மண்ணில் ஊன்றியவையல்ல. மேலை நாடுகளின் சர்வதேச அறிஞர் குழாத்துலகிற் பதிந்தவை. ஆசிய அறிஞர் குழாத்தினரிடையேகூட நெருங்கிய தொடர்பு இல்லை. அவர்களிடையே கூட்டுப் பொறுப்புணர்ச்சி கிடையாது. இவ்வாறு கூறுவது ஒரு காரசாரமான குற்றச்சாட்டே. நிச்சயமாக இது ஆசிய அறிஞர்கள் அனைவருக்கும் பொருந்தாதுதான். எனினும் ஒரு சுயவிமரிசனமென்ற முறையிலேயே யான் இக் கருத்துக்களை வெளிப்படுத்துகிறேன்.

கல்விப் புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான ஆசியத் திட்டத்திலும் ( APIED ) யுனெஸ்கோவின் பிரதேச அலுவலகத்திலும் எனது தொடர்பினாற் பெற்ற அனுபவத்திலிருந்து, ஆசியாவில் ஏல்லாப் பாடசாலை முறைகளும் பாரம்பரியக் கல்வியினின்று விலகி, தத்தமது சமூகங்கட்கும் பயனுள்ள மாற்றங்களையேற்படுத்தப் பெரு முயற்சிகளை எடுப்பதைக் காண எனக்குப் பெரு மகிழ்வுண்டாகிறது. துர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திர்ஷ்டவசமாக ஆசியப் பல்கலைக் கழகங்கள் இவ்வாறு செய்வதாகத் தெரியவில்லை. இப் பழமை மோகத்தைத் திருத்தித் தமது மக்களுக்கு ஓர் அர்த்தமுள்ள பல்கலைக் கழகக் கல்வியை யூட்டும் முயற்சியில் எமது அறிஞர்கள் இனியாதல் முயல்வரென நம்புகிறேன். பாரம்பரியமற்ற கல்வியில் பல்கலைக் கழகங்கட்குள்ள பங்கினை மீளாய்வு செய்யுமுகமாக இவ்வறிஞர்கள் அனைவரையும் ஒருங்கு சேர்க்கும் பணியின் மூலம் உலக பல்கலைக்கழக சேவை WUS பயனுள்ள ஒரு பணியைப் புரிகிறது.

பிரதான பல்கலைக் கழகங்கள் ஆசியாவில் பொதுஜனக் கல்வி இயக்கத்தில் ஓர் அங்கமாக அமைந்து தமது சொந்த மக்களினதும், சமூகங்களினதும் அபிவிருத்திக்காக உழைக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவது தற்போதைய சூழலில் மிகவுமவசியம். எமது பல்கலைக் கழகங்கள் மேல்வர்க்கத்தாரான ஒரு குறுகிய வட்டத்துக்கு மட்டுமேயன்றி மக்களனைவருக்கும் தமது கதவுகளைத் திறந்துவிட வேண்டும். மூன்றுமுலக நாடுகளில் அவை தாம் முதன்மையான நிலையங்களாதலின் அவற்றின் அறிவுக்களஞ்சியம் மக்களனைவருக்கும் கிட்ட வேண்டும். ஏனைய பல பல்கலைக் கழகங்களைப் போன்றே எம்முடையதும் இவ்விதமாக தொழிலாளர் கல்வி, பிரத்தியேகமான வகுப்புகள் முதலியவற்றை ஒழுங்கு செய்வதன் மூலமும், நாட்டின் பொருளாதாரத்தினதும், சமூகத்தினதும் அபிவிருத்தியில் நேராக ஈடுபடுவதன் மூலமும் தன்னை மாற்றிச் செல்வதைக் காண எனக்கு மகிழ்வுண்டாகிறது. ஐக்கிய இராச்சியத்தால் உருவாக்கப்பட ''திறந்த பல்கலைக்கழக'' சித்தாந்தம் எமது சமூகங்கள் யாவிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. எதிர்காலத்தில் அது மேலும் சிறப்பாக அமைய இடமுண்டு.

இவ்வாய்வரங்கு மூன்றுமுலகின் பாரம்பரியமற்ற கல்வியின் வடிவங்களுள் மூன்று பண்புகளையே பிரதானமாகக் கொண்டுள்ளதென அறிகிறேன். அவையாவன, தொழிலாளர் கல்வி; குடும்ப வாழ்வுக் கல்வி; அபிவிருத்திக் கல்வி எனினும் எமது பல்கலைக் கழகங்கள் வருங்காலத்தில் விருத்திசெய்யக் கூடிய மற்றும் பல துறைகளை ஆராய்வது தகும்.

எமது பல்கலைக் கழகக் கல்வி அறிஞராஞேர் நவீன அறிவினைத் தரும் கருத்துக்களிலும், நூல்களிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்று கருதுகிறது. ஆனல் இவ் வளங்கள் அனைத்தையும் எமது தொழிலாளருக்கு எட்டவைப்பதெப்படி? எமது தொழிலாளர் எழுத்து வாசனையே யற்றோராகவோ, ஓரளவு எழுத்து வாசனை யறிந்தோராகவோவும், அல்லற் பட்டுழைக்கும் ஏழைகளாகவும், தமது உரிமைகளையும், முன்னுரிமைகளையும், கட்டுப்பாடுகளையும் அறியாதோராயுமுளர். கைத்தொழில் நடு நிலையங்களில் நகர்ப்புறத் தொழிலாளராக மாறியுள்ள விவசாயிகட்குத் தேசிய பொறுப்புக்களைப் பங்கு பகிர்ந்து கொள்ளவும், தமது சொந்த வீடுகளிலும், வேலை நிலையங்களிலும் கைக்கொள்ள வேண்டிய நோக்குகளையும், வாழ்க்கைத் தரங்களையும், வேலைப் பழக்கங்களையும் பற்றியும், கூடுதலாக வழிகாட்டல் அவசியம். மேல்வர்க்கத்து அறிஞர் குழாம் வெறும் சம்பிரதாய பூர்வமான முறையில் இவர்களை ஆர்வலித்து மதிப்பதைக் காட்டிலும், எமது மனிதத்துவ மரபுகளாலும், ஒத்துழைப்பாலும், பரஸ்பரம் புரிந்துகொள்வதாலும் இம்மக்கள் பயன்களை அனுபவிக்க வகை செய்ய வேண்டும்.

எமது சமூகங்கள் அனைத்துக்கும் உதவத்தக்கவாறு பாரம்பரியமற்ற கல்வி முறைகளைப் பொருத்தமாக ஒழுங்குறுத்த ஆசியாவிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களதும் அனுபவம் எமக்குதவு மென்பது உறுதியான நம்பிக்கை.

இது பற்றித் தொடருமுன், பாரம்பரியமற்ற கல்வி என்ருல் என்ன என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்வோம். ''கற்போருக்கும், கற்றலின் நோக்கங்கட்கும் உதவக்கூடியவாறு தனியாகவோ, ஒரு விரிவான நடவடிக்கையின் ஒரு முக்கிய உறுப்பாகவோ ஏற்கெனவே ஸ்தாபகம் பெற்ற அமைப்புக்கு வெளியே இயங்குகின்ற எந்த ஓர் ஒழுங்குறுத்திய கல்வி நடவடிக்கையையும் இது குறிக்கும்.'' என வரையறுக்கலாம். பன்னெடுங் காலமாக எமது சமூகங்கள் இவ்வாருன முறைமையற்ற கல்வியை வழங்கிவந்துள்ளன. வளர்ந்தோருக்காகப் பல்வேறு வடிவங்களிற் கல்வி, விரிவாக்க சேவைகள், தொழிலிடத்துப் பயிற்சி, உள்ளகப் பயிற்சி, தொழில் கற்பதற்கான பருவப் பயிற்சி, இளையோர் நிறுவனம், சமய நிறுவனங்கள், கைத்திற நிறுவனங்கள் என்பவை யாம் நன்கறிந்தவைகளே. எனினும் யாம் எமது சமூகங்களில் முறைமையானதும் முறைமையற்றதுமான கல்வியை ஒருங்கிணைக்கத் தவறிவிட்டோம்.

(அச்சகம், செய்தித்தாள்கள், திரைப்படம், வாஞெலி, தொ. நோக்கி, நாட்டுக்கூத்து, நாடகம்) எனும் பொதுசன தொடர்புச் சாதனத்திலும், எமது பொதுச்சேவை முகாமைகளிலும், தனியார் கைத்தொழிலிலும், (கோயில்கள், கிறீஸ்தவாலயங்கள், முஸ்லீம் பள்ளிகள், வீடுகள், பண்ணை, பட்டறை வேலைத்தளம்) ஆகிய கிராமப்புறக் கல்வி முகாமைகளிலும் ஏற்கெனவே ஓர் அடிப்படை அமைப்பு நிலவுகிறது. இம் முகாமைகட்கிடையில் அர்த்தமுள்ள வகையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும். இப்

பணியில் எமது கல்வி நிலையங்கள் கல்வியின் அதிவுயர் முகாமைகளான பல்கலைக் கழகததினதும், உயர் கல்வி நிலையங்களதும் தலைமைக்காகக் காத்துள்ளன. இத்துறையில் புது வழிகளைத் தேட பல்கலைக் கழகம் அடிப்படை ஆய்வில் ஈடுபட வேண்டும். எமது சமூக வாழ்வு கல்வியும் வேலையின்மையும், வேலையும் கல்வியின்மையும் என்றவாறு அமைந்துளது. வேலைக்கும் கல்விக்கும் இச் செயறகையான வேறுபாடு நீங்க வேண்டும். கற்பித்தலுக்கும், ஆய்வுக்கும் அறிஞரிடையே உள்ள மதிப்பைப் போலவே, வேலைக்கும் கல்விக்கும் சமூகத்திலுள்ள மதிப்பு சகல துறைகளிலும் வியாபகம் பெற வேண்டும். பாரம்பரியமற்ற கல்வியின் போதனுமுறைகளில் மாற்றத்தையும், புனரமைப்பையும் செய்யக்கூடிய வகையில் அடிப்படை ஆய்வு நடை பெற வேண்டும். தொடர்ச்சியான கல்விப் படி முறையில் பாட நெறிகள் சுருக்கமாயும், செறிவாயும் அமைய வேண்டும். நாட்டுக்கு நாடு அமைப்புகளில் பாடநெறிகளை யேற்படுத்திக் கொள்ள ஊக்க வேண்டும். எனினும் இவ் வாய்வரங்கின் கவனயீர்ப்புக்காகச் சாத்தியக்கூறுகளை அட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணைப் படுத்தல் கூடும்: அஞ்சல் நெறிகள், தொலைநோக்கி நெறிகள், சுயமாகக் கற்றல் நெறிகள், கைத்தொழிலிலும், நிறுவனங்களிலுமிருந்து ஆசிரியர்களின் துணையுடன் சேவைக்காலப் பயிற்சி, மாலைநேர வகுப்புகள், பகல் வேளை அல்லது பகுதிநேர வகுப்புகள், நிறுவனங்களிலும், கைத்தொழிலிலும் தொழிற் குழுவைப் பரிமாறிக் கொளல் என்பன கல்வியைத் தொடருவதற்குச் சாத்தியமான வழிகளே.''

பொது விவாதங்கள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், தனியார் போதனா நிலையங்கள் போன்ற பழைய முறைகளையும் தொடர்ந்து கைக்கொள்ளலாம்.

ஆய்வரங்கின் பிரதான ஆய்வுப் பொருள்களில் கவனவீர்ப்புக்காக நான், தொழிலாளர் கல்வியைத் தொடர்தல், குடும்பவாழ்வுக் கல்வி, அபிவிருத்திக் கல்வி எனும் மூன்று துறைகளில் எனது விதந்துரைகள் சிலவற்றை முன் வைக்க விழைகிறேன்.

**தொழிலாளர் கல்வியைத் தொடருதல்**

சமூகத்தின் எல்லாத் தரத்தினரும் தமது கல்வியைத் தொடர வேண்டியது இன்றியமையாததென்பதைக் கல்வியில் ஸ்தாபன அமைப்புக்கு எதிரான நூல்கள் நன்கு வலியுறுத்துகின்றன. கல்வியில் ஸ்தாபன அமைப்பானது அபிவிருத்தியுற்றவுலகிற் கூட ஏழைகளையும், தொழிலாளரையும், விவசாயிகளையும் கல்வியினின்று அப்புறப்படுத்தி வைத்துள்ளது. ஆசியாவில் அவர்களது நிலை மேலும் மோசமாகும். ஏனெனில் அவர்களது கல்விக்கேற்ற உள்ளார்ந்த பாட விதானத்தைப் பற்றி சிந்தித்துப் பார்க்கத்தானும் ஏழைகளின் கலாச்சாரத்தையும், சமூகவியலையும், உளவியலையும் பற்றிய ஆழமான ஆய்வுகளை நாம் இன்னும் மேற்கொள்ளவில்லை.

ஆரம்ப கல்வி பெற்ற இளையோருக்குத் தகவல் வழங்கும் நிலையான அமைப்பாகவே எமது பாரம்பரியக் பல்கலைக் கழகக் கல்வி பெரும்பாலும் அமைந்தது. இத்தகைய விசேடமான அறிவு கீழ் வர்க்கத்தினருக்கு எவ்வித பயனோ, பொருத்தமோ அற்றது. ஆசியாவில் தொழிலாளர் வர்க்கம் தமக்கென ஒரு தொழிலாளர் கல்வி இயக்கத்தை இனித்தான் பெற வேண்டும்.

நாம் கல்வி வசதியிற் சமத்துவத்துக்காகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டும்கூட, ஸ்ரீலங்காவிற் தொழிலாளரது கல்வி நிலையை ஆராயுமிடத்து அதையிட்டுத் திருப்தியுறவியலாது. 1969 - 70 இல் 17% பேர் எழுத்து வாசனையற்றோர். 43% 5 வருடங்களுக்கும் குறைந்த காலமே பள்ளி சென்றோர். 11% மட்டுமே பத்து அல்லது அதற்குங் கூடிய காலம் பள்ளி சென்றோர் இப் புள்ளிவிவரங்கள் யாம் தொழிலாளர் வர்க்கமெனக் கருதும் குழுவினரையும், தொழிலில் அமர்ந்துள்ள மக்கள் அனைவரையும் உள்ளடக்கியவை. கொழும்பில் நகர்ப்புற நிலை இதனிலும் மோசமாகும். கொழும்பில் சேரிவாசிகளுள்ளும், குச்சில் வாசிகளுள்ளும் காற்பங்கினர் பள்ளிக்கே சென்றதில்லை. 47% முதனிலையில் விலகிவிட்டனர். 3% மட்டுமே பத்தாண்டுப் பள்ளிப் படிப்பைப் பெற்றனர். ஆசியாவில் முதன்மையான நகரங்களிற் சேரிவாசிகளின் கல்வித்தரம் இதனிலும் மோசமானது. ஆசிய முதன்மை மாநகரங்களுட் பலவற்றில் சேரிவாசிகளின் தொகை கொழும்பை விடப் பன்மடங்கு அதிகம்.

பழைய கல்வி முறை தொழிலாளரை ஒதுக்கவில்லை. கிராமங்களில் அளவின்றிக் கிட்டிய சம்பிரதாயபூர்வமற்ற கல்வியைத் தானும் தொழிலாளர் தற்போது தமது கடும் ஏழ்மையினாற் பெற முடியவில்லை. ஸ்ரீலங்காவிலோ ஒவ்வொரு கிராமத்திலும் சுமார் 2 மைல் தூரத்துக்குள் ஒரு பாடசாலை வீதம் காணப்படுகிறது. ஆனால் ஆசியாவின் அநேகமான சமுதாயங்களுக்கு இவ்வித வசதி கிடையாது. ஆசிய சமூகங்கள் பலவற்றில் பாரம்பரியக் கல்வி நகர் சார்ந்து காணப்படுவதால் விவசாயிகளும் புறக்கணிக்கப்பட்டனர்.

இவ் வர்க்கத்தினருக்காக நாம் எத்தகைய கல்வியை ஒழுங்குறுத்த வேண்டும்? எந்த ஒரு மட்டத்திலும் குறிப்பாக பல்கலைக் கழகத்தில் தொழிலாளர் கல்வியின் தொடர்ச்சியை ஒழுங்குபடுத்த உணர்வுபூர்வமான ஆசிரியர்களும், கல்வியின் உள்ளடக்கமும், போதனாமுறையும் முக்கியமானவை. ஸ்ரீலங்கா வாசிகளாகிய எமக்கு எமது கல்வி அமைச்சரது முன்னோடி நடவடிக்கையால் ஒரு தொழிலாளர் கல்வித் திட்டத்தை ஒழுங்குபடுத்துவதில் நான்கு வருடங்களுக்குள் மட்டுப்பட்ட ஓர் அனுபவம் இருக்கிறது. எமது அனுபவம் மிகவும் மட்டுப்பட்டது. எமது அயலார் சிலரும் இவ்வாறான முன்னோடி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். எதிர்கால அபிவிருத்திக்காக இத்துறையில் எமது அனுபவங்களைப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறான தொழிலாளர் கல்விக்குரிய பாடவிதானங்களை உருவாக்குவது எந்த ஒரு பல்கலைக் கழகத்திலும் சரியே அறிஞர்களுக்கு ஒரு பெரும் பிரச்சினையாக அமையுமென்பதுறுதி. மேல் நிறுவனங்கள் பல இதற்காக ஆய்வு நிலையங்களை நிறுவியுள்ளன. மேற்கு ஜெர்மனி இதற்கு உதாரணமாகும் பாட நெறி அபிவிருத்தியில் முதற் கட்டமாக நாம் தொழிலாளர் வர்க்கத்தின் சமூகவியலை ஆழமாக ஆராய வேண்டும்.

ஆய்வரங்கில் உங்களது சிந்தனைக்காகச் சில கருத்துக்களை எடுத்துரைத்தல் தகும். தொழிலாளர் கல்விக்கான எத் திட்டமும் மொழி வளர்ச்சிக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். வீட்டிலும், சுற்றுடலிலும் மொழிப் பயிற்சியில் உள்ள குறைபாடே தொழிலாளர் வர்க்கம் கல்வி ஸ்தாபனத்திற் சேர்வதற்கு ஒரு தடையாக இருந்துள்ளதென்பது நன்கு நிறுவப்பெற்ற ஓர் உண்மையாகும். அவர்களைப் பொறுத்தவரை கருத்துக்களும், சித்தாந்தங்களும், சிந்தனைப்பாங்குகளும் மூடுமந்திரமே. எனினும் உலகும் தொழிலாளரும் பரஸ்பரம் கருத்துப் பரிவர்த்தனை செய்து கொள்ளுதல் அவசியம். அப்போது தான் தொழிலாளரால் தமது விடுதலைக்காக உழைக்கவும், தமது சமூகத்தின் முன்னேற்றத்தில் தீவிர பங்கேற்கவும் முடியும்.

விருத்தியுறும் உலகின் அபிவிருத்திக்கு விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் அத்தியாவசியம், தொழிலும், தொழிலாளரும் நவீன விஞ்ஞானத்துக்கும் தொழில் நுட்பத்துக்கும் அமைந்து தொழிற்பட வேண்டும். கேர்ட் மெய்ஸ்னர் கூறும்''பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கான விஞ்ஞான''த்தை வளர்ப்பது ஆசிய பல்கலைக் கழகங்களின் பணியாகும். எமது சமூகத்தில் விஞ்ஞானம் ஒரு நெருக்கடியான சூழலில் வளருவதால் இது விஞ்ஞானிகட்கும், அவர்களது நிறுவனங்கட்கும் சவால் விடுக்கும் ஒரு பணியாகும். விருத்தியுறும் நாடுகளில் 5% விஞ்ஞானிகள் மட்டுமே வாழ்கின்றனர். முழு உலகிலும் 15-30 நாடுகள் மட்டுமே விஞ்ஞான ஆய்வில் ஈடுபட்டுள்ளன.

தொழில் நுட்பமாவது விஞ்ஞானத்தைப் பிரயோகிப்பதும், பொருளாதார உற்பத்தியை முன்துனற்றுவதற்குரிய சாதனமும் ஆயின், புதிய தொழில் நுட்பம் தொழிலாளர் வர்க்கத்துக்கு அவர்களது சமூகங்களின் பொருளாதார அபிவிருத்திக்கும் உதவக் கூடிய வகையில் ஊட்டப்பட வேண்டும். இதை எப்படி சாதிப்பதென்பதே ஸ்தாபகம் பெற்ற எமது கல்வி நிலையங்களை எதிர் நோக்கும் சவாலாகும்.

ஆசியாவைப் பொறுத்தவரை தொழிலாளர் வர்க்கமாவது ஒரு புதிய மக்கள் குழுவாகும். விவசாயத்திலோ கைப்பணியிலோ ஈடுபட்ட கிராமப்புறத் தொழிலாளர் நவீன கைத்தொழிலுக்கு அவசியமான தொழிலாளரைவிட முற்றிலும் வேருன ஒரு வாழ்க்கை முறைமையைக் கொண்டோர். இவர்களை ஒரு சூழலிலிருந்து அடுத்த சூழலுக்கு இயைபுடையோராக மாற்ற வீட்டிலும், சூழலிலும் அவர்களது ஆளுமையை முற்ருக மாற்றியமைக்க வேண்டும். இம் மாற்றத்தைச் சுமுகமான முறையில் ஏற்படுத்துவதே ஆசிரியருக்கும், சமூக சேவையாளருக்கும் சவால் விடுக்கும் பணியாகும். தற்போது கல்வியும், சமூக சேவையும் மேலையுநதுதல் பெற்றுள்ளமையினுல் இவற்றை தொழிலாளர் வர்க்கத்துக்கு நன்மைபயக்கக் கூடியவையாக மாற்ற எமது அபிவிருத்திப் பிரச்சினைகளின் பின்னணியில் மீளாய்வு நடத்த வேண்டும்.

கிராமப்புற சமூகத்தில் தொழிலும், ஓய்வும், சமூகக் கடப்பாடுகளும் சுமுகமாக ஒருங்கிணைந்திருந்தன. ஆனுல் நகர்ப்பறச் சேரிகட்குள் வீசுண்ட தொழிலாளி தனது ஓய்வை முறையாகப் பயன்படுத்துவதில் பல சிக்கல்களையும், பிரச்சினைகளையும் எதிர் நோக்க நேருகிறது. (அண்டோனிக் கிரமாளகி எடுத்துக் காட்டுவதற்கமைய) ஹென்றி போர்ட் புதிய கைத்தொழில் முகாமை உத்திகளை ஆரம்பித்த போது, பொழுது போக்கு நடவடிக்கைகளையிட்டு மேற்கொண்டவை ஒரு முதலாளித்துவ உற்பத்தி முறையில் தொழிலாளர் வர்க்கத்துக்கான பொழுது போக்கு வசதிகளின் அவசியத்தை எடுத்துக் காட்டுகின்றன. ஓர் ஆரோக்கியமான தொழிலாளிக்கு அவனது சொந்த நலனையும், வேலை நிலையத்தின் நலனையும் கருதி ஆக்கபூர்வமான பொழுதுபோக்கு வசதிகள் அவசியம். தொழிலாளர் கல்விக்கான புதிய பாட விதானத்தில் ஒளி, ஓசை, உணர்வு ஆதியாம் புலன்களை வளர்ப்பதற்கு முக்கியத்துவமளிக்க வேண்டும்.

எமது பாரம்பரியக் கல்வி எதற்கும் அனுசரித்துப் போகும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பவே நிறுவப்பெற்றது. இத்தகைய கல்வி காலத்தாலெழும் நெருக்கடிகளைச் சமாளிப்பதில் பொது மக்களுக்குதவப் போவதில்லை. தொழிலாளர் இவ்வுலகை நிருவகிக்சக் கூடியோராயும், அதில் சிந்தனு சக்தியுடன் வாழக் கூடியோராயும் நாம் பயிற்சியளிக்க வேண்டும். அப்போதுதான் முழுச் சமூகத்திலும் மனிதத்துவமும் பண்பாடும், அமைதியும் நிலவும்.

### குடும்ப வாழ்வுக் கல்வி

பாடசாலைகளில் குடும்பவாழ்வுக் கல்வி கற்பிப்பதை எள்ளி நகையாடிய ஒரு காலமிருந்தது. தற்போது மேல்வர்க்கக் கல்வி முறைகளும் கூட இக்கருத்தை ஏற்கின்றன. கிராமம, நகரம் ஆகிய இரு துறைகளிலும் மாறும் எமது சமூகங்களில் குடும்ப வாழ்வு பல பாரதூரமான மாற்றங்களைக் கண்டுவருகிறது.

கிராமப்புறத்தில் குடும்பத்தின் பாரம்பரியக் கலாச்சார முறைமையின்படி, குடும்பத்து உறுப்பினர் ஒருவருக்கொருவர் பொறுப்பாவர்; குடும்பங்களும் ஒன்றுக்கொன்று இயைபுற்றவை. தொழிலும், சமயமும், சமூகமும் சார்ந்த ஓர் அலகாக குடும்பம் இயங்கியது.

நகர்ப்புறங்களில் குறிப்பாக மாநகரங்களில் கிராமங்களினின்று தொழில் நாடிக் குடிபெயர்வோர் தொகை பெருகுவதால் பல பிரச்சினைகள் உருவாகின்றன. புதுவகையான தொழில் கற்க வேண்டிய ஒழுக்க உணர்வோ, போதிய உறையுள் வசதியோ, கல்வியறிவோ இன்றியே அவர்கள் வருகின்றனர். சேரிவாசிகளின் பிரச்சினைகள் அலாதியானவை. ஆண்களே இங்கு ஆதிக்கஞ் செலுத்துகின்றனர். கொழும்பில் குடிபெயர்வு முறைமை பல ஆசிய மாநகரங்களினவற்றை ஒத்தது. குடிபெயர்வோருள் 69 % ஆண்கள் எஞ்சிய 31 % பெண்கள்.

குறைந்த வருமானமும், ஒவ்வொரு வீட்டிலும் உறைவோர் தொகைப் பெருக்கமும், பொது மலசலகூடங்களின் மட்டுப்பட்ட தன்மையும், இவை யொத்த ஏனைய சமூக பொருளாதார பிரச்சினைகளும் பல வழிகளில் குடும்ப வாழ்வை நெருக்கடியாக்குகின்றன. **கற்றலுக்குப் புதிய வழிகளில்** கூம்பஸ் பிரசாதும், அகமதும் குடும்ப வாழ்வுக்கான ஒரு பாட விதானத்தை விதந்துரைத்துள்ளனர். ''குடும்பத்தின் நுகர்வுக்கு உணவை வளர்த்தலும், பதப்படுத்தலும்; வீட்டைத் திருத்தலும், சூழலில் முன்னேற்றங்களும்; உடையும், ஏனைய நுகர் பொருள்களும் தயாரித்தல்; நுண்ணறிவுடன் பொருட் கொள்வனவும், பணத்தின் பயன்பாடும்; காயப்பட்டோரையும், நோய் வாய்ப்பட்டோரையும் பேணல்; கலாச்சார நடவடிக்கைகளும், பொழுதுபோக்கும்; ஊட்டமும், வடிகார் வசதிகளும்; நற் குழந்தை வளர்ப்பு; பொருத்தமான விடத்து குடும்பக் கட்டுப்பாடு; குடும்ப ஆரோக்கியம் என்பனவற்றைப் பாதுகாக்கும் அடிப்படைக் கூறுகள் உள்பட ஒரு குடும்பத்தைக் கொண்டு நடத்தவும், குடும்பத்தாரை இயக்கவும் உதவும் செயல்பாட்டு அறிவும், திறமைகளும்.''

மேற்குறித்தது நியாயமான அளவு தலைப்புக்களை உள்ளடக்கியிருக்கிறது. நகர்ப்புறத்தாரைப் பொறுத்தவரை தனிப்பட்டவர்கட்கிடையிலான தொடர்புகளையும், அரசாங்க அல்லது நலன்புரி சேவைகளைப் பெறக்கூடியவாற்றையும், மாநகரங்களில் (பிள்ளைகளின் வளர்ச்சியை மிகவும் பாதிக்கும்) பல மாடி வீட்டுத் திட்டங்களில் வாழ்க்கையைச் சீரமைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கொள்வதையும், பொது வசதிகளைப் பாதுகாப்பதையும் பாடவிதான அபிவிருத்தியில் மேலதிகமாகச் சேர்க்க வேண்டும். கிராமத்தினதும் நகரத்தினதும் கலாச்சார நியமங்கட்கிடையே பிணைப்பு நிலவ வேண்டும். இல்லையேல் கிராமத்தினின்று நகரத்துக்கு மாற்றத்தால் இடைவெளி அகன்று உள்ளத்தில் பெருஞ் சிக்கலை ஒவ்வொருவரும் எதிர்நோக்க நேரும். நகரவாசிகள் கிராம வாசிகளது வாழ்க்கை முறையில் அனாவசியமான கட்டுப்பாடுகளைத் திணிக்கக்கூடாது.

## அபிவிருத்திக் கல்வி

கல்வியானது அபிவிருத்தியே. ஆனால் கல்வி அனைத்துமே அபிவிருத்தியை முதலாகக் கொண்டில்லை. பாரம்பரியக் கல்வி எமது சமூகத்தின் அபிவிருத்தியை ஊக்குமாறு ஒழுங்குறுத்தப் படாமை உறுதி. எமது மக்கள் தமது சமூகங்களில் முழுமையாகப் பயனுள்ள பிரசைகளாகக் கூடிய வகையில் அபிவிருத்திக் கல்வியை உருவாக்குவதெப்படி என்ற வினா எழுகிறது.

கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களில் பல நாடுகளின் அபிவிருத்தி நிறுவனங்கள் காளான்களைப் போல் வளர்ந்ததைக் கண்டோம். அவை வழங்கிய தலைமையின் மெய் விசுவாசிகளாயும் யாம் இருந்தோம். அவர்களது ஆயவின் அடியாக அமைந்த கோட்பாடுகளையும், அபிவிருத்தித் திட்டங்களையும் எமது சமூகங்களுக்கு ஏற்றவை எனக் கொள்ள முடியுமா?

தேசிய உற்பத்தி தொகையளவால் அதிகரிக்க வேண்டுவதே அபிவிருத்தி என்ற கருதுகோள், ஆசியாவில் ஆரோக்கியமான சமூகங்களுக்காக மூலவளங்களை திருப்திகரமாக பங்கிடுதல் என்பதாக விரைந்து மாறுகிறது. பாரம்பரியக் கல்வி. உழைப்புக்கு முதன்மையளிக்காததால் எமது நோக்கம் கல்வியையும் உழைப்பையும் இணைப்பதாக அமைய வேண்டும். கல்வியானது பொருளாதார உற்பத்தியை இலக்காகக் கொள்ள வேண்டும். எமது கல்விப் படிமுறை முழுதும் அதுமுறைமையானதோ, பாரம்பரியமானதோ, நவீனமானதோ எதுவாயினும் சரியே உழைப்பை அடிப்படையாகக் கொண்டமைய வேண்டும். ஆனால் இக்கூற்று எமது பாரம்பரியக் கல்வியின் எல்லாப் படிமுறைகட்கும் முரண்பட்டதாகும். அதாவது நாம் எமது சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமுகமாக எமது ஐயாயிர வருடக் கல்வி மரபை மாற்றுவதற்கு மீளாய்வு நிகழ்த்த வேண்டும். எமது சமூகத்தில் முற்கால அறிஞர் பிராமணரோ, பிக்குவோ, எவராயினும் உடலுழைப்பில் ஈடுபடாதவர்களாகவே காணப்பட்டனர். இம்மரபை முறிக்க ஆசிய அறிஞர்கள் திட சங்கற்பம் பூண வேண்டும். இதற்குப் பாரம்பரியமான சிந்தனையிலும் செயலிலுமிருந்து விடுபடுதற்கு மனமாற்றமும், சிந்தனா மாற்றமும் தேவை. சமூக மாற்றத்துக்கு இத்தகு மாற்றம் இன்றியமையாதது. உலகின் கிராமவாசிகளுள் 35% ஆசியாவிலேயே வாழ்கின்றமையை யாம் மனங்கொளல் தகும்.

பாரம்பரிய நோக்கில் கல்வி நகர் சார்ந்தது; ஏட்டை நடுவாகக் கொண்டது; தெரிந்தமைக்கப்பட்டது. குடியேற்ற ஆதிக்க காலத்து மேலைப் பாரம்பரியக் கல்வி மேல்வர்க்கத்தாரது நலனையே வலியுறுத்தியது. கல்விப் படிமுறையிலிருந்து சமூகம் வேண்டுமென்றே ஒதுக்கப்பட்டது. அபிவிருத்திக் கல்வியாளர் கல்வியும் சமூகமும், சமூகமும் பாடசாலையும் ஒருங்கிணைய வகை செய்ய வேண்டும். உதாரணமாக சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைப்பாடவிதானத் திட்டத்தில் செய்முறைத் திட்டம் இந்நோக்கத்தைக் கொண்டமைந்த ஒன்றே. பாடசாலைக்கும் சமூகத்துக்கும் நெருங்கிய தொடர்பு தேவை. பாடசாலைகளின் அறிவும், திறமைகளும் சமூக அபிவிருத்திக்கு உதவ வேண்டும். பாடசாலையும் சுயதெளிவு பெறுவதற்கு சமூகத்தின் அறிவைப் பயன்படுத்தி, சமூகத்தின்பால் தனக்குள்ள கடப்பாட்டை நிறைவேற்ற வேண்டும்.

கடந்த மூன்றாண்டுகளாக யாம் வாரத்தில் இரண்டு மூன்று நாட்களில் பாடசாலைப் பாட நேரம் முடிந்தபின் தொழில்நுட்ப தொழிற் பயிற்சிக்காக வரும் பாடசாலை இளைஞருக்கு ஒருவகையான பாரம்பரியமற்ற கல்வியை வழங்கி வந்தோம். இவர்களுக்குப் பட்டங்களேதும் வழங்கப்படவில்லை. இவ்வாண்டு இத்திட்டத்தில் 600 க்கு மேற்பட்ட பாடசாலைகள் கலந்து கொண்டன. இத் திட்டத்துக்கு ஆதரவு வலுக்கிறது. இது வருங்காலத்தில் எல்லாப் பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

எமது புதிய கல்வித் திட்டத்தில் எவ்வகையான அபிவிருத்திக்கு இடமளிப்பது? எமது தேவைகட்காகக் கூடுதலான பாதைகளும், கட்டடங்களும், கடைகளுமா? அன்றிக் கூடுதலான பாடசாலைகளும், திருப்தியான மருத்துவ, உறையுள், வேலை வசதிகளுமா? அபிவிருத்திக் கல்வியின் உண்மையான அர்த்தம் மக்களது சொந்த முன்னேற்றத்துக்காக அவர்களில் விசுவாசமும், நம்பிக்கையும் கொள்வதைக் குறிப்பதாயின், எமது மக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ளக்கூடியவாறு அவர்களிடையே தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புவதும் சாத்தியமே. மனிதத்துவத்திற்கும் உழைப்புக்கும் கண்ணியம் வழங்கி கூட்டுறவாற் தொழில் செய்ய முடிந்தால் யாம் பொருளாதார விருத்தியிற் தன்னிறைவுறலாம்.

அபிவிருத்தியை நாடும் ஒரு சமூகத்தில் ஒரு புதிய மனிதனைப் பற்றி யாம் சிந்திப்போமேயாயின் அவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் கவனத்துடன் நோக்க வேண்டும். அவனது அறிவுப் பின்னணியிலும், வேலைப் பழக்கங்களிலும், சமூக வாழ்விலும், அரசியல் நடவடிக்கைகளிலும் இப்புது மனிதனின் தேவைகளும், அபிலாஷைகளும் எவையாக இருக்கும் என்பதைச் சிந்திக்க நாம் தயாராக உள்ளோமா?

அபிவிருத்திக் கல்வி என்றால் என்ன என்பதைப் பற்றி இதுவரை எவரும் தெளிவுறுத்திக் கூறியதில்லை என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். எனவே இங்கு கூடியுள்ள யாமனைவரும், குறிப்பாக பல்கலைக்கழகத்தார் எமது சமூக அபிவிருத்திக்குப் பயன்தரத்தக்க கல்வி எத்தகையதென்பதை ஆராய்வது எமது கடமையாகும்.

பாரம்பரியப் பாடசாலை தனது பணியிற் தவறிவிட்டது. எமது சமூகங்களின் கல்வி முறைகளின் புதிர்களைத் தீர்க்க பாரம்பரியமற்ற கல்வியின் பண்புகள் தேவை. இப் பாரம்பரியமற்ற கல்வி எப்படி அமைய வேண்டும் என்பது பற்றிக் கொஞ்சகாலத்துக்குப் பெரும் வாதப் பிரதிவாதம் நிகழ வேண்டும். எங்கோ

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# கல்வித் துறையிலே காலனி ஆதிக்க முறையை ஒழுங்கு படுத்துதல்

மூன்றும் உலகிலுள்ள அநேக நாடுகளில், கல்வித்துறையிலே காலனி ஆதிக்க முறையின் பிரச்சினை கவலையை அதிகரித்து வந்துள்ளது. மூன்றும் உலகில் உயர் கல்வி அபிவிருத்தியின் கட்டுக்கோப்புகள் அடக்கியொடுக்கப்படுவதற்கும் வளர்ச்சி பெற இடமளிக்கப்படாததற்கும் (தீவிர நிலைமைகளில் பணக்கார நாடுகளுக்கு வேவு பார்க்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகப் புரட்டப்படுவதற்கும்) வழிசெய்யும் போக்கையுடைய கல்வித்துறை காலனி ஆதிக்கமுறை சாடப்படுவது அதிகரித்து வந்திருக்கிறது. கடந்த சில வருடங்களுக்குள் அநேக நாடுகள் இந்தக் கொள்ளைக்காரப் போக்குகளுக்கெதிராகத் தங்கள் உயர் கல்வி வளங்களைக் கட்டுப்படுத்த முயன்றுள்ளன. இந் நோக்கத்துக்காகத் தாய்லாந்து அரசாங்கம் பிரகடனஞ் செய்துள்ள ஒழுக்க விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் கொண்டகோவையொன்றைக் கீழே தருகிறோம். அடிப்படையில் அது தாய்லாந்தில் நடைபெறும் வெளிநாட்டு ஆராய்ச்சியின் பங்குடன் சம்பந்தமுள்ளது; அத்துடன், கல்வித்துறை காலனி ஆதிக்க முறை இப்பொழுது தீவிரமாக விவாதிக்கப்பட்டுவரும் இலங்கைக்கும் இலட்சிய படிப்பினைகளைக் கொண்டுள்ளது.

பகுதி 1. **குறிக்கோள்கள்.** தாய்லாந்தில் ஆராய்ச்சியை விரிவாக்குவதற்கு ஊக்கமளிப்பதும், இதன் பெறுபேறுகளைத் தாய்லாந்து தனது சமூக, விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதில் பயன்படுத்தலாம் — வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களுடன் ஒத்துழைக்கவும், கருத்துக்களையும் அறிவையும் பரிவர்த்தனை செய்யவும், அனுபவத்தைப் பெறவும் ஆராய்ச்சிப் பயனுறுதியை அதிகரிக்கவும் தாய்லாந்து ஆராய்ச்சியாளர்களுக்குச் சந்தர்ப்பங்களை அளிப்பதும்.

பகுதி 2. **நியதிகள்.** தேசிய அபிவிருத்திக்கு ஆராய்ச்சிப்பணி அத்தியாவசியமாகும். ஆதலால் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு ஊக்கமூட்டுவது தாய்லாந்து அரசாங்கத்தின் ஒரு முக்கிய கொள்கையாகும். தாய்லாந்து ஆராய்ச்சியாளர்களின் உரிமைகளையும் அந்தஸ்தையும் பாதுகாப்பதும் நாட்டின் பாதுகாப்புக்கும் நலன்களுக்கும் உரிய மதிப்பு வைப்பதும் அரசாங்கத்துக்கு அவசியமாகும். எனினும், ஆராய்ச்சி முடிவுகளைப் பயன்படுத்துவதன் வாயிலாகத் தேசிய அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்காக, அரசாங்கம் கீழ்க்கண்ட நியதிகளின்படி தாய்லாந்தில் ஆராய்ச்சி நடத்த வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

(1) ஆராய்ச்சி இருசாராரின் நலனுக்குமாக நடைபெற வேண்டும்; வெளிநாட்டுச்சாராரின் நலனுக்கு மட்டுமென நடைபெறலாகாது.

(2) ஆராய்ச்சி, தாய்லாந்து அரசாங்கத்தின் சம்மதத்தோடு ஓர் அந்நிய அரசாங்கத்தின் அல்லது ஸ்தாபனத்தின் ஆதரவோடு நடைபெற வேண்டும்.

(3) ஆராய்ச்சி, முழு நேர அல்லது பகுதிநேர அடிப்படையில் ஈடுபட்டுள்ள தாய்லாந்து ஆராய்ச்சியாளர்களுடன் கூட்டாக நடத்தப்பட வேண்டும்.

(4) ஆராய்ச்சி முடிவுகள் தாய்லாந்து ஆராய்ச்சியாளர்களின் ஒத்துழைப்போடு ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும். (7), (8) இன் கீழ்ப்பட்ட நிலைமைகளில் தவிர மற்றும்படி அவர்களது பெயர்கள் அறிக்கையில் சேர்க்கப்படவேண்டும்.

(5) ஆராய்ச்சி முடிவுகளுக்குரிய உரிமைகளும் ஆராய்ச்சியின் பதிப்புரிமை (காப்பிரைட்) யும் தேசிய ஆராய்ச்சிச் சபையுடன் முன்னர் செய்யப்பட்ட ஒப்பந்தப்படி இருக்கும்.

(6) ஆராய்ச்சி போகும் வழியில் பரிசீலிக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட மாதிரிகள் தாய்லாந்து அரசாங்கத்தின் உடைமையாக வேண்டும். அதே மாதிரிகளில் அநேக பொருள்களிருப்பின், இத்தகைய பொருள்களின் ஏற்றுமதி சட்ட மூலம் அல்லது ஒழுங்குவிதி மூலம் குறிப்பாகத் தடை செய்யப்பட்டாலன்றி மற்றும்படி தேசிய ஆராய்ச்சிச் சபை ஓர் அந்நிய நாட்டின் உடைமையாக அவை ஏற்றுமதி செய்யப்படுவதற்கு அனுமதிக்கலாம்.

ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக மேலும் பரிசீலிக்கப்படுவதற்காக எந்த மாதிரிப் பொருளாவது வெளிநாட்டுக்கு அனுப்பப்பட வேண்டிய அவசியம் ஏற்படின், குறித்த மாதிரிப் பொருளைத் தாய்லாந்துக்குத் திருப்பி யனுப்புவதற்கான கடமைப்பட்ட ஒப்பந்தமொன்று முன்கூட்டியே தேசிய ஆராய்ச்சிச் சபையுடன் செய்யப்பட்டிருப்பின், தேசிய ஆராய்ச்சிச் சபை ஒரு தற்காலிக ஏற்றுமதி யனுமதிப் பத்திரத்தை வழங்கும்.

(7) ஆராய்ச்சி முற்றுப்பெற்றதும் சாதனங்கள் தாய்லாந்து அரசாங்கத்துக்கு நன்கொடையாக வழங்கப்படுவதாயிருந்தால், சாதனங்கள் நிதிகளின் உருவில் ஓர் அந்நிய அரசாங்கத்தின் அல்லது ஸ்தாபனத்தின் ஆதரவு பெற்ற ஆராய்ச்சி வேலை முற்றாக அந்நிய ஆராய்ச்சியாளர்களாலேயே நடத்தப்படலாம்.

(8) ஓர் ஆராய்ச்சிப் படிப்பில் பங்குபற்ற தாய்லாந்து ஆராய்ச்சியாளர்கள் கிடைக்காதிருப்பின், இத்தகைய ஆராய்ச்சியைத் தாமே நடத்த அந்நிய ஆராய்ச்சியாளர்களைத் தேசிய ஆராய்ச்சிச் சபை அனுமதிக்கலாம்.

(9) ஓர் ஆராய்ச்சிப் படிப்பு, எத்தனை தாய்லாந்து உதவியாளர்களைச் சாத்தியமோ அத்தனை தாய்லாந்து உதவியாளர்களை வேலைக்கமர்த்த வேண்டும்.

பகுதி 3. **நடைமுறை.** தாய்லாந்தில் ஆராய்ச்சி நடத்த விரும்பும் அந்நிய ஆராய்ச்சியாளர்கள் கீழ்க்கண்ட விதிகளை அனுசரித்து நடக்க வேண்டும்:

(1) ஆராய்ச்சி ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படும் திகதிக்குக் குறைந்தது 90 நாட்களுக்கு முன்பு நியம படிவத்தில் ஒரு விண்ணப்பத்தைத் தேசிய ஆராய்ச்சிச் சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(2) அந்த விண்ணப்பத்துடன் கால எல்லையையும் இடத்தையும் தாய்லாந்திலுள்ள ஒரு முகவர் நிறுவனத்தையும் அல்லது ஸ்தாபனத்தையும், சாத்தியமாயின், உத்தேச ஆராய்ச்சியில் பங்குபற்றக்கூடிய நபர்களின் பெயர்களையும் குறிப்பிடும் ஒரு வேலைத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(3) சம்பளம், கூலி, பிரயாணச் செலவுகள் போன்றன ஏதாவதிருப்பின், நாள்தோறும் தாய்லாந்துக் கூட்டு ஆராய்ச்சியாளர்களுக்கு அல்லது தாய்லாந்து உதவியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய செலவினத்தின் மதிப்பீடொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(4) தேசிய ஆராய்ச்சிச் சபையிடமிருந்து அனுமதியைப் பெற்

றதும், தாய்லாந்துக்குள் பிரவேசிப்பதற்குரிய உத்தரவுப் பத்திரத்துக்கு (விஸா) விண்ணப்பிப்பதில் இந்த எழுத்து மூலமான அனுமதியைக் காட்ட வேண்டும்.

(5) தாய்லாந்துக்குள் பிரவேசித்ததும், பின்வரும் காரியங்களைச் செய்வதற்காகத் தேசிய ஆராய்ச்சிச் சபையின் முன் உடனடியாக நேரில் தோற்றவேண்டும்:

(அ) தாய்லாந்தில் ஆராய்ச்சி நடத்துவதற்காக ஆரம்ப முறைப்படுத்தும் கட்டணமாக 200 பட் (ஏறக்குறைய 10 டாலர்) செலுத்த வேண்டும்; அத்துடன், குறித்த ஆராய்ச்சிக் காலத்தின் ஒவ்வொரு நீடிப்புக்கும் முறைப்படுத்தும் கட்டணமாக 100 பட் (ஏறக்குறைய 5 டாலர்) செலுத்த வேண்டும்.

(ஆ) இது சம்பந்தமான (8) ஆவது விதியின் கீழ் செய்யத் தவறுவதற் கெதிராக வைப்புப் பணமாக 4000 பட் (ஏறக்குறைய 200 டாலர்) கட்ட வேண்டும்.

(இ) ஓர் அடையாள அட்டை பெற வேண்டும் (இத்தகைய நோக்கத்துக்காக 3 செ மீ. 4 செ. மீ. அளவில் மூன்று புகைப்படங்களைக் கொண்டுவர வேண்டும்.)

(ஈ) தேவையான காலத்துக்கு ஆனால் ஒவ்வொரு முறையும் ஓராண்டுக்கு மேற்படாத காலத்துக்குத் தாய்லாந்தில் தங்கியிருப்பதற்காக அனுமதி கோரிக் குடிவரவுக் காரியாலயத்துக்கு விலாசமிடப்பட்ட கடிதமொன்றைப் பெறவேண்டும்.

(6) ஆராய்ச்சி நடைபெறும் போது ஒவ்வோர் ஆறு மாத காலத்துக்கும் ஒரு முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

(7) ஆராய்ச்சி வேலை முற்றுப் பெற்றதும் தாய்லாந்திலிருந்து புறப்படுவதற்கு முன்பு, ஆராய்ச்சியின் பெறுபேறுகளை அல்லது ஆராய்ச்சி வாயிலாகப் பெறப்பட்ட அறிவைச் சுருக்கமாகக் கூறும் அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதோடு, பரிசீலனை செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட மாதிரிப் பொருள்களையும் தேசிய ஆராய்ச்சிச் சபைக்குக் கொடுத்து விடவேண்டும். அதே மாதிரியில் பல பொருள்கள் இருப்பின், தேசிய ஆராய்ச்சிச் சபையின் முன் அனுமதியுடன் சில குறிப்பிட்ட மாதிரிப் பொருள்கள் வெளிநாட்டுக்கு அனுப்பப்படலாம்.

(8) ஆராய்ச்சி பற்றிய முழு அறிக்கையொன்று ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும். குறித்த அறிக்கையின் மூன்று பிரதிகள், தாய்லாந்திலிருந்து புறப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டுக் காலத்துக்குள் தேசிய ஆராய்ச்சிச் சபையின் காரியாலயத்துக்கு இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டும். ஆராய்ச்சியாளர்கள் குறித்த திகதிக்குள் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில், தேசிய ஆராய்ச்சிச் சபையின் காரியாலயம் ஓராண்டுக்கு மேற்படாத காலத்துக்கு ஒப்படைப்புத் திகதியை நீடிக்கலாம்.

மேற்சொன்ன விதிகளுக்கிணங்க நடக்கத் தவறும் பட்சத்தில், 5 (ஆ) விதியின் கீழ் கட்டப்பட்ட வைப்புப் பணத்தைப் பறிமுதல் செய்யத் தேசிய ஆராய்ச்சிச் சபைக்கு உரிமையுண்டு.

(9) அறிக்கையின் இறுதித் தயாரிப்பில் பங்குபற்றுவதற்காக வெளிநாட்டுக்குச் செல்ல, தாய்லாந்து ஒத்துழைப்புக்கு உரிமையிருக்க வேண்டும். இவ்விதம் ஏற்படும் செலவுகளை எச்சாரார் ஏற்க வேண்டுமென்பதை முன்னேற்பாடு நிர்ணயிக்க வேண்டும். தாய்லாந்து அரசாங்கம் இத்தகைய நிலைமைகளில் அவசியமெனக் கருதினால் செலவுகளை ஏற்கலாம்.

பகுதி 4. ஒரு சர்வதேச முகவர் நிறுவனத்தின் நேரடியான ஊழியராயிருக்கும் அல்லது அந் நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்திருக்கும் அல்லது ஓர் உத்தியோக பூர்வமான தூதுக் குழுவைச் சேர்ந்திருக்கும் எந்த அந்நிய ஆராய்ச்சியாளருக்கும் இந்த ஒழுங்குவிதி பொருந்தாது. எனினும், இத்தகைய ஆராய்ச்சியாளர்களும் ஆராய்ச்சி நடத்துவதற்குத் தேசிய ஆராய்ச்சிச் சபையின் படிவத்தில் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

பகுதி 5. இந்த ஒழுங்குவிதி 1974 ஜனவரியிலிருந்து அமுலாகும்.

**கல்வியின் பாரம்பரியமற்ற . . . .**

(29ம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தியுற்ற முறைகளை அப்படியே தழுவ நாம் அவசரப்படலாகாது. சமூகங்கள் தமது சொந்தத் தேவைகட்கு அமைய அவற்றை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். நாம் இப்போது ஒரு வரையறுத்த விஞ்ஞானத்தையோ கலையையோ வளர்ப்பதில் ஈடுபடவில்லை. மக்களனைவருக்கும் பொதுவானதும், அதே சமயம் வயதாலும், வர்க்கத்தாலும், இடத்தாலும், வேறு சமூக நியதிகளாலும் வரையறுக்கப்படாத கல்வி முறையையே கருதுகின்றோம். உதாரணமாக விரிவுரை — கருத்தரங்கு — கட்டுரைப் போதனா முறையாற் பயனில்லை எனக் கண்டால் கல்வி கலந்துரையாடல், விவாதம், பொதுசன தொடர்பு சாதனம், முறைமையற்ற கல்விப் போதனா முறைகளைக் கைக்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

பாடசாலைகளிற் பாட விதான அபிவிருத்திப் பணி ஒரு புதிய திருப்பங் கண்டுள்ளது. ஸ்ரீலங்கா இதற்குதாரணமாகும். புதிய பாட விதானங்களின் உள்ளடக்கத்தையும், நோக்கங்களையும், படிமுறைகளையும் யாம் பொதுவாக உணர்ந்துள்ளோம். பல்கலைக் கழகத்தில் வழங்கும் சிறப்புக் கல்வி பொதுசனக் கல்விக்கு உகந்ததன்று என்பதை யாம் உணர்ந்தோமா? பல்கலைக் கழகங்களில் பயனுள்ளதும் பருமாற்றத்துக்கு உரியதுமான கல்வியை வழங்குமுகமான பொதுசனக் கல்வி இயக்கத்தில் பழைய போதனா முறைகளே இரவல் பெறப்பட்டுள்ளன என்பதை உணர்ந்தோமா?

உங்களது கவனத்துக்காக நான் எழுப்பிய பிரச்சினைகளைச் சிறப்புற எடுத்து விளக்கி விட்டேன் என நான் கருதவில்லை. எனினும் ஆசிய அறிஞர்கள் பொதுமக்களில் அக்கறையின்றி ஒதுங்காமல், அனுதாபத்துடனும், திட சங்கற்பத்துடனும் இச் சவாலை எதிர்கொள்வரென்று உறுதியாக நம்புகிறேன். கல்வியினூடாக எமது சமூகங்களில் நீங்களும், நானும் உருவாக்க விழையும் எதிர்கால உலகுக்கு ஆசிய சமூகங்களின் மனிதத்துவம் பாரம்பரியம் நிச்சயம் வழிகாட்டக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென் ஆசிய வீடமைப்பு அமைச்சர்களின் மகாநாடு 1975

(19ம் பக்கத் தொடர்ச்சி)

சாதனைகளையும், நடைமுறைகளையும் மீளாய்வு செய்தலும் சேர்ந்து வீடமைப்புக் கொள்கையில் ஓர் இன்றியமையாப் பங்கினை வகிக்க வேண்டும்.

* வீடமைப்புப் பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்ப்பதில் அரசின் முயற்சி மட்டும் போதாதாகலின், தனியார்களையும் இவ்விடயத்தில் ஊக்குவித்து, அவர்களது முயற்சிகளை ஒருங்கிணைத்து, அதன் மூலம் ஒவ்வொரு நாட்டினதும் சமூக இலக்குகளில் உச்சப் பயன்பெற வேண்டும்.
* பிரதேச நாடுகள் யாவும் வீடமைப்பு நட்வடிக்கையைத் துரிதப்படுத்துமுகமாய்த் தாம் இதுவரை பயன்படுத்தா மனித வளங்களையும், கிடைக்கக்கூடிய இயற்கை வளங்களையும் நன்கு பயன்படுத்த வேண்டும்.
* நெடுங்கால அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கு முகமாகப் பிரதேச நாடுகளின் நகர்ப்புறத்தும், பிரதேசத்தும் திட்டமிடல் செறிவாக்கப்படவும், இதனைச் செயல்படுத்தும் பொருட்டுத் தேவையான நிபுணர்களைப் பயிற்றவும் வேண்டும்.
* வீடமைப்புக்காக நகர்ப்புறத்துக் காணிகள் அரிதாகலின் ஒவ்வொரு நாட்டுக்கும் ஏற்ற ஒரு நகர்ப்புறக் காணிக் கொள்கை விரிவாக வகுக்கப் பெற வேண்டும்.
* தனியார்கள் வீடு கட்டிக்கொள்ள உதவலும், கூட்டுறவால் வீடமைத்தலும் ஆக இரண்டுமே முக்கியமாதலின் இவற்றை ஊக்குவிக்க வேண்டும்.
* வீடமைப்புக்கான நிதி வழங்கவும், திட்ட மிடவும், அபிவிருத்திக்கும், நிருவாகத்துக்கும் ஒரு நிறுவனக் கட்டமைப்பு நிறுவப் பெற வேண்டும். தேசீய வீடமைப்புக் கொள்கைக்ள் சிறப்பாகச் செயல்படக் கூடிய வகையில் இது செயலூக்கம் பெற வேண்டும்.
* சுதேசியக் கட்டடப் பொருள்களைப் பயன் படுத்துவதையும், உற்பத்தி செய்வதையும் ஊக்க வேண்டும்.
* பொருள்கள், நுட்பங்கள், முறைகள், சமூக - பொருளாதார ஆய்வு உள்பட வீடமைப்புக்கான ஆராய்ச்சியின் விருத்திக்கு ஒவ்வொரு நாடும் வீடமைப்புக்கான முழு முதலீட்டிலும் குறிப்பிடத்தக்க அளவு தொகையை ஒதுக்க வேண்டும்.
* வீடமைப்புப் பற்றித் தாம் பெற்ற எல்லா அனுபவங்களையும், தகவல்களையும் பிரதேச நாடுகள் ஒருவருக்கொருவர் தெரிவித்து உதவவும், இயன்ற அளவுக்குக் கூட்டாகப் பரிசோதனைகளையும், ஆய்வுகளையும் மேற்கொள்ளவும் வேண்டும்.
* தற்போதைய சூழலில் வீடமைப்பை ஒழுங்குறுத்தச் சட்டங்களும், பொறிமுறைகளும் அவசியம். எனவே தற்போது நிலவும் சமூகப் பிரச்சினைகளை அகற்றவும், வீடமைப்புக்களைப் பேணவும், முன்னேற்றவும், வீடமைப்பில் முதலீட்டை ஊக்கவும் ஏற்ற வகையில் அவற்றை வகுக்க வேண்டும்.
* பிரதேசக் கூட்டுறவை வளர்க்குமுகமாக ஆட் பயிற்சிக்கும், தகவல் வெளிப்பாட்டுக்கும் கிடைக்கக்கூடிய வசதிகளை இனங்காண நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், ஆட்களைப் பயிற்றவும், பரிமாறவும் ஒரு திட்டத்தை வகுக்கவும் வேண்டும்.
* பிரதேசத்தில் வீடமைப்பின் விருத்தியை ஊக்குவிக்கவும், அதற்குதவவும் பிரதேச நாடுகள் எல்லா மட்டங்களிலும் தகவல்களைப் பரிமாறவும், சுற்றுலாக்களுக்கும், வழமையான கூட்டங்களுக்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

---

## வீடமைப்பு மூலம் ஒருமைப்பாடு

(16ம் பக்கத் தொடர்ச்சி)

தாயிருக்க வேண்டும் சில சமயங்களில் சிலர் இதனை அனுபவம் மூலம் உணர்ந்து கொள்வர். பொது சந்திப்பு அறைகளும், விளையாட்டுக் கழகங்களும் ஏற்படுததப்பட்டாலும் கூட தமது அன்றாட வழக்கங்களை மாற்றி இதன் நடவடிக்கைகளில் பங்கு கொள்வது, அதிலும் குறிப்பாக மேற்படி பணி தனக்கு திருப்தி தராதபட்சத்தில், மிகவும் கடினமானதாகும். தொடர்மாடி வீட்டமைப்புகளில் வாழ்வோர் அனைவரும் ஒரே வகுப்பினராயில்லாவிடின் அவர்களது பிள்ளைகளும் ஒன்று சேர்ந்து விளையாடும் இடமாக பொதுத்தில் அமையாது. தொடர்மாடி வீட்டமைப்புத் திட்டங்களில் பல அந்தஸ்து சார்ந்த சமூக மக்கள் கலந்து படுவது பல நாடுகளில் வெற்றியாயமையவில்லை. இதற்கு மாறாக பாகுபாட்டுச் சிந்தனை முறைகள் இல்லாத இடங்களில் தமது வீடுகளுக்குப் போகும் ஒழுங்கைகளிலும், மரநிழல்களிலும், குழாயடியிலும் எவ்வித முயற்சிமியுன்றியே முன்னேற்பாடு செய்யப்படாத சந்திப்புகள் நடைபெறுகின்றன.

ஒழுங்கு செய்யப்பட்ட சமூக வீடமைப்புத் திட்டங்களில் அண்மையில் பரீட்சித்துப் பார்க்கப் பட்ட உதவி வழங்கப்பட்ட சுய உதவி வீடமைப்புத் திட்டங்கள் அவற்றில் வாழ்வோர் மத்தியில் ஒரு ஒத்துழைப்பு உணர்வினை ஏற்படுத்தியுள்ளது இத் திட்டத்தின் கீழ் வீடு கட்டிக் கொள்வதற்கு தேவையான சகல உபகரணங்களும் கட்டிடப் பொருட்களும் வீடமைப்பு நிர்மாண அமைச்சினால் வழங்கப்படுகின்றன இவற்றில் வாழ்வதற்காகத் தெரிவு செய்யப்படுவோர் தாங்களாகவே தங்களது சுய முயற்சியையும் சிரமத்தையும் கொண்டு இவ் வீடுகளை அமைத்துக் கொள்ள எதிர்பார்க்கப் படுகின்றனர் இதற்குத் தகுதியானோர் மாதாந்தம் ஒழுங்காக 150 ரூபாவுக்கும் 300 ரூபாவுக்குமிடையில் வருமானம் பெறுவோராவர். கட்டிட வேலைகளை ஒழுங்கு படுத்தும் பொறுப்பு மக்களிடையே பயிற்சியையும், மனித ஒருமைப்பாட்டு தொடர்புகளில் தடையையும் கொண்டு வருதலால் சமூக உணர்வும் மேலும் விருத்தியுறுவதுடன் முறைசாரா தலைமைத்துவமும் தானாகவே ஏற்படுத்தப்படுகிறது.

இறுதியான வீட்டுக்கூறு கட்டி முடிக்கப்பட்டதுடன் அவர்கள் மத்தியில் ஒரு சமூக சாதனை நிலை நாட்டிய உணர்வு ஏற்படுகிறது. வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இறுதியில் சீட்டிழுப்பு நடைபெற்றதும் தமக்குக் கிடைக்கும் வீடுகள் குறித்து அது நல்லது, இது கூடாதது என யாருமே மனத்தாங்கல் கொள்வதுமில்லை. வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் மேற்படி குழுக்களின் முறைசாரா தலைவர்கள் தமது நல்ல பணிகளை, சேமநல சங்கங்களின் மூலம் தொடர்ந்து செய்வர். எனவே சமூக நடவடிக்கைகளும் சமூக உணர்வும் தொடர்ந்து பேணப்படுகின்றன. மேற்படி சேமநல சங்கங்களின் மூலம், பாலர் பாடசாலைகள், சௌக்கிய திட்டங்கள் போன்ற சேம நலத் திட்டங்களை வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமது பெற்றோர்களின் மேற்படி நடவடிக்கைகளை அவர்களின் பிள்ளைகளும் தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் மேற்படி சமூக கலப்பினை நாம் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம். மேற்படி வீடுகளை அவர்கள் தமக்குச் சொந்தமாக்கும் வரைபணம் செலுத்தி முடிவதற்கு 20 வருடங்கள் வரை பிடிக்குமாதலால் அங்கு வசிப்போர் தமது சமூக பிணைப்புகளை, ஒருவருக்கொருவர் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும், சுகயீனம் மரணம் போன்ற நிகழ்வுகளின்போது ஒருவருக்கொருவர் உதவி பெறுவதன் மூலமும் திருமணம், பிறப்பு, விருந்துகள் அன்னதானங்கள், பிரித் போன்ற வைபவங்களில் ஒன்று கூடலின் மூலமும் மேலும் பலப்படுத்திக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**9.** நாகரீக அந்தஸ்து சின்னங்களான கம்பியூட்டர் இயந்திரங்பள் போன்றவற்றில் பணத்தை வீணுக்குவதற்காக பல ஏழை நாடுகளும் கண்டிக்கப்படத்தான் வேண்டும். இது முன்னேற்றம் போல தோற்றம் தரினும் உண்மையில் பின்னடையச் செய்கிறது.



**10.** ஏழை நாடுகளில் தற்போது பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளில் நாலில் மூன்று பங்கினர் தமது சீவனோபாயத்தை நிலத்தில் வேலை செய்தே பெற வேண்டும். இருந்தும் அவர்களின் பாடத் திட்டம் தொடர்பற்றதாயும் உற்பத்தியில் அவர்களுக்கு உதவாததாயும் உள்ளது.



**11**. சிலவேலை இதற்கு முக்கிய காரணமானது செல்வத்தைப் பகிந்து கொள்ளாமையாகும். பெருங்காணி, கைத்தொழில் உரித்தாளர் எந்திர உபகரணங்கள் வாங்கக் கூடிய பெருஞ் செல்வந்தர் சிலரே வறிய உலகில் உள்ளார். பெரும்பாலும் அவர்கள் மிகக்குறைவாகவே மக்களை வேலைக்கு அமர்த்துக்கின்றனர். மறுபுறத்தில் சிறிய ஒரு காணித்துண்டு உள்ள அல்லது காணிகள் எதுவுமே இல்லாத பல இலட்சக் கணக்கான விவசாயிகள் இருக்கின்றனர். போதிய வாழ்க்கை நடத்துவதந்கான காலத்தைக் செலவழித்து வேலை செய்யக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு இல்லை.



**12.** நகரில் கிடைக்கக்கூடிய ஒவ்வொரு தொழிலுக்கும் கிராமப் புறங்களிலிருந்து மூவர் வீதம் புறப்படுகின்றனர். எனவே குடும்பங்கள் பிரிந்துபட்டு நகரின் கஷ்டங்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் பளுவைச் சுமத்துகிறது.



**13.** இன்று தொழில் பெற முடியாதுள்ளோர் பெரும்பாலும் இளைஞரும் படித்தோருமே. மொரிஷஸில் பாடசாலை விட்டு நீங்கும் ஐவரில் ஒருவருக்கே வேலை கிடைக்கிறது. பெரும்பாலும் இன்று வறிய நாடுகளின் பாடசாலை விட்டு நீங்கும் அரைப் பகுதியினர் தொழிலின்றி இருக்கின்றனர்.



**14.** வேலையில்லாதோர் பெரும்பாலும் இளைஞராயும் படித்தவர்களாயும் இருக்கும் பட்சத்தில், நகரின் வீதிகளில் அலைந்து திரியும் அவர்கள் மூன்றும் உலக நகரங்களில் பலாத்கார மாற்றங்களைத் தோற்றுவிப்பது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு



விலை 2/-

பொருளியல் நோக்கில் இடம் பெற்றுள்ளவற்றை பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு.

தெஹிவளை, துட்டுகமுனு தெரு, 137 இல் உள்ள, திஸர அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org